ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1694/27 - 2011 පෙබරවාරි 25 වැනි සිකුරාදා - 2011.02.25

*1694/27 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமத்திய மாகாண மாகாண சபை

*2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவு சங்க நிதியச் சட்டம்*

*வடமத்திய மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நிதியச் சட்டம். வட மத்திய மாகாண கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்ற நடவடிக்கைகளைத் தயாரிப்பதற்காகவும் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கவும் அதனை பரிபாலிக்கவும் உரிய சட்டங்களை உருவாக்கவும் அதோடு தொடர்புடைய நடவடிக்கைகளுக்கான சட்டம் இச்சட்டம் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்துக்கும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க திருத்தி அமைத்தல் சட்டங்களுக்கு அனுகூலமற்றதாகும் .*

*வட மத்திய மாகாண மாகாண சபையால் பின்வருமாறு ஆக்கப்பட்டுள்ளது:-*

*சிறு நாமமும் அது நடைமுறைப்படுத்தும் திகதியும்.*

*இந்த பிரமாணம் வட மத்திய மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவு பிரமாணமென அறிமுகப்படுத்தப்படுகிறது. இது வட மத்திய மாகாணத்தின் ஆளுநர் நாயகத்தினால் அனுமதித்த திகதியிலிருந்து செயற்படும்.*

### I ஆம் அத்தியாயம்

### கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தை உருவாக்குவதும் அதன் காரியங்களும்

*வடமத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தை தாபித்தல். அதன் நோக்கங்களும் பணிகளும்.*

*2. 1 (1) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு 13 ஆவது திருத்தத்தின் 9 ஆவது அட்டவணையின் முதலாவது பட்டியலில் (மாகாண சபை பட்டியலில் 15 ஆம் இலக்கத்தின் கீழ் பரவலாக்கப்பட்டுள்ளது.) கூட்டுறவு விடயத்தை செயற்படுத்துவதற்காக வட மத்திய மாகாணத்தின் உள்ளே கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் என்ற பெயரில் திணைக்களம் ஒன்று இதனால் அமைக்கப்படும்.*

*(2) கூட்டுறவின் நோக்கம் கூட்டுறவுக் கோட்பாடுகள் கூட்டுறவு கொள்கைகளுக்கும் கூட்டுறவு நற் கருமங்களுக்கு பொருத்தமானதாக கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்களினதும் சேவையாட்களினதும் அறிவை பாவிக்கவும் நம்பிக்கையை வளர்க்கவும்.*

*(3) கூட்டுறவு சங்கங்களை அமைக்கவும் பதிவு செய்யவும் பரவலாக்கவும், பலப்படுத்தவும் மாகாண மக்களுக்கு நல் வழிகாட்டலுக்கும் உதவுதல்.*

*(4) மாகாணத்தின் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளில் கூட்டுறவு முறையை பாராட்டும் வகையில் கொண்டு நடத்தல்.*

(5) (அ) கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்தல் ;

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்தல் ;

(இ) கூட்டுறவுச் சங்கங்களுக்காக அறக்கொடை ஒதுக்கும் சந்தர்ப்பத்தில் நடுவராகச் செயல்படுதல் ;

(ஈ) கூட்டுறவு விருத்திக்காக கல்வி பயிற்சி மூலம் அபிவிருத்தி செய்தல் ;

(உ) முகாமைத்துவ ஆலோசனை சேவை அளித்தல், கூட்டுறவுதுறைக்கு பொருத்தமான ஆராய்ச்சிகளை நடத்தல் ;

(ஊ) உலகத்தினதும் தேசத்தினதும் கூட்டுறவு அமைப்புகளுக்கு இடையே இணைப்பாளராக செயல்படுதல் ;

(எ) கூட்டுறவு திட்டங்களுக்கு இடையே ஏற்படும் பிணக்குகளை தீர்த்தல் ;

(ஏ) தீர்மானங்கள் அல்லது கட்டளைகளை நீதிமன்றத்தால் அதிகாரமுடையதாக்குதல், நீதிமன்றத்தில் வழக்கு தொடர்தல், நீதிமன்ற அலுவல்கள் தொடர்பாக கருமங்களை பொறுப்பேற்றல் ;

(ஐ) கூட்டுறவு சங்கங்களின் அலுவல்கள் தொடர்பாக கணக்கு வரவு செலவு கணக்காய்வு பரிசீலனை செய்தல். இது பொதுவாக அல்லது விசேடமாக பரிசீலனை செய்தல் ;

(ஒ) செயற்படாத கூட்டுறவு சங்கங்களின் பதிவை இரத்து செய்தல் அதனை கலைத்துவிடல் அல்லது ஏலத்தில் போடுவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(ஓ) திணைக்களத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செலவுக்குத் தேவையான மேற்கூறிய கருமங்களுக்கு இயையவே அல்லது வேறு சகல செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல், நோக்கங்களும் கருமங்களுமாகும்.

*பதிவாளர் பதில் சிரேஷ்ட பதி வாளர்களை நிய மித்தலும் கூட் டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உதவுவதற்காக நிய மிக்கும் ஆட்களி னது அதிகாரங் கள்.*

2. 2. (1) சந்தர்ப்பத்திற்கு பொருந்தும் வகையில் வட மத்திய ஆளுநர் பதிவாளர் அவர்களினால் இங்கு இதனகத்தின் பதிவாளர் எனக் குறிப்பிடப்படும் உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளர் என்னும் ஒருவரை வட மத்திய மாகாணத்துக்காக நியமிக்கப்படுவார்.

(2) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் முக்கியஸ்தராக ஆணையாளர் பதிவாளர் இருப்பார்.

(3) இச்சட்டத்தின் செயற்பாட்டுக்கவசியமான பதில் பதிவாளர்கள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் ஆகியோர் குறிப்பிட்ட தொகையினரை நியமித்துக் கொள்ள முடியும்.

(4) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக தற்போது செயலாற்ற நியமிக்கப்பட்டுள்ள நபருக்கு இந்நியதிச் சட்டத்தின் அல்லது இந் நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளை கவனத்தில் கொண்டு கூட்டுறவு பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை வைத்து அவரால் அவ்வதிகாரங்களை செயல்படுத்த முடியும்.

(5) அமைச்சர் அவர்களால் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது தயாரிக்கப்பட்டதாக கருதப்படும் ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவாளரின் அதிகாரங்கள் யாவற்றையும் அல்லது அவற்றின் ஏதொரு அதிகாரத்தை ஏதொரு பதில் பதிவாளருக்கு சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு அல்லது உதவி பதிவாளருக்கு பொறுப்பளிக்க முடியும்.

## II ஆம் அத்தியாயம்

### கூட்டுறவுச் சங்கம் ஒழுங்கமைத்தலும் பதிவு செய்தலும்

*பதிவு செய்யக் கூடிய சங்கம்.*

3. (1) இந் நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்டதாக கருதப்படும் ஒழுங்குவிதிகள் சட்ட திட்டங்களுக்கு கீழ்பட்டு கீழ் குறிப்பிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்ய முடியும்.

(2) மேலே 1 ஆம் இலக்க, பந்தியின்கீழ் பதிவு செய்யக் கூடிய சங்கங்களின் வரையறுக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்படாத அல்லது பொறுப்பு உடையதாக பதிவு செய்தல், தயாரிக்கப்பட்ட அல்லது தயாரித்துக் கொள்ளக் கூடிய ஒழுங்கு விதிகளுக்கு அனுகூலமாக இருத்தல் வேண்டும்.

4. (1) கூட்டுறவுச் சங்கம் ஒன்றாக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் சகல சங்கங்களும் அதன் அங்கத்தவர்கள் வேண்டிக் கொண்ட தினத்திலிருந்து தொடர்ந்து ஆறு மாதத்திற்கு நிறை கூட்டுறவுச் செயற்பாட்டு காலகட்டமாக வேண்டும். தயாரிக்கப்பட்டதும் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவாளரின் கருத்திற்கேற்ப பதிவு செய்ய முடியும். காலத்தை நீடிக்க முடியும். நிறைவு பெற்ற கூட்டுறவுச் சங்க மாக ஏற்றுக் கொள்ளலும் பதிவு செய்வதற்கான நிபந்தனைகளும்.

(2) அங்கத்தவர்களை மட்டும் நிறைவு பெற்ற சந்தர்ப்பத்தில் அங்கத்துவ தகமைக்கு 18 வயதுக்கும் மேற்பட்டதும் சங்க செயற்பாட்டு பிரதேசத்துக்குள் நிரந்தர வதிமையாளராகவும் அல்லது சேவை செய்பவராகவும் அல்லது அசைவற்ற ஆதனமுடையவராகவும் சங்கத்தினால் நிறைவேற்றப்படும் சேவையை பெறக்கூடியவராகவும் அங்கத்தவர்கள் பதினைந்து பேர்களுக்கு குறையாதும் இருத்தல் வேண்டும். நியதிச் சட்டங்களுக்கு கீழ் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்க கூடிய ஒழுங்குவிதிகளுக்கு கீழ் தகமைபெறாத எந்தவொரு சங்கமும் இந்நியதிச் சட்டங்களுக்கு கீழ் பதிவு செய்தலாகாது.

(3) இச்சரத்தின் செயற்பாட்டுக்காக மேல் காட்டப்பட்ட நடவடிக்கைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு திருப்தி கொள்ள முடியாத ஏதோ ஒரு பிரச்சினை தொடர்பாகவும் தீர்மானம் எடுக்க முடியும். அத் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருத்தல் வேண்டும்.

அப்படியானாலும் இவ் வயதெல்லை அல்லது வேறு தகமைகள் பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருத்தமாகாது.

(4) மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு திருப்திப்படக்கூடியதாக ஏதும் பிரச்சினை எழும்போது பாதிவாளரினால் பிரச்சினை சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதோடு அத்தீர்மானம் இறுதி தீர்மானமாக இருக்க வேண்டும்.

(5) ஏதாவது கூட்டுறவு சங்கத்தை அல்லது சபையை பதிவு செய்ய பதிவாளரினால் மறுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தமைக்கு எதிராக எதிர்மனுவை இந் நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டதாக கருதப்படும் ஒழுங்கவிதிகளுக்கு அமைய அமைச்சர் அவர்களிடம் தாக்கல் செய்ய முடியும்.

(6) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்படாத பொறுப்புள்ள எல்லா கூட்டுறவு சங்கங்களும் பெயரில் (வரையறுக்கப்பட்ட /வரையறுக்கப்படாத) என்னும் பதம் முதல் பதமாக இருத்தல் வேண்டும். அதே போல் அதன் தமிழ் அல்லது ஆங்கிலச் சொல் அப்பெயரில் பகுதியாக இருத்தல் வேண்டும்.

(7) பதிவு செய்வதற்காக இச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் ஒழுங்குவிதிகளின்படி நியமப்படுத்து விதத்தில் விண்ணப்பப்பத்திரம் சங்கத்தினால் பதிவாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

5. (1) பதிவு செய்வதற்காக இச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட, தயாரிக்கப்படும் ஒழுங்குவிதிகளின்படி உரிய முறையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் பதிவாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தல்.

6. ஒரு சங்கத்தினால் இச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் சரத்துக்களுக்கேற்ப செயல்பட்டுள்ளதாக அச்சங்கம் ஈடுபடும் செயற்பாடுகள் பொருளாதார ரீதியாக போசனம் பெற்றதாகவும் சங்கத்தின் மாற்று சட்டங்கள் இந்நியதிச் சட்டங்களுக்கு அல்லது ஒழுங்குவிதிகளுக்கு சிக்கல் இல்லாத வகையில் இருப்பதாக பதிவாளர் திருப்திபடுவராயின் நான் தகுதியானது என கருதினால் அவர் அச்சங்கத்தின் மாற்றுச் சட்டத்தை பதிவு செய்யலாம். ஏதோ ஒரு சங்கத்தை பதிவு செய்வதற்கு பதிவாளர் மறுத்தால் அதற்கு எதிராக எதிர் மனுவை இதற்காக தயாரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்படி அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கலாம். பதிவு செய்தல்.

7. (1) பதிவாளரினால் கையொப்பமிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் அச்சான்றிதழில் குறிப்பிட்ட சங்கத்தின் பதிவு இரத்துச் செய்யப்பட்டதாக உறுதி செய்தலன்றி அச்சங்கம் உரியமுறையில் பதிவு செய்யப்பட்டதற்கு இறுதி சாட்சியாக இருக்கும். பதிவு செய்வதற்கான சாட்சி.

(2) சங்கமொன்று பதிவு செய்தவுடன் ஒழுங்குவிதிகளின்படி பதிவாளரினால் அச்சங்கத்துக்கு பதிவு செய்யப்பட்டதாக சான்றிதழ் ஒன்று விநியோகித்தல் வேண்டும்.

(3) மாற்றுச் சட்டத்தின் ஏதும் திருத்தங்கள் ஒன்று இந்நியதிச் சட்டத்தில் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அல்லது தயாரிக்கப்பட்டுள்ளதாக கருதும் ஒழுங்குவிதிகளுக்கு சிக்கல் உண்டாவதென பதிவாளர் திருப்தி கொள்பவராயின் உரிய திருத்தம் பொருத்தமென பதிவாளர் ஏற்றுக்கொள்வாராயின் அவர் அத்திருத்தத்தை பதிவாக்கலாம். ஏதும் மாற்று சட்ட திருத்தம் ஒன்றை பதிவு செய்ய பதிவாளர் மறுத்தால் அதற்கெதிராக எதிர் மனுவொன்றை இந்நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி அமைச்சர் அவர்களிம் சமர்ப்பிக்க முடியும்.

பதிவு செய்யபட்ட ஒரு சங்கத்தின் மாற்றுச் சட்டத்தை திருத்தி அமைத் தல்.

8. ஏதும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்துக்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட, தயாரிக்கப்படும் ஒழுங்குவிதிகளின் நடவடிக்கைகளின்படி சங்கம் தான் முன் வைக்கும் மாற்று சட்டத்தை திருத்தியமைக்க முடியும்.

பதிவு செய்யபட்ட சங்கங்களின் சொத்துக்களை யும் வரவுகளையும் ஒன்றிணைத்தல், பங்கீடு செய்தல், ஒப்படைத்தல்.

9. (1) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தினால் பதிவாளரின் பூரண அதிகாரத்துடன் அச்சங்கத்தின் பொது சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதிபெற்ற அங்கத்தவர்களின் அல்லது பிரதிநிதிகளின் மூன்றில் இரண்டுக்கு கூடிய தொகையினரால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை ஒன்று–

(அ) கூட்டுறவுச் சங்கத்தில் சொத்துக்களும் வரவுகளும் பூரணமாக்கவோ அல்லது அதன் ஒரு பகுதியை ஏதோ ஒரு பதிவு செய்யப்பட்ட வேறொரு சங்கத்துக்கு ஒப்படைத்தல் ; அல்லது

(ஆ) கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு சபைச் சங்கம் இரண்டு அல்லது அதற்கு கூடிய எண்ணிக்கையால் பிரித்து வேறுபடுத்திக் கொள்ள முடியும்.

(2) ஏதும் பதிவு செய்யப்பட்ட இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது அதற்கு கூடிய தொகையை பதிவாளரின் பூரண அங்கீகாரத்துடன் ஒவ்வொரு சங்கத்தின் பொது சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்த வாக்களிக்கக் கூடிய தகமைப்பெற்ற அங்கத்தவர்களின் அல்லது பிரதி நிதிகளின் மூன்றீல் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் பிரேரணையை நிறைவேற்றி ஒன்றிணைத்து புதிய கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக் கொள்ளலாம்.

தனது சொத்துக்களும் வரவுகளும் வேறேதுமொரு சங்கத்துக்கு ஒப்படைக்க அல்லது அச்சங்கத்துக்கு, சங்கங்களுக்கு இரண்டிற்கு அதிகபடியான எண்ணிக்கைகளாக பிரிப்பதற்கு அல்லது வேறு பதிவு செய்யப்பட்ட சங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்பட பதிவாளருக்கு அங்கீகாரம் அளிக்க முடியாதிருக்க வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தினால் அவ்வாறான ஒரு பிரேரணையை நிறைவேற்றிக் கொண்ட சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தினால் சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் கடனாளிகளும் அறிந்து கொள்வதற்காக பகிரங்க அறிவித்தல் செய்வதோடு சிக்கலான மாற்றுச் சட்டம் அல்லது ஒப்பந்தங்கள் இருத்தல் அவற்றை கவனத்தில் கொள்ளாது ஏதோரு அங்கத்தவர் அல்லது கடனாளிக்கு அறிவித்தல் கொடுத்த தினத்தின் பின் ஒரு பஞ்சாங்க மாதத்துள் சந்தர்ப்பத்திற்கேற்ப தனது பங்கு வைப்பு அல்லது கடன் நிதியை கேட்டு நீக்கிக் கொள்ளும் அதிகாரம் அந்த அங்கத்தவர்களுக்கு அல்லது கடனாளிக்கு இருத்தல் வேண்டும்.

( 4) (4) ஆவது உப வாசகத்தின் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தனது பங்குகள் வைப்பு அல்லது கடன் நிதியை கேட்டு நீக்கும் அதிகாரத்தை செயற்படுத்தாத அங்கத்தவர் அல்லது கடனாளியால் பிரேரணைக்கு விருப்பம் காட்டியதாக கருதப்பட வேண்டும்.

(5) பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தினால் இவ் வாசகத்தின்படி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட ஒரு பிரேரணைக்கு ஏதோரு சொத்து வரவுகளை ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் தற்காலத்தில் அதிகாரத்திலுள்ள ஏதும் சட்டங்களுக்கு தடையாக ஏதும் குறிப்பிடப்பட்டிருந்தால் அதை கவனத்தில் கொள்ளாது நிறைவேற்றப்பட்ட பிரேரணையை மேலும் தெளிவுபடுத்தப்படாமல் ஒப்படைப்பாளியிடம் அச்சொத்தை அல்லது வரவை உரித்தாக்குதல் அளவுடைய ஒப்படைப்பாக கருதுதல் வேண்டும்.

ஏதோரு சந்தர்ப்பத் தில் பதிவு செய்யப் பட்ட சங்கத்தின் கூட் டத்தின் பதிவு சான்றை இரத்துச் செய்தல்.

10. (1) பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் சொத்துக்களையும் வரவுகள் அனைத்தையும் வேறொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்கு இந்நியதிச் சட்டத்தின் வாசகங்களுக்கு பொருந்தும் வகையில் ஒப்படைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் முதல் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கத்தின் பதிவு இரத்துச் செய்யப்பட வேண்டும். அத்தோடு அக்கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்பட்டதாக கருதல் வேண்டும். கூட்டுத்தாபனமாக நடத்துவது முடிவுபெற வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட இரு சங்கங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்களுக்கு அனுகூலமாக புதிய ஒரு சங்கமாக ஒன்றிணைக்கப்பட்ட வேளையில் அவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தையும் பதிவு செய்தல் புதிய சங்கத்தை பதிவு செய்த தினத்தில் இரத்தாவதோடு, .அச்சங்கம் கலைக்கப்பட்டதாக கருதுவதோடு கூட்டுத்தாபனமாக நடத்துதல் முடிவு பெற வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமொன்று நியதிச் சட்டத்தின் வாசகங்களுக்கமைவாக இரண்டு சங்கங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைகளுக்கு வேறுபட்டு பிரிந்து செல்லும் சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தை பதிவு செய்தல் புதிய சங்கம் பதிவு செய்ததின் பின் இரத்தாவதோடு அச்சங்கம் கலைக்கப்பட்டதாகக் கருதி அத்தோடு கூட்டுத்தாபனமாக நடைபெறுவதும் முடிவு பெற வேண்டும்.

## III ஆம் அத்தியாயம்

## பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் அங்கத்தவர்களும் அவர்களின் உரிமைகளும் பொறுப்புகளும்

அறவிடக்கூடிய கொடுப்பனவுகளை செலுத்தும் வரை அங்கத்தவர்கள் உரிமைகள் பாவித் தலாகாது பங்கு களை விலை கொடுத்து வாங்கும் முறை.

11. கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் சம்பந்தமாக ஒழுங்குவிதிகளின் அல்லது மாற்றப்பட்ட சட்டங்களின் நியமப்படி கிடைக்க வேண்டிய கொடுப்பனவை தம்மால் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது கொடுக்கும் வரை அல்லது சங்கத்தால் நியமம் செய்யக்கூடிய தொடர்பை கையேற்றிருந்தாலன்றி அல்லது கையேற்கும் வரை பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் எந்தவொரு அங்கத்தவரும் அங்கத்துவருடைய உரிமைகளை பாவித்தல் கூடாது. இது தொடர்பாக நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட, தயாரித்துள்ள ஒழுங்குவிதிகளுக்கு பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

அண்மிய அங்கத் தவர்.

12. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட, தயாரித்த ஒழுங்குவிதிகளின்படி பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தினால் மாற்று சட்டங்களுக்கு பொருத்தமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஒப்பந்தம் ஒன்றுக்கு முன்வரும் எந்தவொரு நபரும் அண்மிய அங்கத்தவராக உள்ளாக்கிக் கொள்ள முடியும்.

(2) அண்மிய அங்கத்தவர் ஒருவருக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சொத்துக்கள் அல்லது இலாபத்தில் அல்லது ஏதொரு முறையிலான பங்குகளுக்கும் அல்லது சங்கத்தின் செயற்படுத்தும் போது எந்தவொரு வாக்கு அதிகாரமோ அல்லது ஏதும் பதவிகள் வகிக்கவோ உரிமையில்லை.

(3) இந் நியதிச் சட்டத்தின் வாசகங்களின் உள்ளதைத் தவிர அண்மிய அங்கத்தவர் ஒருவருக்கு சங்கத்தின் மாற்றுச் சட்டங்களில் நிச்சயமாக குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்களுக்கு சலுகைகளும் உரிமைகளும் இருப்பதோடு அங்கத்தவர்களின் ஏதாவது பொறுப்புகளுக்கு அவர் கீழ்படிதல் வேண்டும்.

(4) அண்மிய அங்கத்தவர்கள் தொடர்பாக நடவடிக்கைகள் அச்சங்கத்தின் மாற்றுச் சட்டங்களில் அடக்கப்பட வேண்டும்.

வயது குறைந்த அங்கத்தவர்களினால் சங்கத்துடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள்.

13. ஏதும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்தவராக முறையாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கத்தவர் ஒருவரின் குறைந்த வயது அல்லது அவர் உரிய வயதையடையாது இந் நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் அவரால் எழுதி கையொப்பம் இடத் தேவையான சட்டப்படியான பதிவேட்டில் எழுதி கையொப்பம் இடவோ விடுதலை பெறுவதற்கு அவர்களுக்கு தடை இருத்தல் கூடாது. இன்னும் அது போன்ற ஒருவரினால் சங்கத்துடன் செய்து கொண்ட ஏதொரு உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்காகவோ ஒதுங்கி விடுவதற்காகவோ இக்காரணி காரணமாக இருத்தலாகாது. அது போன்ற அப்படியான ஒரு நபரினால் முக்கிய பிரிவினர் அல்லது பிணையாளராக சங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட அவ்வாறான உடன்படிக்கை ஒன்று அவரின் குறைந்த வயது அல்லது உரிய வயதுக்கு வராமையை கவனியாது அந் நபரினால் உரியவருக்கெதிராக சட்டப்படி செயல்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

உத்தியோகத்தரி னால் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை.

14. பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் ஏதும் உத்தியோகத்தரை நியமிக்கும் இடத்து ஏதும் தவறோ அல்லது அவர் தெரிவு செய்து பட்டுக் கொள்வதற்காக ஏதோரு தகமை இல்லையென கண்டுபிடிக்கப்பட்டால் அச்சங்கத்துடன் அவ் உத்தியோகத்தினரால் செய்து கொள்ளப்பட்ட ஏதும் உடன்படிக்கைகளை இரத்துச் செய்யவோ அல்லது அதிலிருந்து விலகிச் செல்லவோ காரணமாக இருத்தல் கூடாது.

அங்கத்தவரின் வாக்கு.

15. (1) ஏதும் ஆரம்ப சங்கத்தின் அங்கத்தவருக்கு சங்கத்தின் வேலைகளை நடத்திச் செல்வதற்கு ஒருவருக்கு ஒரு வாக்கு மட்டும் இருத்தல் வேண்டும். அப்படியாயின் வாக்குகள் சமமாக பிரியும் போது தலைவர் அவர்களுக்கு தீர்மான வாக்கு இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுறவு ஆணையாளருக்கு, பதில் உதவி ஆணையாளருக்கு, கூட்டுறவு திணைக்களத்து மாவட்ட உத்தியோகத்தருக்கு அல்லது வேறு உத்தியோகத்தருக்கு கூட்டுறவுச் சங்கத்தில் எந்தவொரு பதவியையும் வகிக்க முடியாது. அவ் உத்தியோகத்தர்கள் அங்கத்தவராயின் மட்டும் வாக்களிக்க தகுதியானவராவர் (கூட்டுறவு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் சங்கத்துக்கு பொருந்தாது).

வாக்குகளை பாவிக்கும் முறை.

16.(1) ஆரம்ப கூட்டுறவு சங்க அங்கத்தவரினால் அச்சங்கக் கூட்டத்தின் போது தனது வாக்கை தனிப்பட்ட முறையில் பாவிக்க முடியும். அப்போது தனது ஆளடையாளத்தை காட்டும் முகமாக அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்டுள்ள அடையாள அட்டையை சமர்ப்பிக்க முடியும். அப்படியாயின் தனது பிரதிநிதியைக் கொண்டு வாக்களிக்க சங்கத்தின் மாற்றுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை எடுக்கும் சந்தர்ப்பத்தில் சங்கத்தின் எந்த கூட்டத்தின் போதும் வாக்களிக்க இடமளித்தல் வேண்டும்.

(2) வேறேதும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் ஏதொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட வேறு சங்கத்தின் காரியங்களை நடைமுறைப்படுத்தும் போது வாக்களிக்கும் காரியத்திற்காக தலைவர் நிர்வாக சபை அங்கத்தவர்களில் ஒருவரை நிர்வாக சபை பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவு செய்து கொள்ள முடியும்.

பங்குகள் அல்லது தொடர்புகளை ஒப்படைத்தல் தொடர்பாக.

17. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்தவருடைய அல்லது இருந்த அங்கத்தவருடைய அல்லது காலஞ்சென்ற அங்கத்தவருடைய மூலதனப் பங்கு வேறு தொடர்புகளை ஒப்படைத்தலுக்கு உரித்துள்ள அதிகூடிய பெறுமானம் சம்பந்தமாக இந்நிதியச் சட்டத்தின் அல்லது ஒழுங்குவிதிகளில் நியமப்படுத்திய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(2) வரையறுக்கப்படாத பொறுப்புகளுடைய பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமாக இருந்தால் எந்த வொரு அங்கத்தவராலும் ,-

(அ) தம்மால் எந்தவொரு பங்கையும் அல்லது தொடர்பையும் ஒரு வருடத்துக்கு குறையாத காலம் வைத்திருந்தால் ;

(ஆ) சங்கத்தின் அல்லது சங்க அங்கத்தவரின் அங்கத்துவத்துக்காக விண்ணப்பப் பத்திரத்தை நிருவாக சபையால் ஏற்றுக் கொண்ட ஒருவரிடம் ஒப்படைத்தாலன்றி தன்னால் வகித்த சங்கத்தின் மூலதனம் ஏதும் பங்கு ஒப்படைத்தலாகாது.

### IV ஆம் அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட கூட்டறவுச் சங்கத்தின் உரிமைகளும், கட்டுப்பாடுகளும், சலுகைகளும்.

சங்கத்தின் முகவரி .

18. அறிவித்தல் கடிதங்கள் அனுப்புவதற்காக மாற்றுச் சட்டங்களுக்கு இணங்க பதிவு செய்யப்பட்ட முகவரியொன்று சகல பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடம் இருத்தல் வேண்டும். அம் முகவரி சம்பந்தமாக ஏதும் வேறுபாடுகள் நிகழ்ந்தால் அத் தினத்திலிருந்து ஏழு நாட்களுக்குள் பதிவாளருக்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும்.

நியதிச் சட்டம் மாற்று சட்டம் நிர்வாக கட்டளை என் பவற்றோடு அங்கத்தவர்களின் பெயர் பதிவேட்டு பிரதி பரிசீலனைக்காக வெளிப்படையாக வைத்தல் வேண்டும்.

19. பதிவு செய்யப்பட்ட சகல கூட்டுறவுச் சங்கத்தால் கட்டணம் செலுத்தாத சாதாரணமாக எந்த வேளையிலும் பரிசீலனை செய்து பார்ப்பதற்காக சட்டத்தின் ஒழுங்குவிதிகள் , மாற்று சட்டங்களின் பிரதிகள் சங்கத்தின் அங்கத்தவர்களின் பெயர் பதிவேடுப் பிரதி , அண்மையில் நடந்த கணக்காய்வு அறிக்கை என்பன சங்கம் பதிவு செய்த கடிதம் இருக்கும் இடத்தில் வைக்க வேண்டும்.

சங்கம் கூட்டுத்தாபன மாதல்.

20. சங்கத்தை பதிவு செய்யும் காரணத்தை கொண்டு அது பதிவு செய்யப்பட்ட நாமத்தின் கீழ் தொடர்ந்து இயங்குவதற்கு பாரம்பரிய பொது இலட்சினைக் கொண்டிருத்தல் , சொத்துக்கள் சொந்தமாக இருக்கவோ உடன்படவும், வழக்குகள் வேறு சட்டப்படைப்புகளை ஒப்படைப்பதற்கும் அது தொடர்பாக விடுதலைக்கு காரணம் கூறவும் சங்கம் அமைக்கும் காரியத்துக்கும் தேவையான சகலவற்றையும் செய்வதற்கு அதிகாரம் உள்ள ஒரு யாக்கம் ஆதல் வேண்டும்.

சங்கத்துக்கு அல்லது சங்கத்தினால் பொருட்களை விற்றல்.

21. (1) விவசாயம், பண்ணை உற்பத்தி பொருட்கள், கைத்தொழில் உற்பத்தி பொருட்களை விற்கும் நோக்குடன் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களினால் ஒழுங்குவிதிகளினால் தயாரிக்கப்படல் வேண்டும். தயாரிக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அமைய நிறைவேற்ற முடியும்–

(அ) அவ்வாறான உற்பத்தி செய்யும் சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் அப்பொருட்களை பூரணமாகவோ அல்லது அதன் ஏதொரு நிர்ணயிக்கப்பட்ட பகுதியை சமமாகவோ அல்லது வகையாகவோ சங்கத்திற்கோ அல்லது சங்கத்தின் மூலமாகவோ விற்பனை செய்ய முடியும். மேலும் ,

(ஆ) துணைச் சட்டங்களால் ஒப்பந்தத்தை முறிக்கும் குற்றத்திற்கு குற்றவாளியாக ஒழுங்கு விதிகளின் நியமப்படி ஒப்புவிக்கப்பட்டால் அல்லது தீர்மானிக்கப்பட்டால் உரிய அங்கத்தவரால் ஒழுங்குவிதிகளின் படி ஏதொரு வகையில் நிச்சயிக்கப்படும் மதிப்பீட்டுப் பணத்தை நட்டமாக சங்கத்துக்கு செலுத்த வேண்டும் என்பதற்காக சங்கத்தின் துணைச் சட்டம் நடவடிக்கைகளை தயாரித்தல் அல்லது அங்கத்தவர்களுடன் ஒப்பந்தமொன்றுக்கு அண்மித்தல்.

*சில சந்தர்ப் பங்களில் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் ஊடாக உற்பத்திகளை கட்டாயம் விற்பனை செய்தல்.*

22. (1) பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கம் தொடர்புபட்ட போது அச் சங்கத்தின் அங்கத்தவர்கள் அதன் ஒரு பகுதியை இலங்கையின் ஒரு மாகாணத்தின், மாவட்டத்தில் அல்லது பிரதேசத்தில் ஒரு பொருளை உற்பத்தி செய்வதாக அமைச்சர் அவர்கள் திருப்திபடும் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்கள் தனது சொந்த விருப்பத்தின் பெயரில் கட்டளை மூலம் சந்தர்ப்பத்துக்கேற்ற வகையில் இலங்கையில் ஒரு மாகாணத்தில் , மாவட்டத்தில் அல்லது பிரதேசத்தில் பொருட்கள் பற்றி ஒவ்வொரு உற்பத்தியாளருக்கும் அவர் சங்கத்தில் அங்கத்தவராகவோ அங்கத்துவம் அற்றவராகவோ இருந்தாலும் உற்பத்தியாளர் தான் உற்பத்தி செய்த பொருட்களின் முழு அளவில் அவருடைய பயன்பாட்டுக்கு அல்லது நுகர்வுக்கு போக மீதிப் பகுதியை அச்சங்கத்துக்கு அல்லது சங்கத்தின் மூலமாக விற்குமாறு கட்டளை பிறப்பிக்க முடியும்.

(2) அமைச்சர் அவர்களால் (1) உப வாசகத்தின் படி வெளியிடப்பட்ட சகல கட்டளைகளும் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்தல் வேண்டும். மேலும் , அக் கட்டளையில், அப் பொருள் கட்டளை செயற்படும் பிரதேசத்துக்கு அப் பொருள் உற்பத்தியாளன் கொடுக்க வேண்டியது எந்த அடிப்படையில் என்பது நிச்சயமாக குறிப்பிடல் வேண்டும்.

(3) சகல கட்டளைகளும் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கும் தினத்தில் செயல்பட வேண்டும். மேலும் (5) வது உப வாசகத்தின் நடவடிக்கைகளின் கீழ் அதைத் தடை செய்யும் வரை தொடர்ந்து செயல்படும்.

(4) சகல கட்டளைகளும் செயற்படவும் கூடிய வரையில் வட மத்திய மாகாண சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) வட மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கவும் மறுத்தளிக்கவும் சகல கட்டளைகளும் பரிசீலனை செய்ததாக கருதப்படல் வேண்டும். அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட, செய்வதற்கு இடமளிக்கப்பட்ட எந்தவொரு கட்டளையும் செல்லுப்படியாகுதல் வேண்டும். கட்டளையொன்று பரீசிககப்பட்டது கவனத்தில் கொள்ளும் தினத்தில் அக் கட்டளையை அங்கீகரிப்பதற்கு வட மத்திய மாகாண சபையால் மறுக்கப்பட்ட தினமாகக் கருதப்பட வேண்டும். மேலும், அத் தினம் வர்த்தமானியில் அறிவித்தல் வேண்டும்.

(6) (அ) அமைச்சர் அவர்களால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கட்டளையால் (இக் கட்டளை இதனகத்தே திருத்தியமைக்கப்பட்ட கட்டளையாக குறிப்பிடப்படல் வேண்டும்.) (1) ஆவது உப வாசகத்தின் கீழ் முன்னர் இடப்பட்ட ஏதொரு கட்டளையை எந்த வேளையிலும் மாற்ற முடியும். எல்லா திருத்தியமைக்கப்பட்ட கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செயல்பட வேண்டும்.

(ஆ) திருத்தியமைக்கப்பட்ட கட்டளையொன்றினால் வேறுபடுத்தப்பட்ட (1) உப வாசகத்தினால் செய்யப்பட்ட கட்டளையொன்று அவ்வாறு மாற்றப்படாவிட்டால் அது செயல்படக் கூடிய கால கட்டத்துள் அவ்வாறு மாற்றப்பட்ட விதத்தில் தொடர்ந்து செயல்பட வேண்டும். மேலும், அதற்கு மேற்பட்ட காலம் செயல்படல் ஆகாது.

(இ) சகல திருத்தியமைக்கப்பட்ட சகல கட்டளைகளும் அங்கீகாரத்துக்காக வடமத்திய மாகாண சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும் அப்படியாயின்

(1) ஆவது உபசரத்தின் கீழ் இடப்படும் கட்டளை (4) ஆவது உபசரத்தின் கீழ் வட மத்திய மாகாண சபையினர் அங்கீகாரம் அளிப்பதற்கு முன் திருத்தியமைக்கப்பட்ட கட்டளையால் அல்லது அதிக எண்ணிக்கையினால் கட்டளைகளை மாற்றப்படும் சந்தர்ப்பத்தில் அக்கட்டளையின் உப வாசகத்தின் கீழ் அங்கீகாரத்துக்காக வட மத்திய மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படும் போது திருத்தியமைக்கப்பட்ட கட்டளை அல்லது கட்டளைகளில் செய்யப்பட்ட சகல மாற்றங்களும் அதில் உட்படுத்த வேண்டும். மேலும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் திருத்தியமைக்க வேண்டிய சகல கட்டளைகளும் தனித்தனியே வட மத்திய மாகாண சபைக்கு சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஈ) வட மத்திய மாகாண சபைக்கு முன் கொண்டுவரப்படும் ஏதும் திருத்தங்கள் செய்வதற்கான கட்டளையொன்று வட மத்திய மாகாண சபையால் அங்கீகரிப்பதற்கு மறுத்தால் அத் திருத்தக் கட்டளையை பரிசீலனை செய்வதோடு (1)வது உப வாசகத்தின் கீழ் இடப்படும் கட்டளை பரிசீலனை செய்யப்பட்ட தினத்திலிருந்து அத் திருத்தியமைத்த கட்டளை கிடைக்கவில்லை எனக் கருதி தொடர்ந்து செயல்பட வேண்டும்.

(உ) (1) ஆவது உப வாசத்தின் கீழ் முன்னர் இடப்பட்ட ஏதும் ஒரு கட்டளையை அமைச்சர் அவர்களால் பரிசீலனை செய்ய முடியும். அவ்வாறான கட்டளையை பரிசீலனை செய்யும் கட்டளையை வர்த்தமானியில் பிரசுரிப்பதோடு அக் கட்டளை பிரசுரித்த தினத்திலிருந்து பரிசீலனை செய்ததாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

(7) சகல கட்டளைகளும் வட மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட போது அது இதுவரை நடைமுறைப்பட்டதாகவும் செல்லுபடியாகும் அதிகாரம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(8) இவ் வாசகத்தின் படி வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டிய சகல அறிவித்தல்களும் அமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் பிரசுரித்தல் வேண்டும்.

(9) இவ் வாசகத்தின் கீழ் இடப்படும் சகல கட்டளை நடவடிக்கைகள் வேறொரு வரையப்பட்ட சட்ட நடவடிக்கைகளோடு பொருந்தாது விட்டால் அல்லது மோதலை ஏற்படுத்தின் கவனியாது அக் கட்டளை அதிகாரத்துக்குட்பட்ட கால எல்லைக்குள் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் அதிகாரத்திற்குட்படும்.

(10) தான் அங்கத்தவரல்லாத பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்கு சங்கத்தின் மூலமாக ஏதொரு பொருளை விற்குமாறு (1) வது உப வாசகத்தின் படி கட்டளையொன்றினால் ஆணை பிறப்பிக்கப்பட்ட சகல உற்பத்தியாளரும் அக் கட்டளை பிரகாரம் அவ்வாறான ஏதும் விற்பனை தொடர்பாக எமும் எந்த விடயமும் அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும் அவர் அச்சங்கத்தில் அங்கத்தவராக இருந்தால் நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி நடத்தல் வேண்டும்.

(11) (1) ஆவது உப வாசகங்களின் கீழ் கட்டளை பிறப்பிக்கப்பட்ட ஏதொரு உற்பத்தியாளன் தொடர்பாடு, அவ் உற்பத்தியாளன் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்தவனாக இல்லாது இடத்து அவரால் அச் சங்கத்துக்கு அங்கத்தவராக சேர்வதற்கு விண்ணப்பிக்கும் போது சங்கம் –

(அ) அவர் அங்கத்தவராவதற்கு விரும்பினால் அவருடைய கணக்கில் சங்கத்துக்கு கிடைத்த அல்லது சங்கத்தினால் அறவிடப்படும் அறக்கொடைகளிலிருந்து அங்கத்துவத்துக்காக பங்களிப்புத் தொகையை பூரணமாகவோ அல்லது பகுதியாகவோ முடியும். மேலும்

(ஆ) மேற்கூறியவாறு அறவிடப்பட்ட பின் அவ் பங்களிப்பு தொகையை பூரணமாக செலுத்தி, பின் அவரை அங்கத்தவராக உட்படுத்த முடியும்.

*ஒப்பந்தத்தை மீறுதல்அடுத்த வர்களை தூண்டுபவர்கள்.*

23. (1) வேறொரு நபரினால் உற்பத்தி செய்யப்பட்ட ஏதொரு பொருளை பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்கு அல்லது சங்கத்தின் மூலம் விற்பதற்கு வேறொரு நபர் 21 ஆவது வாசகத்தின் படி ஒப்பந்தம் செய்து கொண்ட அல்லது 22 வாசகத்தின் கீழ் கட்டளையொன்றுக்கு கட்டுப்பட்டுள்ளமை பற்றி அறிந்திருந்தும் அது சம்பந்தமாக அறிவித்தல் ஒன்று கிடைத்துள்ள போது சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் ஒப்பந்தத்தை மீறினால் அல்லது கட்டளைக்கு முரணாக பொருட்களை விற்கவோ அல்லது பொறுப்பளிக்க வேறொரு நபரை தூண்டி விருப்பத்தை ஏற்படுத்துபவராயின் அந் நபர் குற்றத்திற்கு குற்றவாளியாக வேண்டும். அவர் நீதவான் முன்னிலையில் நடத்தப்படும் குறுகிய வழக்கு விசாரனையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால் ஆயிரம் ரூபாவுக்கு கூடாத தண்டனைக்கு ஆளாவார்.

(2) (1) உப வாசகத்துக்கு கீழ் குற்றவாளியாக ஆக்கப்பட்ட நபர் கூட்டுத்தாபனம் ஆகும் சந்தர்ப்பத்தில் அக் குற்றத்தை செய்த போது அக் கூட்டுத்தாபனத்தில் பணிப்பாளர் அல்லது உத்தியோகத்தராக இருந்த சகலரும் குற்றம் இழைக்கப்பட்டமை தனது அறியாமையால் அல்லது குற்றம் நடைபெறாது இருக்க எல்லா முயற்சிகளும் எடுத்ததாக தாம் ஒப்புவித்தால் அன்றி அவர்கள் குற்றத்திற்கு குற்றவாளி ஆவார்கள்.

*ஒரு அங்கத்த வருக்கு சொந்த மான பயிர்கள், விவசாயப் பொருட் கள், விலங்குகள் உபகரணங்கள், மூலப்பொருட்கள், உற்பத்தி சம்பந்த மாக பதிவு செய் யப்பட்ட சங்கத்தின் உரிமைகள்.*

24. (1) கடனாளியின் சொத்துக்கள் தொடர்பாக அரசாங்கம் அல்லது மாகாண சபையின் முன்னுரிமைக்கு கூலியாக அறவிட்டுக் கொள்ள கூடிய நிதி தொடர்பாக காணி உரிமையாளரின் உரிமைக்கு உரிமை கோருவதற்கு அசைவற்ற ஆதனம் தொடர்பாக சங்கத்தில் பதிவு செய்யப்பட்டு கட்டுப்படுத்துவதன் மூலம்–

(அ) ஒரு அங்கத்தவர் அல்லது முன்னிருந்த அங்கத்தவரால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்ததுக்கு கொடுக்க வேண்டிய கட்டளை கொடுக்காது வேண்டுகோளுக்கு –

(i) அவ் அங்கத்தவர் அல்லது முன்னிருந்த அங்கத்தவர் சங்கத்தில் பெற்ற கடன் பணத்தில் பூரணமாகவோ அல்லது பகுதியாகவோ விளைத்த பயிருக்கு அல்லது வேறு விவசாயப் பொருளுக்காக கட்டுப்படுவது முதல் கட்டுப்படாகும்.

(ii) அச் சங்கத்தால் அங்கத்தவருக்கு அல்லது முன்பிருந்த அங்கத்தவருக்கு கொடுத்த பணத்தில் அல்லது பொருட்களில் அவருடைய கடனில் பூரணமாகவோ அல்லது பகுதியாகவோ அவரால் விலைக்கு வாங்கிய அவருக்கு விநியோகித்த விலங்குகள் அதற்கான உணவுகள் , மீன்பிடி , விவசாய கைத்தொழில் உபகரணங்கள், உற்பத்திக்காக பெறப்படும் மூலப்பொருட்கள், கைத்தொழிற்சாலை, களஞ்சியம் , வர்த்தக நிலையம் என்பன முதல் கட்டுப்பாட்டுக்குள்ளாகும்.

அப்படியாயினும் இங்கு உள்ளாக்கப்பட்ட எவையும் அவ்வாறான பயிர்கள் அல்லது வேறுப்பட்ட விவசாயப் பொருட்கள் , மிருகங்கள் அதற்கான உணவு , மீன்பிடி , விவசாய அல்லது கைத்தொழில் பொருட்கள் உற்பத்திக்கான மூலப் பொருட்கள், அறிவித்தலின்றி நல்லெண்ணத்துடன் விலைக்கு வாங்குபவர் அல்லது ஒப்படைப்பாளரின் உரிமையில் அதிகாரம் செல்லுபடியாகாது இருத்தல் வேண்டும்.

(iii) சட்டவாக்க சபையின் உத்தேசிக்கப்படாதவராக ஏதும் உப அட்டவணையில் விவசாய உற்பத்தியை விலைக்கு வாங்குவது தொடர்பாக அவ் அங்கத்தவரிடம் கூட்டுறவுச் சங்கத்துக்கு அறவிட வேண்டிய ஏதும் பணம் முதல் பொறுப்புக்குள்ளாகும்.

(ஆ) வீட்டுக் கூலி பங்கு , கடன் பணம் அல்லது கணக்குகளில் உள்ள பணம் சம்பந்தமாக அங்கத்துவர் ஒருவர் அல்லது முன்னர் இருந்த அங்கத்தவரால் வீடு சங்கத்துக்கு கொடுத்தல் வேண்டும். ஏதும் நிறைவேற்ற முடியாத வேண்டுதல்கள் அல்லது கொடுக்காத கட்டணங்கள் அச்சங்கத்துக்கு கொடுக்க வேண்டிய உரிமைகள் அல்லது பணம் சங்கத்தின் அசைவற்ற ஆதனங்கள் அவருடைய தொடர்புகள் பற்றியது முதல் கட்டுப்பாடாகும்.

(இ) இவ் வாசகத்தின் கீழ் அங்கத்தவரும் அண்மிய அங்கத்தவரும் உட்படுவர்.

அங்கத்தவர்களின் அல்லது தொடர்புகள்மீது கட்டுப்படுத் தலும் பதிவு செய்கையும்.

25. (1) அங்கத்தவர் ஒருவரின் முன்பு இருந்த அங்கத்தவரின் இறந்த ஒருவரின் அண்மிய அங்கத்தவரின் பூதலின்

(அ) சங்கத்துக்கு அறவிட வேண்டிய பணம் ;

(ஆ) மற்றேதும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்துக்கு வரவேண்டிய கடன் அல்லது ;

(இ) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் ஏலதாரருக்கு வரவேண்டிய பணம் கணக்கு தீர்த்தலுக்காக அவ் அங்கத்தவரின் முன்பு இருந்த அங்கத்தவருடைய அல்லது மரணமான அங்கத்தவரின் மூலதனத்தின் பங்கு அல்லது வேறு தொடர்புகளில் வைப்புகளின் மீது அங்கத்தவரின் முன்பு இருந்த அங்கத்தவரின் அல்லது இறந்த அங்கத்தவரின் பூதலுக்கு கொடுக்க வேண்டிய ஏதும் இலாபங்கள் பணிக் கொடை பணம் அல்லது இலாபத்தின் மீது பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். அங்கத்தவருடைய முன்பு இருந்த அங்கத்தவருடைய இறந்த அங்கத்தவருடைய பூதலுக்கு வரவு வைத்தல், கொடுக்க வேண்டிய பணத்தை பிரதி ஈடு செய்தல் அல்லது அவ்வாறான கடன் , பணம் கொடுப்பனவுகள் கொடுப்பது தொடர்பாக சந்தர்ப்பத்துக்கு உகந்த வகையில் அவ் வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏலதாரருக்கு கொடுத்தல் அதை பதிவு செய்யப் பட்ட சங்கத்துக்கு செய்ய முடியும்.

பங்கு அங்கத்தவர் பணம் அல்லது வேறு தொடர்பு களை தடை செய் தல் அல்லது விற் பனைக்கு உட் படாது செய்தல்.

26. 25 ஆவது உப வாசகத்தில் ஒழுங்குவிதிகளுக்கு கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் மூலதனத்தில் அங்கத்தவரின் பங்கு உபயப் பணம் அல்லது வேறு தொடர்புகள் அங்கத்தவரினால் செய்து கொள்ளப்பட்ட கடன், பொறுப்புகள் தொடர்பாக நீதிமன்றத்தால் அளித்த ஏதும் தீர்ப்பு அல்லது கட்டளையின் கீழ் தடை செய்து கொள்வதற்கு அல்லது விற்பதற்கு தடை ஏற்படும் போது, அழிவுறும் போது அவருடைய ஒப்படைப்பாளருக்கு சிவில் வழக்கு கட்டளை ஏற்பாடுக் கோவையின் “எல்” அத்தியாயத்தின் கீழ் நியமிக்கப்படும் பொறுப்பேற்பவருக்கு அப்பங்கிக்கு பங்களிப்பு பணத்துக்கு அல்லது வேறு தொடர்புகளுக்கு எந்தவொரு உரிமைகளும் அல்லது அது தொடர்பாக சொந்தம் பாராட்டப்படுவதற்கு எவ்வித உரிமையும் இல்லை.

*அங்கத்தவர் ஒரு வர்இறக்கும் போது தொடர்புகளை ஒப்படைத்தல்.*

*27. (1) அங்கத்தவர் ஒருவர் மரணமடைந்த பின்னர் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்தினால் இறந்த அங்கத்தவரின் பங்குகளை அல்லது வேறு தொடர்புகளை அதற்காக தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் படி பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் படி பெயர் குறிப்பிடப்படாது இருந்தால் அங்கத்தவரின் சட்டப்படி உரித்தாளர் அல்லது பிரதிநிதியாக நிர்வாக சபையினரால் தீர்மானித்தல் வேறொரு நபருக்கு ஒப்படைக்க முடியும் அல்லது ஒழுங்கு விதிகள் அல்லது துணைச் சட்டங்கள் மூலம் நிச்சயிக்கப்பட்டு அவ் அங்கத்தவரின் பங்குகள் அல்லது வேறு தொடர்புகளில் பெறுமதிக்கு சமமான பணத்தை பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு,உரிமையாளருக்கு அல்லது சட்டப்படியான பிரதிநிதிக்கு கொடுக்க முடியும். வரையறுக்கப்பட்ட, வரையறுக்கப்படாத பொறுப்புகளில் சங்கத் தொடர்புகள் ஒழுங்குவிதி அல்லது சட்டங்களின் நிச்சயப்படுத்தப்பட்ட முறையில் ஆகுதல் வேண்டும்.*

*இளம் வயதுடைய ஒருவரினால் அல் லது அவருக்காக செய்யும் வைப்பு.*

*28. (1) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் இளம் வயதுடையோரின் பொருட்களை இலாபத்தை வைப்பை பொறுப்பேற்கலாம். அத்தோடு அவ் அல்லது வைப்பு தொடர்பாக கொடுக்க வேண்டிய வட்டியை அவ் இளம் வயதினருக்கு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் மூலம் கொடுப்பது சட்டப்படியாதல் வேண்டும். குறை வயதுடையோரினால் செய்யப்படும் இவ்வைப்புகளுக்கு அதற்கு சேர்க்கப்படும் வட்டியோடு குறை வயதினருக்கு கொடுக்க முடியும். மேலும் குறை வயதுடைய ஒருவருக்காக ஏதும் வைப்பு செய்து அதற்கு சேர்க்கப்படும் வட்டியோடு அவ் இளம் வயதினர் பயன்படுத்துவதற்காக இளம் வயதினரின் பாதுகாவலருக்கு கொடுக்க முடியும்.*

*(2) இச் சரத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கமொன்றினால் இளம் வயதினருக்கு அல்லது பாதுகாவலருக்கு கொடுக்கப்படும் பணத்துக்காக அவரிடம் பெறப்படும் பற்றுச் சீட்டை அப் பணம் தொடர்பாக அச் சங்கத்தின் பொறுப்பை நிரந்தரப்படுத்தியதற்கு போதுமானதாகும்.*

*சங்கத்தின் கடன் தொடர்பாக முன் னாள் அங்கத்த வர் அல்லது இறந்த அங்கத்தவரின் சொத்து கட்டுப்பட் டுள்ளதாக.*

*29.(1) இறந்த அங்கத்தவர் ஒருவர் அங்கத்தவராக இருந்து முடிவடையும் தினம் வரை நடைபெற்றதாக பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் கடன் தொடர்பாக அவர் கட்டுப்படும் அத்தினத்திலிருந்து கணக்குக் குட்படும் இரண்டு வருட காலத்துக்கு தொடர்ந்து இயங்க வேண்டும்.*

*(2) அங்கத்தவர் ஒருவர் இறந்த தினத்திலிருந்து கணக்கு பார்க்கும் இரண்டு வருட கால கட்டத்துள்ள அவர் இறந்த தினத்தில் நடைபெற்ற சங்கத்தின் கடன் தொடர்புக்கு கட்டுப்பட வேண்டும்.*

*அங்கத்தவர்களின் பதிவேடு.*

*30. (1) ஏதும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்திக் கொண்டு பெயர் செல்லும் அங்கத்தவர்களின் பெயர் பதிவேடு அல்லது பெயர் பட்டியலில் குறிக்கப்பட்ட கீழ்வரும் விபரங்களுடன் ஏனைய விபரங்கள் பார்க்கும் பார்வையிலே ஏற்றுக் கொள்ளக் கூடிய சாட்சியாகும்.*

*(அ) அங்கத்தவரின் ஏதாவதொருவருடைய பெயர் அந்த பெயர் அட்டவணையில் அல்லது பெயர் பட்டியலில் பதிவு செய்த திகதி ;*

*(ஆ) அவ்வாறான நபரொருவர் அங்கத்துவத்திலிருந்து நிறுத்தப்பட்ட திகதி ;*

*(இ) அங்கத்தவரால் பெயர் கூறப்பட்ட நபரின் பெயரும் பெயர் கூறிய திகதியும்.*

*சங்கத்தின் ஏடுகளில் குறிப்பை ஒப்பு வித்தல்.*

*31.(1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று கொடுக்கல் வாங்கல்கள் செய்யும் போது முறைமையாக வைக்கப்பட்ட ஏட்டிலிருக்கும் குறிப்பின் பிரதியை ஒழுங்குவிதிகளின் நியமப்படுத்தியதொரு வகையில் உறுதிப்படுத்த முடியுமாயின் அக் குறிப்பு நடைமுறைப்படுத்துவதற்காக பார்க்கும் பார்வையில் ஏற்றுக்கொள்ளக் கூடிய சாட்சியாகவும் ஏதொரு சிவில் அல்லது தண்டனை சட்டப்படைக்களினால் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் அக் குறிப்பை ஏற்றுக்கொள்ளும் எவ் வேளையிலும் ஏற்றுக்கொள்ளும் அளவில் அப் பிரதிகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் கொடுக்கல் வாங்கல்களும் கணக்குகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*(2) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் பங்குதாரர் அல்லாத யாதேனுமொரு சட்ட விடயத்தில் (1) முதலாவது உப பிரிவின் கீழ் நிரூபிக்கக் கூடிய விடயங் களை உள்ளடக்கிய அச்சகத்தின் புத்தகங்களின் ஏதாவது ஒரு புத்தகத்தை முன்வைக்கும் படி அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விடயங்கள் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கை நிரூபிப்பதற்காக சாட்சிதாரராக முன்நிற்கும்படி நீதி மன்றத்தினால் விசேட காரணங்களின் அடிப்படையில் கொண்டு வந்து அதனை செய்வதற்கு உத்தரவு பிறப்பித்தாலன்றி அந்த சங்கத்தின் எந்த ஒரு பதவிக்கும் அதிகாரம் அளிக்கப்படக் கூடாது.*

*32 (1) காலத்துக்கேற்ப செல்வாக்குள்ள வரையப்பட்ட சட்டத்தின் அல்லது வேறு சட்டங்களை கவனியாது பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால்,* *சங்கப் பிணையான பாதுகாப்பு பத்திரத்தை வைப்பு செய்தல்.*

(அ) *சாதாரண கணக்கில் சம நிலைக்காக பிணையாக அச் சங்கத்துக்கு உரித்தான பாதுகாப்பு பத்திரத்தை பிணையாக வைக்க முடியும்.*
மேலும்,

(ஆ) *கூட்டுறவுச் சங்கத்துக்கு கொடுக்கப்பட்ட அறிவித்தல் முடிவடையும் தினத்தில் பணத்தை கொடுக்காவிட்டால் நீதிமன்றத்திற்குச் செல்லாது அக் காப்பு பத்திரங்களின் சிலவற்றை விற்று அல்லது முழுவதையும் விற்று அதனால் கிடைக்கும் பணத்தை கணக்கை சமப்படுத்தும் படி கடனாளிக்கு அதிகாரத்தை ஒப்படைக்கலாம்.*

*33. பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் நோக்கங்கள் தொடர்பான காரியங்களுக்காக காணி, கட்டடங்கள் அல்லது வேறும் அசைவுள்ள விற்கும் அசைவற்ற ஆதனங்களை விலைக்கு வாங்குதல் பரிசாகவோ அல்லது வேறு வகையில் கையேற்றல் அல்லது குத்தகைக்கு எடுத்தல், விற்றல் பண்டமாற்றுசெய்தல் அல்லது வேறு வகையில் கையேற்றல் அல்லது நீக்கிக் கொள்ள முடியும்.* *சொத்துக்களை கை ஏற்றலும் அதன் உரிமையும்.*

*அப்படியாயின் ஏதும் அசைவற்ற சொத்துக்களுக்கு அல்லது இந் நியதிச் சட்டத்தின் கீழ் இதனால் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் நிச்சயமாக குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் அசைவுள்ள சொத்துக்களுக்கு பொருந்தும் வகையில் இந் நியதிச் சட்டத்தின் வாசகங்களின் முன்னுள்ள நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் கொடுக்கல் வாங்கல் தொடர்புபட்டிருந்தால் அவ்விடத்தில் பதிவாளரின் பூரண அங்கீகாரத்துடன் எழுத்து மூலத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.*

*34. (1) பதிவு செய்த சங்கத்தின் நோக்கங்களுக்கு சம்பந்தமாக ஏதும் காரியத்துக்காக ஏதும் இடத்தை அல்லது கட்டடத்தை தேவையான சந்தர்பத்தில் அக் காரியம் பொதுக் காரியமாக கணித்தல் வேண்டும். மேலும் அரசாங்கத்தால் அல்லது வட மத்திய மாகாண சபையால் அச் சங்கத்துக்காக காணி கையேற்கும் சட்டத்தின் கீழ் அக் காணியை அல்லது கட்டடத்தை கையேற்க முடியும்.* *காணி கட்டடங்கள் கட்டாயமாக கையேற்றல்.*

*(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்காக அரசாங்கத்தால் காணி கையேற்கும் சட்டத்தின் கீழ் ஏதும் காணியை, கட்டடத்தை கையேற்கும் சந்தர்ப்பத்தில் சபை அல்லது சங்கத்தினால் அந்த காணி அல்லது கட்டடம் தொடர்பாக அச் சட்டத்தின் 38 ஆவது வாசகத்தின் பிரகாரம் கட்டளை பிறப்பிப்பதற்கு முன் அக் காணி அல்லது கட்டடம் தொடர்பாக கொடுக்க வேண்டிய நட்ட ஈட்டை அச் சட்டத்தின் கீழ் நிச்சயப்படுத்தப்பட்ட பணத்தையும் கையேற்பதற்கான காரணங்களில் அரசாங்கத்தால் அல்லது மாகாண சபையால் செய்யப்படும் செலவை அரசாங்கம் அல்லது மாகாண சபை செலுத்த வேண்டும்.*

*அப்படியாயினும் அச் சட்டத்தின் கீழ் நட்டஈட்டுப் பணத்தை நிச்சயப்படுத்துவதற்கு முன் ஏதும் கருமத்தின் காரணமாக காணி அல்லது கட்டடத்தை கையேற்கும் போது தேவைப்படும் அந்தக் காணி அல்லது கட்டடத்துக்காக செலுத்த வேண்டி நட்டஈட்டை நிச்சயப்படுத்த முடியுமா என்பதை கையேற்கும் உத்தியோகத்தர் கருதும் பணத்தை கட்டளை பிறப்பிப்பதற்கு முன் அந்த கூட்டுறவுச் சங்கத்தினால் அரசாங்கத்துக்கு அல்லது மாகாண சபைக்கு கொடுத்தல் வேண்டும். மீதிப் பணம் இருந்தால் அம் மீதிப் பணத்தை சட்டத்தின் கீழ் நட்டஈட்டுப் பணம் நிச்சயிக்கப்பட்ட பின் செலுத்த வேண்டும்.*

## *V ஆம் அத்தியாயம்*

## *முத்திரைக் கட்டணத்தினாலும் கட்டணங்களினாலும் விடுபடல்*

*35. (1) பதிவு செய்யப்பட்ட சகல கூட்டுறவுச் சங்கங்களும்* *முத்திரைக் கட்டணங்களிலும் கட்டணங்களிலிருந்து விடுபடல்*

(அ) *பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் அதற்காக சங்கத்தின் நன்மைக்காக எழுதி கையொப்பமிடப்பட்ட சட்டப்படியான பதிவு தொடர்பாக அல்லது நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏதும் பதிவு தொடர்பாக அவ் உபவாசகத்தின் மூலம் விடுவிக்கப்படா விட்டால் அறவிடப்பட்ட கட்டணத்தை கொடுப்பதற்கு அச் சங்கம் உட்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் சட்டப்படியான பதிவு அல்லது மற்றைய பதிவுகள் தொடர்பாக ஏதும் வரையப்பட்ட சட்டத்தின் படி அறவிடக் கூடிய ஏதும் முத்திரைக் கட்டணத்தின்*

*மற்றும்*

(ஆ) பதிவேடு பதிவு செய்வதற்கு ஏற்புடைத்தான தற்காலத்தில் அதிகாரத்திலுள்ள சட்டப் படி கொடுக்க வேண்டிய கட்டணங்களிலிருந்து விடுபடல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்தவரினால் அந்த பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நன்மைக்காகவும் சங்கத்தின் வர்த்தக காரியங்களுக்கும் பொருந்தும் வகையில் எழுதி கையொப்பமிடப்பட்ட சட்டப்படியான பதிவேடு தொடர்பாக இவ் உபவாசகத்தின் மூலம் விடுவிக்காத போது அறவிடப்பட்ட கட்டணத்தை கொடுப்பதற்கு அவ் அங்கத்தவர் உட்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் அந்த சட்டப்படி பட்டியல் தொடர்பாகத் தான் வரையப்பட்ட யாப்பின் கீழ் அறவிடக் கூடிய ஏதும் முத்திரைக் கட்டணம் கொடுப்பதிலிருந்து சகல அங்கத்தவர்களும் விடுபட வேண்டும்.

## VI ஆம் அத்தியாயம்

### துணைச் சட்டங்களுக்கு பொருத்தமானதாக தயாரிக்கப்படும் நடவடிக்கைகள்

*சங்கத்தின் துணைச் சட்டத் தினால்அங்கத் தவர்கள் துணைச் சட்டங்களின்.*

36. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் சகல துணைச் சட்டத்திலும் அத் துணைச் சட்டம் பதிவு செய்யப்பட்ட பின் சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தவரினாலும் அச் சட்டத்துக்கு கையொப்பம் வைக்கப்பட்டால் அந்த கட்டுப்படல் நடவடிக்கையை கடைப்பிடிப்பதற்கு ஒவ்வொரு அங்கத்தவரும் கட்டுப்பட்டு இத் துணைச் சட்டத்துக்குட்பட்டால் அவ்வளவுக்கு அச் சங்கமும் அங்கத்தவரும் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் துணைச் சட்டத்தின் பொருள் விளக்கம் தொடர்பாக ஏற்படும் ஏதும் முரண்பாட்டுக்கு தீர்மானம் எடுப்பதற்காக பதிவாளரின் கவனத்துக்குக் கொண்டு வருவதோடு அது தொடர்பாக அவரின் தீர்மானம் சட்டப் படி இறுதியான முடிவாக இருக்க வேண்டும்.

*வர்த்தகத்தை தடை துணைச் சட்டங் களை தயாரிக்கும் அதிகாரமும் அங் கத்தவர்களுக்கு தண்டம் நியமப் படுத்தும் துணைச் சட்டங்களை தயா ரிக்கும் அதிகாரம்.*

37. (1) ஏதும் ஒழுங்கு விதிகளின் படி ஏதொரு காரணிக்காக துணைச் சட்டத்தை தயாரிக்கும் அதிகாரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் தயாரிக்கப்படும் எந்தவொரு துணைச் சட்டத்தில் வர்த்தகத்தை தடை செய்தலுக்கான ஒப்பந்தம் என்ற காரணத்தால் மட்டும் எந்தவொரு நீதிமன்றத்திலும் கேள்விகள் எழுப்பப்படக் கூடாது. அதற்காக இந்நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் நடவடிக்கைகளுக்கு அனுகூலமாக இருத்தல் கூடாது.

(அ) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தினால் தயாரிக்கப்படும் துணைச் சட்டங்களினால் அந்த கூட்டுறவுச் சங்கம் துணைச் சட்டங்களை மீறுதல் சம்பந்தமாக அங்கே அங்கத்தவர்களுக்கு ஏதும் ஒழுங்கு விதிகளுக்கு கீழ் தண்டம் நியமப்படுத்துவதற்காக நியதிச் சட்டங்களை தயாரிக்கலாம். அப்படியாயினும் தண்டணைக்காக தண்டம் வழங்கும் தீர்ப்பு கூறும் போது

(ஆ) கூட்டுறுவுச் சங்கத்தின் அந்த தண்டணையை வழங்க எண்ணுவதாகவும் அதற்கான காரணத்தை குறிப்பிட்ட அங்கத்தவருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் அன்றி உப

(இ) ஒழுங்கு விதியால் நியமப்படுத்தக் கூடிய காலத்துக்குள்ளும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள படி அத் தண்டத்தை வழங்கியதற்கு எதிராக தேவையான காரணத்தை காண்பிப்பதற்கு அவ் அங்கத்தவருக்கு இயலாமலிருந்தாலன்றி எந்தவொரு அங்கத்தவருக்கு தண்டனை வழங்க முடியாது.

## VII ஆம் அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் வர்த்தக சொத்துக்களும் நிதிய முகாமைத்துவமும்

*அறக்கொடை நிருவாகமும் பொறுப்பும்.*

38. (1) பதிவு செய்த சங்கத்தின் நோக்கங்களுக்கு பொது சபையால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு வரவு செலவு தொடர்பான பொறுப்புகள் செலவு மதிப்பீட்டுக்கு இணங்க அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அதன் வர்த்தக காரியங்களை நடாத்திக் கொண்டு செல்லல் சங்கத்தின் நிர்வாக சபையின் செயற் குழுவின் பொறுப்பாகும். கவனயீனமாக வேண்டுமென தட்டிக் கழித்தல் , அங்கீகரிக்காத செலவுகள் அல்லது அங்கீகரிக்காத முதலீடுகளினால் சங்கத்துக்கு ஏற்படும் நட்டங்களை நிர்வாக சபையும் நிறைவேற்று அதிகார மட்ட முகாமையாளர் பொறுப்பு கூற வேண்டும்.

(2) மேலே 1 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி செயல்படாது செய்யப்படும் செலவுகளை அங்கீகரித்த நபரிடம் அறவிட்டுக்கொள்வதற்கு ஆணையாளர் செயல்பட வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட துணைச் சட்டத்தில் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு புறம்பாக செயல்களுக்காக சங்கத்தின் நிதியத்தை இடுவதற்கு தேவையான சந்தர்ப்பங்களில் அச் சங்கத்தின் பொது சபையின் முழு அங்கத்தவர்களின் மூன்றில்இரண்டு பங்கினரின் விருப்பத்தையும் பெறுதல் வேண்டும்.

39. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்துவம் இல்லாத ஒருவருக்கு ஏதும் பட்ட கடன் பணம் கொடுத்தலாகாது அப்படியாயினும் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று பொது சபையின் அங்கீகாரத்துடன் , பொது சபையால் வேறொரு கூட்டுறவுச் சங்கத்துக்கு கடன் வழங்க முடியும். வர்த்தக காரியங்களுக்காக சங்கத்தின் அந்நிய பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட நபரோடு அல்லது வேறு நிறுவனத்தோடு முறைமைசார் ஒப்பந்தப்படி பொருட்களை கடனுக்கு விநியோகிக்க முடியும். அதே போன்று பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் அண்மிய அங்கத்தவருக்கும் முறைமைசார் ஒப்பந்தப் படி பொருட்களை கடனுக்கு கொடுக்க முடியும். அதற்காக ஒழுங்குவிதிகளிலுள்ள நடவடிக்கையின் படி சொத்துக்களை பிணையாக வைத்துக் கொள்ள முடியும்.

பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் கொடுக்கப்படும் கடன்.

40. (1) பதிவு செய்யப்பட்ட சங்கம் சட்டத்தினால் நியமப்படுத்தக் கூடிய பிரமாணத்துக்கும் அவ்வாறு நியமப்படுத்தக் கூடிய நிபந்தனைகளின் கீழ் மட்டும் அங்கத்தவரல்லாத நபருடைய வைப்பும் கடன் பணத்தையும் வைப்புகளும் கடன் அடவும் வைப்பும் பணமாக ஒழுங்குவிதிகள் தயாரித்துள்ள நடவடிக்கைகளுக்கு அனுகூலமாதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் பெறப்படும் வைப்பும் பணமும்.

41. (1) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சபையின் சங்கத்தினால் அங்கத்தவரல்லாத நபருடன் செய்து கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் 39 வது 40 ஆவது வாசகத்தின் நடவடிக்கைகளில் தயாரிக்கப்பட்டதை தவிர்த்து ஒழுங்கு விதிகள் நியமப்படுத்திய தடைகளும் வரையறுக்கப்படுதலுக்கு உட்படல் வேண்டும்.

அங்கத்தவரல்லாத நபர்களுடன் வேறு கொடுக்கல் வாங்கல்களை வரையறுத்தல்.

42 (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் பொறுப்பு கட்டளைச் சங்கத்தின் 20 ஆவது வாசகத்தில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள அசைவற்ற சொத்துக்கள் தொடர்பாக அடவு இல்லாத ஏதொரு பாதுகாப்பு பத்திரங்களில் அல்லது ஒழுங்குவிதிகளில் நியமம் செய்யப்படும் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் அல்லது வேறு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் பங்குகளுக்கு, பிணைக்கு ஒழுங்குவிதிகளில் நியமப்படுத்திய அனுமதியைக் கொடுத்துள்ள வேறு வகையான சங்கத்தின் மூலதனத்தை வைப்பில் வைத்தல் அல்லது முதலீடு செய்தல் முடியும்.

சங்கத்தின் மூலதனத்தை முதலிடல்.

(2) இந் நியதிச் சட்டம் செயல்பட்டிருந்தால் செல்லுபடியாகக் கூடிய இச் சட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் செய்யப்பட்ட ஏதும் வைப்பு அல்லது முதலீடு இதனால் செல்லுபடியாக நிரந்தரம் ஆக்கப்படும்.

43. (1) பதிவு செய்யப்பட்ட சகல சங்கங்களினாலும் இச் சட்டத்தின் 44 வாசகத்தின் கீழ் கணக்காய்வினால் நிச்சியப்படுத்தப்பட்ட நிதி ஆண்டுக்குள் கிடைத்த தேறிய இலாபத்தில் -

இலாபம் பற்றி தகமையாக்கல்.

(அ) 25 வீதத்துக்கு குறையாத பணத்தை சங்கத்தின் உறங்கு நிதியத்துக்கும் சட்டத்தால் ஆக்கப்பட்ட நிதியத்துக்கும் மாற்ற முடியும் அதே போன்று ;

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் /பதிவாளரால் கூட்டுறவு அபிவிருத்தி மூலதனம் என்ற பெயரில் அறக் கொடை ஒன்றை அமைத்தல் வேண்டும். வருடாந்த கணக்காய்வில் நிச்சயப்படுத்தும் வகையில் சங்கத்தின் தேறிய இலாபத்தில் 10% வீதத்தை அறக் கொடைக்கு உபயமாக கொடுக்க முடியும். உரிய பணம் வருடத்துள் சங்கம் தேறிய இலாபத்தை பெறாத நிலையில் ரூபா ஆயிரம் (1,000/ரூபா) அறக் கொடைக்கு செலுத்த வேண்டும். இந்த அறக் கொடை ஒழுங்குவிதிகளால் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் ஆணையாளர் , பதிவாளரினால் நிருவகித்தல் வேண்டும்.

(இ) அங்கத்தவரின் கல்வி அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் அறக் கொடை ஒன்றை சகல பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யக் கூடிய எல்லா கூட்டுறவுச் சங்கமும் அமைத்தல் வேண்டும்.

(ஈ) கூட்டுறவு சங்கமொன்று கணக்காய்வு செய்யும்போது வெளிப்படும் மேலதிக பணத்தை உறங்கு நிதியத்துக்கும் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்துக்கும் வேறுபடுத்திய பின் மிகுதி இலாபத்தின் எஞ்சியதில் 10% அங்கத்தவர்களின் கல்வி அபிவிருத்தி நிதியத்துக்கு வேறுபடுத்தலாம்.

(2) (அ) நிருவாக சபையினால் இந் நிதியத்தை சங்கத்தின் பொது சபையினால் தீர்மானிக்கப்பட்டு தயாரிக்கப்படும் ஒழுங்கு விதிகளின் மூலம் தயாரிக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அமைவாக பரிபாலிக்க வேண்டும்.

(ஆ) மேலே (2) (அ) வும் (ஆ) வாசகத்தின் குறிப்பிடப்பட்டுள்ள படி பாடசாலை அபிவிருத்தி சங்கத்துக்கு பொருந்தாது.

(3) தேறிய இலாபத்தின் மிகுதியின் 10% அதிகபட்ச இலாபத்தை பகிர்தல் வரிகள் செலுத்தல், நிதியத்துக்கு பங்களிப்பு பணம் கொடுத்தல், 10% அதிக பட்சத்தின் கீழ் சேவையாட்களின் பணி கொடைக்கு அளித்தல், நலன்புரிச் சங்கத்துக்கு கொடுத்தலும் 10% பகுதியை பொது கருமங்களுக்கு ஒதுக்குதல் பற்றி ஒழுங்குவிதிகளில் உள்ள நடவடிக்கைகளின் படி காரியங்களைச் செய்தல்.

(4) அப்படியாயினும் பதிவாளரின் சிறப்பான அல்லது பொதுவான அங்கீகாரம் இல்லாது நியமங்களுக்கு அல்லாது வேறு வகையில் இலாபப் பங்கீடு செய்ய முடியாது.

## VIII ஆம் அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கணக்கு வரவு செலவும் கணக்காய்வும்.

கணக்காய்வு.

44 (1) சகல பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் வருமானமும் செலவும் சொத்துக்களின் வரவுகளும் மற்றும் சகல கொடுக்கல் வாங்கல் தொடர்பாக முறையான கணக்குகள் நடாத்துவதற்கு ஆவண செய்ய வேண்டும்.

(2) பதிவாளரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதொரு நபரால் நியமிக்கப்பட்ட சங்கத்தின் செயற்பாட்டுக்கு பொருத்தமாக கணக்குகளும் புள்ளி விபரம் பற்றி வருடாந்த வெளியீட்டை சகல பதிவு செய்யப்பட்ட சங்கங்களினாலும் தயாரித்தல் வேண்டும். அக் கணக்கு வெளியீட்டுப் பணம் வருடம் முடிவடைந்து மூன்று மாதத்துக்குள் பதிவாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறொருவருக்கு சங்கத்தால் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3).ஆகக் குறைந்தது ஒரு வருடத்ததுக்கு ஒரு முறையாவது பதிவாளரினால் அனுமதியளிக்கப்பட்ட ஒருவரைக் கொண்டு கணக்குகளை கணக்காய்வு செய்து கொள்வதற்கு சகல பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச்சங்கங்களும் பொறுப்பு நிற்க வேண்டும்.

கணக்காய்வின் குறைபாடுகளை சங்கத்திடம் அறிவித்தல்.

45. (1) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளின்போது ஏதும் செயற்பாடுகள் 44 வது வாசகத்தின் கீழ் செய்யப்பட்ட கணக்காய்வின்போது வெளிப்பட்டால் பதிவாளர் அவர்களினால் அக் குறைபாடுகள் சங்கத்துக்கு அறிந்து கொள்வதற்கும் அச் சங்கம் வேறொரு சங்கத்தின் அங்கத்தவராயின் அங்கத்துவ சங்கத்துக்கு தெரிந்து கொள்வதற்கு ஆவண செய்ய வேண்டும்.

(2) பதிவாளரினால் வெளியிடப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக மாற்று நடவடிக்கை எடுப்பதற்காக பதிவாளரின் கட்டளையில் நிச்சயமாக குறிப்பிட கூடிய ஏதும் நடவடிக்கையை குறித்த காலத்துள் எடுக்குமாறு சங்கத்துக்கு அல்லது உத்தியோகத்தருக்கு கட்டளை பிறப்பிக்க முடியும்.

(3) பதிவாளரினால் செய்யப்படும் கட்டளைகள் மீறும் அல்லது புறக்கணிக்கும் சங்கத்துக்கு அல்லது உத்தியோகத்தருக்கு எதிராக இச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் உள்ள அதிகாரங்களின் கீழ் நடைமுறைப்படுவதற்கு பதிவாளர் செயல்படல் வேண்டும்.

## IX அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் விசாரணைகள் பரிசீலனை அல்லது விமர்சனங்கள்

*பரீட்சைகள்*

46. (1) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமொன்றின் அங்கத்துவப் பணம் அல்லது அங்கத்துவரல்லாத பணம் பாவிக்காத சந்தர்ப்பத்தில் பதிவாளரினால் தனது வழிகாட்டலில் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் ஒன்று திரட்டிய செயற்பாட்டுக்கும் பண நிலை பற்றிய விசாரணை ஒன்று நடத்த முடியும். மேலும் அச்சங்கத்தின் நிருவாகசபையின் பெரும்பான்மை அல்லது பொது சபை கூட்டத்திற்கு துணைச் சட்டத்தின் படி தகைமை பெற்றுள்ள அங்கத்தவர்கள் அல்லது பிரதிநிதிகளின் மூன்றிலொன்றுக்கு குறையாத தொகையினரோ அல்லது நூறு பேர் இதில் இரண்டிலும் குறைந்த தொகையினர் அல்லது எழுத்து மூலம் கேட்கும் இடத்து சங்கத்தின் ஒன்று திரட்டிய செயற்பாட்டின் பணநிலை தொடர்பாக விசாரணையை பதிவாளரினால் நடத்தல் வேண்டும். அதே போன்று பதிவாளரினால் தமது எழுத்து மூலக் கட்டளையினால் அதிகாரமளிக்கும் நபருக்கு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் ஒன்று திரட்டலுக்கும், செயற்பாட்டுக்குமாக நிதி நிலைமை தொடர்பாக விசாரணை ஒன்றை நடத்துவதற்கு கட்டளை இடலாம். அப்படியாயினும் இங்கு 1 ஆவது வாசகத்தின் நடவடிக்கையில் ஒழுங்கு செய்யப்பட்டதன் படி விசாரணை நடத்துவதற்கு அல்லது விசாரணை நடத்துவதற்காக கட்டளை இடுவதற்கு முன் தேவையென உணரின் அவ்வாறான விசாரணை நடத்துவதற்கு தகுந்த காரணிகள் இருக்கிறதா என்பது பற்றி திருப்தி கண்டு பின் உரிய முறையில் பூரண விசாரணை நடத்துவதற்காக கட்டளை பிறப்பிக்க பதிவாளருக்கு அதிகாரம் உண்டு.

(2) (1) ஆவது உப வாசகத்தின் கீழ் விசாரணை நடத்தும் பொறுப்பு பதிவாளர் அல்லது விசாரணை நடத்துவதற்காக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட யாதொரு நபருக்கு கொடுக்கலாம்.

(அ) பதிவாளரின் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அந் நபரின் விருப்பத்துக்கு இணங்க சங்கத்தின் ஏதொரு கொடுக்கல் வாங்கல் அல்லது தொடர்பான காரியங்களுக்குரிய முக்கியமான தகவல்களை அளிக்கக் கூடிய சங்கத்தின் முன்னிருந்த அல்லது தற்போது இருக்கும் உத்தியோகத்தருக்கு, பிரதிநிதிக்கு, சேவையாட்களுக்கு அல்லது அங்கத்தவருக்கு அண்மிய அங்கத்தவருக்கு வேறொரு நபருக்கு அழைப்பு விடுக்கலாம்.

(ஆ) சங்கத்தின் கருமங்களுக்குட்படுத்திய ஏடுகள் அல்லது பட்டியல்கள் சங்கத்துக்கு சொந்தமான நிதி அல்லது வேறு சொத்துக்களை உரித்தாக்கும் போது உள்ள உரிமையாளர் அல்லது பொறுப்பாக இருந்த நபர் சங்கத்தில் முன்பிருந்த அல்லது தற்போது இருக்கும் ஏதும் உத்தியோகத்தருக்கு , பிரதிநிதிக்கு அல்லது வேறு ஏதும் நபருக்கு சமர்ப்பிக்குமாறு நியமப்படுத்த முடியும்.

(இ) தன்னால் ஈடுபடுத்திய , ஈடுபடுத்தும் ஏதும் காரியங்களைத் தீர்மானிப்பதற்காக தன்னால் குறிப்பிடப்பட்ட ஏதும் நோக்கத்துக்கும் இடத்துக்கும் சங்கத்தின் பொது சபைக் கூட்டத்துக்கு அழைத்தலுக்கு

(ஈ) அந்த விசாரணையின் போது தன்னால் நேர்மையீனங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டால் சங்கத்தின் கணக்கேடு அல்லது பதிவுகளை தனது பொறுப்பிலேற்கும் அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(3) (2) ஆவது உப வாசகத்தின் (இ) பந்தியின் கீழ் அழைக்கப்படும் ஏதொரு பொது சபைக்கு சங்கத்தின் துணைச் சட்டத்தின் கீழ் அழைக்கப்படும் பொது சபைக்கு சகல அதிகாரங்களும் இருத்தல் வேண்டும். மேலும் அக்கூட்டத்திற்கு கோரம் இருத்தல் வேண்டும். அல்லாவிட்டால் பொது சபை கூட்டத் துணைச் சட்டத்திலுள்ள நடவடிக்கைகள் அக் கூட்டத்துக்கு பொருத்தமாகாது எனும் விசேடங்களைத் தவிர்த்து அந்த துணைச் சட்டங்களின் அதன் செயல்பாடுகளை முறைப்படுத்த வேண்டும். பதிவாளருக்கு அக் கூட்டத்திற்கு தலைமை வகிக்க முடியும். இருந்தாலும் அவருக்கு வாக்குரிமை இல்லை. வாக்குகள் சமமாக இருக்கும் போது அவருக்கு தீர்மான வாக்கு அளிக்கும் அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(4) இந் நியதிச் சட்டத்தின் கீழ் விசாரணை ஒன்றை முடிப்பதற்கு முன் நிருவாக சபைக்கு எதிராக முதல் பார்வையிலே முறைபாடு உறுதியாகி விட்டதென பதிவாளர் நினைத்தால் நிருவாக சபையை ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தவும் சங்கத்தின் வேலைகளையும் முகாமைமை பரிபாலனம் செய்வதற்கு இடைக்கால சபையை நியமிப்பதற்கு அவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அந் நிருவாக சபையை இடைநிறுத்தப்பட்ட தினத்திலிருந்து ஆறு மாதத்துள் அவ் விசாரணையை பதிவாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபரால் நியமப்படுத்த வேண்டும். அந் நிருவாக சபை தொடர்பாக 60 (அ) என்ற வாசகத்தின் கீழ் இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டும்.

(5) இந் நியதிச் சட்டத்தின் படி விசாரணை நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பதிவாளரினால் அவ் விசாரணையின் பெறுபேற்றை சங்கத்திடமும் அச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு வேறு சங்கமாக இருந்தால் அச் சங்கத்துக்கும் ஏதொரு வங்கியிடம் கடன் பெற்று இருந்தால் அவ் வங்கிக்கும் அறிவித்தல் வேண்டும்.

(6) பதிவாளர் இச் சட்டத்தின் பிரகாரம் விசாரணை ஒன்று நடத்துவதற்கு அவரால் அதிகாரமளிக்க, அளிக்கப்பட்ட சகல நபருக்கும் தண்டனை சட்டக் கோவையின் பொருள் விளக்கத்திற்கேற்ப அரச உத்தியோகத்தராக கருதப்படும்.

சங்கத்தின் பதிவேடுகளை பரிசீலனை செய்தலும் அதன் கருமங்களை விமர்சனம் செய்தலும்.

47.(1) பதிவாளரினால் தனது தேவையாகவோ சங்கத்தின் நிருவாக சபையின் பெரும்பான்மை அல்லது பொது சபை கூட்டத்துக்கு சமுகமளிப்பதற்கு துணைச் சட்டத்துக்கமைய தகமையுள்ள அங்கத்தவர் அல்லது பிரதிநிதிகள் மூன்றில் ஒன்றுக்குக் குறையாத அல்லது நூறு என்று இவற்றில் எது குறைவானது அல்லது கடனாளியின் எழுத்து மூலமான வேண்டுதலுக்கிணங்க பதிவு செய்யப்பட்ட ஏடுகள் தொடர்பாக பரிசீலனை செய்ய வேண்டும். அல்லாவிடத்து அது விடயமாக கடித மூலம் கட்டளை ஒன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதொரு நபருக்கும் அப் பதிவேட்டை பரிசீலனை செய்யும் படி கட்டளை பிறப்பிக்க முடியும்.

(அ) அவ்வாறாயினும் விண்ணப்பதாரர் கடனாளியாக இருந்தால் அவரினால் ஏதும் நிச்சயிக்கப்பட்ட பணம் அவருக்கு கிடைத்தல் வேண்டும் என்பதும் அவர் அதனை கொடுக்கும் படி கேட்டுள்ளார் எனவும் பொதுவான காலத்துள் அவருக்கு அது கிடைக்கவில்லையெனவும் நிரூப்த்தால் ;

(ஆ) உரிய பரிசீலனை கட்டணமாக பதிவாளரினால் நியமம் செய்த பணத் தொகையை பிணையாக பதிவாளரிடம் வைப்புச் செய்தாலன்றி கடனாயின் வேண்டுதலின் பெயரில் பதிவேடுகளை பரிசீலனை செய்ய வேண்டியதில்லை.

(2) பதிவாளர் தனது தேவையின் பெயர் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் செயல்பாடுகளை விமர்சனம் செய்ய முடியும். அல்லாவிட்டால் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட நபரிடம் அவ்வாறு விமர்சனம் செய்யும் படி கட்டளை இடலாம்.

(3) பதிவாளரினால் அல்லது பதிவாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் விமர்சனம் அல்லது விசாரணை பற்றிய அதிகாரம் தஸ்தாவேஜூகள் , பதிவேடுகள் தனது பொறுப்பில் ஏற்பதற்கான அதிகாரம் உள்ள போது வங்கிகளுக்கு அறிவிக்கும் உரிமை விசாரணை விமர்சனங்களில் தேவையான கட்டணத்தை அற உரிமை விமர்சனங்களில் தேவையான கட்டணத்தை அறவிடும் உரிமை நீதவான் நீதிமன்ற கட்டளையை நிறைவேற்றும் அதிகாரம் அங்கத்தவர்களை அழைக்கும் அதிகாரம் இருத்தல் வேண்டும். உத்தியோகத்தருக்கு , பிரதிநிதிக்கு சேவையாளுக்கு அங்கத்தவருக்கு அண்மிய அங்கத்தவருக்கு அல்லது வேறு நபருக்கு தகவல்களை பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது சமர்ப்பிப்பதற்கான உரிமைகள் பதிவுகளை பொறுப்பேற்கும் உரிமை, தகவல்களை விசாரித்தல் அல்லது பெற்றுக் கொள்ளல் உரிமை தொடர்பாக ஒழுங்குவிதிகளில் நடவடிக்கைகள் தயாரித்தல் வேண்டும்.

(4) ஏதொரு சங்கம் அல்லது கடன் சங்கமொன்று தொடர்பாக இந் நிதியச் சட்டத்தின் படி கட்டணமாக நியமம் செய்யப்பட்ட பணத்தை அறவிடும் படி அச்சங்கத்தை பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள அல்லது கடனாளி வதியும் இடம் சம்பந்தமாக நீதிமன்ற அதிகாரமுள்ள நீதவான் நீதிமன்றத்தில் வேண்டிக் கொண்ட விடத்து அந் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனையை அறவிட்டுக் கொள்ளும் முறையில் அறவிட்டுக் கொள்ள முடியும்.

(5) பதிவாளரினால் பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒன்றின் பதிவேடுகளை பரிசீலனை செய்வதற்கு அல்லது விமர்சனம் செய்வதற்கு அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட சகலரும் தண்டனை சட்டக் கோவை பொருள் விளக்கத்துடன் அரச சேவையாளராக கவனித்தல் வேண்டும். அதோடு ஒழுங்குவிதிகளில் தயாரித்த நடவடிக்கைகளின் படி அவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

X ஆம் அத்தியாயம்

*பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் உத்தியோகத்தரின் சேவையை இடைநிறுத்தல் அல்லது வேலையிலிருந்து விலக்குதல் உத்தியோகத்தரை நீக்குதலும் பதிவு செய்யப்பட்ட சபையின் நிர்வாக சபையை கலைத்தல், நிர்வாகசபைக்கு அங்கத்தவர்களை நியமித்தல் போன்றன.*

*கலைத்தல்.*

*48. (1) 46 சரத்தின் கீழ் விசாரணை ஒன்றில் அல்லது 47 சரத்தின் படி விசாரணை ஒன்றின் அல்லது 47 ஆவது வாசகத்தின் படி விசாரணை ஒன்றின் அல்லது விமர்சனத்தின் பின் பதிவு செய்த ஏதும் கூட்டுறவு சங்கத்தின் நிருவாக சபையின் அல்லது நிருவாக சபையின் அங்கத்தவர்கள் தங்களுடைய கடமைகள் சுய காரியங்களை ஒழுங்கான முறையில் நிறைவேற்றவில்லையென பதிவாளர் கருதுவராயின் அந்த நிருவாக சபையின் ஏதொரு அங்கத்தவரை பதவியிலிருந்து நீக்குதல் அல்லது அது சம்பந்தமாக எதிர்ப்பு ஏதும் இருந்தால் அவ் எதிர்ப்பை எழுத்து மூலம் வெளியிடுவதற்கு அவரால் அந் நிர்வாக சபைக்கு அல்லது அந் நிருவாக சபையின் எவரேனுமொரு சந்தர்ப்பமொன்றை பெற்றுக் கொடுத்ததன் பின் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூல வெளியீட்டை கவனத்தில் கொண்ட பின் -*

(அ) அந்த நிருவாக சபையை கலைத்தல் அல்லது அந் நிருவாக சபையின் அங்கத்தவரை அல்லது அங்கத்தவர்களை பதவியிலிருந்து நீக்க முடியும் ;

மேலும்

(ஆ) அவ்வாறு நீக்கப்பட்ட நிர்வாக சபையின் ஏதொரு நிர்வாக அங்கத்தவர் தொடர்பாக உள்ள பற்றாக் குறைக்கு 14 நாட்களுக்குள் நிவர்த்தி செய்து கொள்ளுமாறு அச் சங்கத்துக்கு கட்டளை இடலாம்.

(இ) அக் காலத்துள் சங்கம் பதிவாளரின் நியமப்படி கருமமாற்றாதபோது சங்கத்தின் முகாமைத்துவத்தை வருடத்தின் எஞ்சிய காலத்துக்காக அல்லது அச் சங்கத்தின் முகாமைக்காக ஒரு நபரை அல்லது பல நபர்களை நியமிக்க முடியும். அந் நிருவாக சபைக்கு சகல உரிமைகளும் சலுகைகளும், அதிகாரங்களும் இருக்கும்.

(ஈ) மேலே 1 ஆம் பந்தியின் படி கலைக்கப்பட்ட நிருவாக சபை அங்கத்தவருக்கு அவர் நீக்கப்பட்ட தினத்திலிருந்து 7 வருடங்கள் கழியும் வரை பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் நிருவாக அங்கத்தவராகும் தகைமை சட்டப்படி செல்லுபடியாகாது.

(உ) அவ்வாறு சங்கத்துக்கு நியமிக்கப்படும் பரிபாலன சபையின் காலம் முடிவடைவதற்கு முன் சங்கத்தின் செயல்களை நடத்துவதற்காக துணைச் சட்டத்தின் படி நிருவாக சபையை நியமிப்பதற்கான காரியங்களை செய்வது அவருடைய பொறுப்பாகும்.

(2) இந் நியதிச் சட்டத்தின் 46 ஆவது சரத்தின் கீழ் விசாரணை ஒன்றினால் அல்லது 47 ஆவது சரத்தின் கீழ் பரிசீலனையின் அல்லது விமர்சனத்தின் பின் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் இருந்த நிர்வாக சபையோ அல்லது இருந்த நிர்வாக சபையின் அங்கத்தவரோ தனது கடமைகளை முறையாக நிறைவேற்றவில்லையென பதிவாளர் அவர்கள் கருதுவராயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் அங்கு இருந்த நிர்வாக சபை தொடர்பாக அல்லது அந் நிர்வாக சபையின் அங்கத்தவர் தொடர்பாக மேலே (அ) எனும் பந்தியின் படி நடவடிக்கைகளுக்கேற்ப கருமம் ஆற்றிய பின் -

(அ) அச் சங்கத்தின் முகாமைக்காக ஒருவரை அல்லது பலரை நியமிக்கலாம். அந்த நிர்வாக சபைக்கு சகல உரிமைகளும் சலுகைகளும் அதிகாரங்களும் இருத்தல் வேண்டும்.

(ஆ) மேலே 1ம் பந்தியின் படி கலைக்கப்பட்ட நிர்வாக சபையை அல்லது நிர்வாக சபையின் அங்கத்தவர்கள் அவ்வாறு நியமிக்கப்பட்ட நாளிலிருந்து 7 வருடங்கள் செல்லும் வரை நிர்வாக சபையின் அங்கத்தவராக நியமிக்க முடியாது.

(இ) அவ்வாறு சங்கமொன்றுக்கு நியமிக்கப்பட்ட நிருவாக சபையின் காலம் முடிவடைவதற்கு முன் சங்கத்தின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக இடைக்கால யாப்புக் கேற்ப நிருவாக சபையை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவர்களின் பொறுப்பாகும்.

(3) இந் நியதிச் சட்டத்தின் 46வது சரத்தின் கீழ் விசாரணையின் அல்லது 47 ஆவது சரத்தின் கீழ் விசாரணையின் அல்லது விமர்சனத்தினால் சங்கத்தின் அல்லது இருந்த நிர்வாக சபையின் ஏதொரு அங்கத்தவர் தனது கடமையை முறையாக நிறைவேற்றவில்லையென பதிவாளரின் கருத்தாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் அங்கிருந்த நிர்வாக சபை தொடர்பாக அல்லது அதன் அங்கத்தவர் தொடர்பாக மேலே (அ) எனும் பந்தியின் நடவடிக்கையின் படி செயல்பட்ட பின் கடித மூலமான கட்டளை ஒன்றினால் அந் நிர்வாக சபைக்கோ அல்லது அதன் அங்கத்தவருக்கோ அந்த கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது வேறு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக சபைக்கு தெரிவு செய்யும் நியமனம் சட்டப்படி செல்லுபடியாகாது.

(4) (அ) எனும் பந்தியில் (iii) ஆவது துணைப் பந்தியின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையின் படி நியமிக்கப்பட்ட ஒரு நபருடைய பதவிக் காலம் 56 ஆவது சரத்தின் (ஆ) எனும் பந்தியின் கீழ் நீக்கப்பட்ட நபருடைய மிகுதியுள்ள பதவிக் காலத்துக்கு எல்லையாதல் வேண்டும். அப்படியாயினும் ஏதொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் துணைச் சட்டங்களுக்கேற்ப பொது சபையை கூட்டி பொது சபையை கூட்டுவதற்காக தடையாக இருக்கும் துணைச் சட்டங்களில் நடவடிக்கைகள் இருந்தால் அவ்வாறான நடவடிக்கையிலிருந்து விடுவித்து பொது சபையை உருவாக்குவதற்காக தடையாக இருக்கும் நியமங்களை செய்வதற்கு பதிவாளருக்கு அதிகாரம் உண்டு.

(5) பதிவாளரினால் (அ) எனும் பந்தியின் கீழ் ஏதும் ஒரு கட்டளை பிறப்பித்த சந்தர்பத்தில் அந்த கட்டளையால் அல்லது பின்புள்ள கட்டளை ஒன்றினால் சங்கத்தின் வேலைகள், முகாமை நிர்வாகம் செய்வதற்கு தகுதியான பொருத்தமான அங்கத்தவருக்கு அல்லது அதற்கு மேற்பட்டவர்களை நியமிக்க முடியும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஏதும் நபரை காலத்துக்கு காலம் நீக்குவதற்கு அல்லது பதிலாக வேறொருவரை நியமிப்பதற்கு அல்லது மேலதிகமாக ஒருவரை நியமிக்க முடியும்.

(6) பதிவாளர் சாதாரண கட்டளைக்கும் நிர்வாகத்துக்குக் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் காரியங்கள் முகாமையையும் நிர்வாகம் செய்வதற்கு இந்த சரத்தின்படி நியமிக்கும் ஒருவருக்கு -

(அ) கூட்டுறவு சங்கத்தின் சொத்துக்களை அறவிடுவதற்கும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் அதன் நன்மைகளுக்காக தேவையான வேறு நடவடிக்கை எடுக்க அதிகாரம் உண்டு.

(ஆ) கூட்டுறவு சங்கத்தின் உரிய முறையில் ஆக்கமாக ஆக்க நிர்வாக சபைக்கு சகல உரிமைகளும் சலுகைகளும் இருப்பதோடு அவற்றை செயற்படுத்த முடியும். மேலும் அச் சங்கத்தின் செயல்கள் வினைத்திறனாக முகாமை செய்வதற்காக தேவையான சந்தர்ப்பத்தில் பொது சபைக்கு அதிகாரம் இருத்தலோடு அதனை செயல்படுத்த முடியும்.

(7) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தை பரிபாலிப்பதற்காக இவ் வாசகத்தின் படி நியமிக்கப்பட்ட ஆட்களால் சட்டத்துக்கு சட்டத்தின் துணைச் சட்டங்களுக்கு முரணாக செய்யப்படும் ஏதும் செயல்களால் சங்கத்துக்கு ஒன்றிணைந்து அல்லது வெவ்வேறாக பொறுப்பு கூறல் வேண்டும். சங்கம் ஏதும் தண்டணைக்கு உள்ளாகும்.

(8) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் செயல்களை நிருவகிப்பதற்காக இவ்வாசகத்தின் கீழ் பதிவாளரினால் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு கொடுக்க வேண்டிய மிகை உழைப்பு ஊதியத்தை பதிவாளரால் நியமப்படுத்த முடியும். இவ் மிகை உழைப்பு அந்த கூட்டுறவு சங்கத்தின் முகாமைக்கு ஏற்க வேண்டிய வேறு செலவுகள் இருந்தால் அச் செலவை அச் சங்க நிதியத்திலிருந்து செலுத்த வேண்டும்.

(9) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் செயல்களை நிர்வகிப்பதற்காக இச் சரத்தின் கீழ் நியமனம் பெறும் (அ) எனும் பந்தியில் (iii) ஆவது துணைப் பந்தியின் கீழ் கட்டளைகளின் அதிகாரம் செயலிழக்கும் தினத்துக்கு முன் தினத்தில் பதவியை வகிக்கும் நபரினால் அத் தினத்துக்கு முன் அச் சங்கத்தின் துணைச் சட்டத்துக்கு ஏற்ப புதிய நிர்வாக சபையை நியமிப்பதற்கு செயல்படல் அவருடைய பொறுப்பாகும்.

(10) 46 ஆவது வாசகத்தின் கீழ் விசாரணை ஒன்று அல்லது 47 வது சரத்தின் கீழ் விசாரணையோ அல்லாவிட்டால் விமர்சனமோ செய்து முடிப்பதற்கு முன் நிர்வாக சபைக்கு எதிராக முன் பார்வையிலே குற்றம் புரியப்பட்டதாக பதிவாளர் கருதுவாராயின் அந்த நிர்வாக சபையை ஆறு மாத காலத்துக்கு இடை நிறுத்துவதற்கும்

சங்கத்தின் வேலைகளை முகாமை செய்வதற்கும் நிர்வாகம் செய்வதற்குமாக இடைகால சபையை நியமிக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. அந்த நிர்வாக சபையை இடைநிறுத்திய தினத்திலிருந்து ஆறு மாத காலத்துக்குள் அவ் விசாரணையை அல்லது பரிசீலனையை அல்லது விமர்சனத்தை பதிவாளரினால் முடித்து வைப்பதோடு அந் நிர்வாக சபை (அ) எனும் பந்தியில்,

(i) துணை பந்தியின் கீழ் கலைத்து விடுவது தொடர்பாக இறுதி முடிவு எடுத்தல் வேண்டும்;

(ii) அவ்வாறு கலைக்கப்பட்ட நிர்வாக சபைக்கு பதிலாக பதிவாளரினால் மூவரைக் கொண்ட பரிபாலன சபையை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் ஒழுங்கு விதிகளின் நடவடிக்கைகளில் உள்ள தகமைகள் உடையவராக இருத்தல் வேண்டும்.

(12) (அ) 46 ஆவது சரத்தின் படி விசாரணை ஒன்றின் அல்லது 47 வது சரத்தின் படி பரிசீலனையின் பின் அல்லது விமர்சனத்தின் பின் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் ஏதொரு உத்தியோகத்தர் தனது காரியங்களை சரியாக செய்யாது விட்டால் அல்லது வினையத்திறனோடு தனது காரியங்களை நிறைவேற்றுவதற்கு தகுதியற்றவராக இருந்தால் அல்லது வேறு வகையில் செய்ய முடியாது என பதிவாளரின் கருத்தாக இருந்தால் இந்த நியதிச் சட்டத்தின் அல்லது வட மத்திய மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டு 9ம் இலக்க கூட்டுறவு சேவை ஆணைக் குழுவின் சட்டத்தின் அல்லது வேறு சட்டத்தின் முரண்பாடாக என்ன குறிப்பிடப்பட்டாலும் தனது எதிர்ப்பை காட்டுவதற்கு உத்தியோகத்தருக்கு அல்லது சேவையாளருக்கு சந்தர்ப்பத்தை அளித்த பின் தேவையான விசாரணை முடியும் வரை அவரால் கடிதம் மூலமாக அல்லது கட்டளை மூலமாக சந்தர்ப்பத்துக்கேற்ற வகை அவ் உத்தியோகத்தரின் சேவையாளரின் சேவையை இடை நிறுத்தவோ அல்லது வேலையிலிருந்து நீக்கவோ முடியும். அத்தோடு அவ் விசாரணையின் பின் உத்தியோகத்தரின் அல்லது சேவையாளரின் பதவியை நீக்க முடியும் அப்படியானாலும் இந்த சரத்தின் கீழ் செய்யப்பட்ட நீக்க கட்டளையில் திருப்தியடையாத ஏதும் சேவையாட்களினால் 30 நாட்களுக்குள் 1994 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க வட மத்திய மாகாண மாகாணசபை சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுறவு சேவை ஆணைக் குழுவின் தீர்ப்பு இறுதியான தாகும் ;

(ஆ) முதலாவது உப சரத்தின் கீழ் ஏதொரு உத்தியோகத்தர் சேவையாளரை அந்த நீக்கத்தின் கட்டளை கூட்டுறவு சேவை ஆணைக்குழுவிற்கு, சபையினால் ஆமோதிக்கப்பட்டிருந்தால் அல்லது 30 நாட்களுக்குள் அந்த கட்டளைக்கு எதிராக மனுவொன்றை தாக்கல் செய்யாத ஒரு சந்தர்ப்பத்தில் வேறொரு உத்தியோகத்தரை அல்லது சேவையாள் ஒருவரை சந்தரப்பத்திற்கேற்றவாறு தெரிந்தெடுத்துக் கொள்ள அல்லது நியமிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கைகளின் படி செய்து கொள்ள முடியும் ;

(இ) அரசாங்க நிதியினால் செயற்படும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமொன்றின் கருமங்கள் வினையத் திறனுடன் முகாமை சேர்வதுபற்றி உறுதி செய்வதற்காக அச் சங்கத்துக்கு அரசாங்கத்தால் அல்லது வட மத்திய மாகாண சபையால் செய்யப்படும் முதலீட்டில் அல்லது பணத்தினால் அல்லது பொருட்களினால் கொடுக்கப்படும் முற்பணம் அல்லது பாதுகாப்புகருமங்களுக்காக அந்த பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாக சபையால் அங்கத்தவரின் யாதும் ஒரு நபர் அல்லது தொகையினரின் பெயர் குறிப்பதற்கு அவசியம் என்றும் சந்தர்பத்திற்கு உகந்தது என்றும் பதிவாளர் கருதுவதாயின் அச் சந்தர்ப்பத்தில் அவ் நியதிச் சட்டத்தில் அல்லது வேறு சட்டத்தில் அல்லது சங்கத்தின் துணைச் சட்டத்தில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவரால் அவருடைய விருப்பத்தின் பெயரில் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் தேவையான பதிவு செய்த சங்கத்தின் நிர்வாக சபையின் அங்கத்தவராக ஒழுங்கு விதிகளின் நியமப்படுத்தியுள்ள படி ஆட்கள் தொகையினரின் பெயர்களை குறிப்பிடலாம்.

## XI ஆம் அத்தியாயம்

*பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தை கலைத்து விடல்.*

*கலைத்தல்.*

*49 (1). இந் நியதிச் சட்டத்தின் 46 வது சட்டத்தின் படி விசாரணை ஒன்றின் பின் 47 ஆவது சரத்தின் கீழ் விசாரணையின் படி அல்லது விமர்சனத்தின் பின் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவு சங்கத்தின் அல்லது அதன் அங்கத்தவரிடையே நான்கில் மூன்று பகுதியினரால் சங்கத்தை கலைப்பதற்கு வேண்டுதல் ஒன்று கிடைத்ததன் பின் அச் சங்கத்திற்கு எதிர்ப்பு காட்டுவதற்கும் கடனாளிக்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்த பின் அச் சங்கத்தை கலைத்து விட வேண்டும் என்ற பதிவாளர் கருதுவராயின் அவருக்கு எழுத்து மூலமாக கட்டளையால் கூட்டுறவு சங்கத்தின் பதிவை இரத்துச் செய்யலாம்.*

*(2) பதிவு செய்யப்பட்டுள்ளகூட்டுறவு சங்கத்தின் ஏதொரு அங்கத்தரினால் அல்லது ஏதும் கடனாளியால் மேல் முதலாவது உப சரத்தின் கீழ் கட்டளையில் குறிப்பிட்ட தினத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அக் கட்டளைக்கு எதிராக கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சருக்கு எதிர் மறு தாக்கல் செய்ய முடியும்.*

*(3). கூட்டுறவு சங்கத்தின் பதிவை இரத்துச் செய்யும் படி கட்டளை பிறப்பித்த தினத்திலிருந்து இரண்டு மாதத்துக்குள் எந்தவொரு எதிர் மறு தாக்கல் செய்யாதவிடத்து அக் கட்டளைக்குரிய காலம் கடந்த பின் செயல்பட வேண்டும். இரண்டு மாதங்களுக்குள் எதிர் மறு தாக்கல் செய்த சந்தர்ப்பத்தில் எதிர் மனுவை பரிசீலனை செய்த பின் கட்டளையை செயல்படுத்தும் வரை அக் கட்டளையின் அதிகாரத்தை நடைமுறைபடுத்தலாகாது.*

*(4). கூட்டுறவு சங்கத்தின் பதிவை பதிவாளரினால் முதலாவது உப சரத்தின் படி இரத்து செய்த சந்தர்ப்பத்தில் சங்கத்துக்குள் பதிவை இரத்துச் செய்யும் கட்டளை செயல்படும் வரை அல்லது மனுத் தாக்களின் வட மத்திய மாகாண கூட்டுறவு அமைச்சரால் அந்த கட்டளையை இரத்து செய்யும் வரை அச் சங்கத்தின் பதிவேடுகள் , பதிவுகள் மற்றும் சொத்துக்களுக்கு பொறுப்பாக இருப்பதற்கும் அச்சங்கத்தின் கருமங்களை நிர்வகிக்கவும் ஒரு நபரை அல்லது நபர்களை பதிவாளரினால் நியமிக்க முடியும். அந் நபர் அல்லது நபர்கள் நியமிக்க்ப்பட்டதும் சங்கத்தின் நிர்வாக சபையால் சங்கத்துக்குள் பதிவேடுகள் , பதிவுகள் சொத்துக்கள் முன் குறிப்பிட்ட நபருக்கு அல்லது நபர்களிடம் ஒப்படைக்க வேண்டும். மேலும் பதிவை இரத்து செய்யும் கட்டளை செயற்படும் அல்லது வட மத்திய மாகாண கூட்டுறவு அமைச்சர் அவர்களினால் மனு தாக்கலின் போது அக் கட்டளையை இரத்து செய்யும் வரை அந்த நிர்வாக சபை செயல்படலாகாது.*

*சங்கத்தின் பதிவை இரத்துச் செய்தல்.*

*50 (1) யாதேனும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கம் –*

*(அ) அச் சங்கத்தில் குறைந்தது 15அங்கத்தவராவது நிறைவு பெற்று இருத்தல் வேண்டும். சங்கத்தை பதிவு செய்வதற்கு நிபந்தனை விதிக்கும் சந்தர்ப்பத்தில் அங்கத்தவர் தொகை 15 க்கு குறைந்து இருந்தால் அல்லது ;*

*(ஆ) அச் சங்கத்தின் பதிவு செய்த திணைக்களத்திலிருந்து ஒரு வருட காலத்துக்குள் அவ்வாறு பதிவு செய்த சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேலைகளை ஆரம்பிக்காவிட்டால் அல்லது ;*

*(இ) இதன் கீழ் இரத்து செய்யும் கட்டளை பிறப்பித்த தினத்துக்கு முன் இரண்டு மாத காலத்துக்குள் அச் சங்கம் செயல்படாதிருந்தால்*
*பதிவாளரினால் எழுத்து மூலம் அல்லது கட்டளை மூலம் அச் சங்கத்தின் பதிவை இரத்து செய்ய முடியும்.*

*பதிவு செய்வதை கட்டாயப்படுத்தல்.*

*51. பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் பதிவை 49 ஆவது சரத்தின் அல்லது 50 ஆவது சரத்தின் கீழ் கட்டளையால் இரத்து செய்த சந்தர்ப்பத்தில் இங்கு இதனகத்து கலைக்கப்பட்ட தினமாக குறிப்பிடும் அக் கட்டளை செயல்படும் தினத்திலிருந்து அச் சங்கம் கூட்டுதாபனமாக நடைபெறுவது நிறுத்தப்பட வேண்டும் . அப்படியாயினும் அச்சட்டத்தின் அல்லது சட்டத்தின் கீழ் சங்கத்துக்கு அளிக்கப்பட்ட ஏதும் சலுகைகளை பதிவாளரினால் அதற்காக நியமிக்கப்பட்ட ஏதும் ஏலதாரர் அல்லது ஏலதாரர்களிடம் ஒப்படைத்ததாக இருத்தல் வேண்டும்.*

52 . 49 ஆவது பிரிவின் கீழ் அல்லது 50 ஆவது பிரிவின் கீழ் சங்கம் ஒன்றின் பதிவினை காலாவதியாக்கிய சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தில் ஏல விற்பனையாளர் அல்லது ஏல விற்பனையாளர்களாக ஒருவர் அல்லது பலர் பதிவாளரால் நியமணம் செய்ய முடியும். சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் 50 ஆவது பிரிவின் கீழ் காலாவதியாக்குவதற்கான ஆணை அமுல் படுத்தப்படும் திகதியில் சங்கத்தின் சகல உடமைகளும் ஏல விற்பனையாளர் அல்லது ஏல விற்பனையாளர்களிடம் பொறுப்பளிக்கப்பட வேண்டும். சங்கம் பதிவு செய்யப்பட்ட பின் ஒப்பந்தம் செய்தல்.

53. (1) 52 வாசகத்தின் படி நியமிக்கப்படும் ஏலதாரருக்கு பதிவாளரின் வழிகாட்டலில் நிருவாகத்துக்கு வாாசகத்தின் கீழ் கட்டளை ஒன்றின் மூலம் பதிவாளரின் நியமப்படுத்தும் சில வரையறைக்குள் கீழ் காணும் செயல்களை செய்வதற்கு அதிகாரம் உண்டு. ஏலதாரரின் அதி காரங்கள்.

(அ) சங்கத்தின் சொத்துக்களுக்கு சங்கத்தின் அங்கத்தவரும் இருந்த அங்கத்தவரும் அண்மிய அங்கத்தவர்களும் கொடுக்க வேண்டிய அல்லது மரணமான அங்கத்தவர்களின் பூதலினால் கிடைக்க வேண்டிய உபயப் பணத்தை காலத்துக்கு காலம் நிச்சயப்படுத்த வேண்டும் ;

(ஆ) உரிமை சொல்வதற்கு சங்கத்தின் ஏடுகளில் பதிவு செய்யாது விட்ட கடனாளி தனது உரிமைகளை சொல்லிக் காட்டி அவரால் தெளிவுபடுத்துவதற்கு முன் செய்படும் சொத்துக்களை பிரித்து கொடுப்பதற்கு முன் அக் கடனாளி உரிமை விட்டுவிட வேண்டுமாயின் ஒரு நாளைக்கு முன் தினம் அந்த நாளில் வெளியீட்டின் மூலம் அல்லது அறிவித்தலில் நியமப்படுத்தல் ;

(இ) கடனாளிகளிடையே ஏற்படும் முன்னுரிமை தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு இச்சட்டத்தின் நடவடிக்கைகளுக்கேற்ப தீர்மானம் எடுத்தல் ;

(ஈ) 58 வாசகத்தில் குறிப்பிட்ட படி ஏதும் விபரங்களில் சிக்கல்கள் (சங்கம் தொடர்பாக அங்கு குறிப்பிட்ட ஏலதாரர் சம்பந்தமாக குறிப்பிட வேண்டுமென விளங்கிக் கொண்டு அச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பதற்காக முன் வரவும் சங்கத்துக்காக தனது பெயரால்அல்லது பதவியால் சிவில் வழக்குக்கு வேறு சட்டத்தினால் ஒப்படைக்கப் பட்ட சட்ட படைப்பில் உள்ள படி எதிர் வாதத்தை முன் வைத்தல் ;

(உ) ஏலம் இடுவதற்கான கட்டணத்தை ஏற்க வேண்டியது எப்படியான ஆளினால் என்பதும் எப் பெறுமானம் என்பதை தீர்மானித்தல் வேண்டும் ;

(ஊ) சங்கத்தை கணக்கை பெற்று மூடி விடுவது அவசியப்படும் சொத்துக்களை ஒன்றுபடுத்தி பகிர்ந்து கொடுப்பது தொடர்பாக கட்டளை இடல். சங்கத்தின் கணக்கை மீட்டு மூடி விடுவதற்கு தேவையான சொத்துக்களை சேர்த்து பகிர்ந்து கொடுத்தல் தொடர்பாக கட்டளை இடல் ;

(எ) பதிவாளரின் அங்கீகாரத்தை முன் பெற்றிருத்தல் சங்கத்தினால் அல்லது சங்கத்துக்கு எதிராக முன் வைக்கப்பட்ட உரிமையை சொல்லி இணக்கத்துக்குள்ளாக்கல் ;

(ஏ) ஏலமிடுவதை முறையாக செய்வதற்காக தேவையான அங்கத்தவர்களை கொண்ட பொது சபையை கூட்டுதல் ;

(ஐ) சங்கத்தின் ஏடுகள் , பதிவுகள் சொத்துக்கள் என்பவற்றை தனது பொறுப்புக்குள்ளாக்கல்.

(ஒ) சங்கத்தின் சொத்துக்களை விற்றல் , ஏலத்தில் விடல் தொடர்பாக சேர்க்கப்பட்ட முழு பணத்தையும் பதிவாளரினால் கட்டளை பிரகாரம் வைப்பில் வைத்தல் ;

(ஓ) பயன்படக் கூடிய வகையில் கணக்கை மீட்டு மூடி விடுவதற்கு தேவையான விதத்தில் சங்க கருமங்களை நடத்திச் செல்லல். அப்படியாயினும் கடனளிக்கும் சங்கத்துக்கு ஏலதாரருக்கு ஏதும் கடன் பணம் கொடுப்பதற்கான இங்கு அடங்கியுள்ள எதுவும் உரிமையாகாது இன்னும் ;

(ஔ) பதிவாளரினால் சொத்துக்கள் பகிர்ந்தளிக்கும் திட்டத்திக்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் சொத்துக்களை இலகுவான முறையில் பகிர்ந்தளித்தலுக்கு ஆவண செய்தல்.

(2) 49 ஆவது சரத்தின் அல்லது 50வது சரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இரத்து செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் ஒரு அங்கத்தவர் அல்லது முன்னிருந்த அங்கத்தவர் ஏதும் கடன் கொடுக்க இருந்தால் அல்லது அவ்வாள் இரத்து செய்த தினத்தின் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்த வேறொரு சங்கத்தின் அங்கத்தவராக இருக்கும் சந்தரப்பத்தில் 49வது சரத்தின் கீழ் நியமிக்கும் முன் குறிப்பிட்ட சங்கத்தின் அல்லது ஏலதாரருக்கு பதிவாளரின் வழிகாட்டும் நிருவாகத்தின் 46 வது சரத்தின கீழ் கட்டளையின் படி பதிவாளரினால் நியமம் செய்யப்பட்ட வேறேது வரையறை செய்வதன் கீழ் அந் நபருக்கு வேறொரு சங்கத்தால் அறவிட வேண்டிய பணத்தை அக்கடனுக்கு மேலதிகமாக கொடுக்காத பணத்தை அவ் அங்கத்தவரால் மற்ற சங்கத்துக்கு அறவிடக் கூடிய கடன் நினைத்து அறவிட்டு அப் பணத்தை ஏலதாரருக்கு அனுப்புமாறு அதன் மற்ற சங்கத்துக்கு நியமப்படுத்தும் அதிகாரம் உண்டு.

(3) இச் சட்டத்தின் கீழ் நியமிக்கும் ஏதும் ஏலதாரருக்கு அதற்காக தயாரிக்க முடிந்த ஏதும் ஒழுங்கு விதிகளின் கீழ் இச் சரத்தின் கருமத்தை அல்லது கொண்டு போவதற்கு ஏதும் அதிகாரம் தேவையான அளவுக்கு மாவட்ட நீதிமன்ற சிவில் வழக்கு சட்ட கோவையின் கீழ் நடவடிக்கைகளை தயாரிக்கின்ற வழியில் தேவைப்படும் பகுதியினை சாட்சியாட்களை அழைப்பதற்கும் சமுகமளிப்பதற்குமே அவர்களை கட்டாய படுத்தவும் பதிவை சமர்ப்பிக்கவும் சமர்ப்பிக்கும் படி அவர்களை கட்டாயபடுத்தவும் அதிகாரம் உண்டு.

ஏலமிடுதல் நிர்வகித்தல் என்பவற்றில் பதி வாளரின் அதி காரங்கள்.

54. (1) ஏலதாரர் பதிவாளரின் பரிபாலனத்துக்கு தேவையான கட்டளைக்கு கீழ் சுய அதிகாரத்தைசெயலில் ஈடுபடுத்தல் வேண்டும். அத்தோடு

(அ) ஏலதாரரால் செய்யப்படும் ஏதும் கட்டளை பரிசீலனை செய்து அல்லது வேறுபடுத்தி தேவையான புதிய கட்டளை இடல் ;

(ஆ) ஏலதாரரை பதவியிலிருந்து நீக்குதல் ;

(இ) சங்கத்தின் எல்லா ஏடுகள் , பதிவேடுகளும் சொத்துக்களையும் சமர்ப்பிக்கும் படி நியமப்படுத்தல்.

(ஈ) 53 ஆவது சரத்தின் கீழ் ஏலதாரரின் அதிகாரத்தை எழுத்து மூலமான கட்டளையினால் வரையறுத்தல் ;

(உ) கணக்கை சமர்ப்பிக்குமாறு ஏலதாரருக்கு தனது அபிப்பிராயத்தின் படி நியமப்படுத்தல்.

(ஊ) ஏலதாரர் கணக்கை கணக்காய்வு செய்து கொள்ள சங்கத்தின் சொத்துக்களை பகிர்ந்தளிப்பதற்கு அதிகாரத்தை கொடுத்தல்.

(எ) ஏலதாரரின் உழைப்புக்கு ஏற்ற கொடுப்பனவை நிர்ணயித்தல்.

(ஏ) ஏலதாரரும் மூன்றாம்கட்சியாளராகும் இடை நடைபெறும் 53(1) (ஆ) எனும் சரத்தின் கீழ் பாதுகாப்பளிக்கக் கூடிய சிக்கல்கள் அல்லாத ஏதும் முரண்பாடுகள் தொடர்பாக விளக்கம் கொடுக்கும் தீர்ப்புகளுக்கு கட்டுப்படுவதற்கு அக் கட்சி நபர் எழுத்து மூலம் விருப்பத்தை வெளிப்படுத்தி பாதுகாப்பதற்காக ஈடுபட பதிவாளர் ஒருவரால் செய்ய முடியும்.

கட்டளையை செயல்படுத்தல்.

55. (1) 54 ஆவது வாசகத்தின் படி தன்னிடம் ஈடுபடுத்திய ஏதாவதொரு வேலை தொடர்பாக பாதுகாப்பாளரின் தீர்மானத்தின் பக்கச் சார்பானவர்கள் கட்டுப்படுத்தலோடு அச்சரத்தின் படி பதிவாளரினால் செய்யப்பட்ட கட்டளை செயல்படும் விதத்தில் அத் தீர்ப்பை செயல்படுத்தல்.

(2) பாதுகாக்கப்பட்ட ஒருவரினால் அல்லது பதிவாளரினால் 54வது சரத்தின் அல்லது 54 ம் சரத்தின் கீழ் செயல்படும் கட்டளையை எந்தவொரு சிவில் நீதிமன்றத்திலும் பிரச்சினை எழுப்புதலாகாது. அச்சங்கத்தில் பதியப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள இடம் தொடர்பாக நீதிமன்ற அதிகாரமுள்ள ஏதொரு சிவில் நீதிமன்றத்தால் அந் நீதிமன்றை தீர்ப்பை வெளியீட்டை செயல்படுத்தும் விதத்தில் அக் கட்டளையைச் செயல்படுத்த வேண்டும். அப்படியாயினும் பதிவை இரத்து செய்த சங்கத்தின் கடனாளிக்கு சொந்தமான ஏதும் வங்கிக்கு ஏதும் ஏலதாரருக்கு அல்லது பதிவாளரினால் 53 ஆவது வாசகத்தின் அல்லது 54 வது சரத்தின் கீழ் செய்யப்படும் கட்டளைக்கெதிராக அவ் ஏலதாரர் அல்லது பதிவாளருடைய கட்டளை பிறப்பித்த தினத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு மனுவொன்றை சமர்ப்பிக்க உரிமை உண்டு.

*(3) 53 ஆவது சரத்தின் அல்லது 54 ஆவது சரத்தின் கீழ் ஏலதாரர் ஒருவரினால் அல்லது பதிவாளரினால் கட்டளை இட்ட பின் இரண்டு மாதங்களுக்குள் அமைச்சர் அவர்களிடம் எந்தவொரு மனுவையும் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில் அந்த ஏலதாரரோ அல்லது பதிவாளரோ அக் கட்டளையில் குறிப்பிட்ட காலகட்டம் முடிவடைந்தவுடன் செயல்பட வேண்டும். இரண்டு மாதங்களுக்குள் அமைச்சர் அவர்களிடம் மனுவை சமர்ப்பித்தால் அச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களினால் ஸ்தீரப்படுத்தும் வரை பதிவாளரினால் அல்லது ஏலதாரரினால் செய்யப்பட்ட கட்டளை செல்லுபடியாகாது.*

*சிவில் நீதிமன்றத் தின் நீதிமன்ற அதி காரத்தை வரை யறுத்தல்.*

*56. இதன் முன் வெளியிடப்பட நடவடிக்கைகளில் நிகழ்வுகளை தவிர இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றை கலைத்து விடுவதற்கு பொருத்தமான ஏதும் காரணி தொடர்பாக எந்தவொரு சிவில் நீதிமன்றத்துக்கும் விசாரணை செய்ய அதிகாரம் இல்லாது இருத்தல் வேண்டும்.*

*ஏலமிடுவதை முடிவு செய்தல்.*

*57 (1) பதிவு செய்யப்பட்டதை இரத்து செய்யப்பட்ட ஒரு சங்கத்தை ஏலமிடும் போது சூழல் நிதியம் உட்பட்ட நிதியத்தின் 44 (2) ஆவது சரத்தின் நடவடிக்கைகளில் கீழ் முன்வைத்து ஏலமிடும் கட்டணம் தொடர்பாகவும் அடுத்தது அரசாங்கத்தின் அல்லது வட மத்திய மாகாண சபையின் பிணையான கடனை திருப்பி கொடுப்பதற்காகவும் அத்தோடு சங்கத்தின் துணைச் சட்டத்தின் படி அனுமதி கிடைக்குமானால் இலாபம் பங்கிடாதவிடத்து ஏதும் கால கட்டத்துக்காக வருடத்துக்கு 10% க்கு குறையாத அளவில் இலாபத்தில் கொடுப்பதற்காக இலாபம் தொடர்பாக தகமை படாத ஏதும் காலத்துக்காக அக் கால கட்டத்துக்குள் கலைப்பதற்கான தினத்துக்கு முன்னதாக அங்கத்தவருக்கு பிரதி தானமாக கொடுத்து ஈடு செய்ய வேண்டும்.*

*(2) ஏதொரு சங்கத்தை ஏலத்திலிட்ட பின் கிடைக்கும் அச் சங்கத்தின் கடனாளி ஒருவரினால் கிடைக்கும் சொத்துக்களை பிரித்தளிக்கும் திட்டத்தின் கீழ் தனக்கு வரவேண்டிய பொருட்கள் தொடர்பாக உரிமை கோரல் வேண்டாத பட்சத்தில் அவ்வாறான ஏலதாரருக்கு கிடைக்காத பட்சத்தில் ஏலம் இடுதல் முடிவாக்கும் அறிவித்தலை வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்தல் வேண்டும். மேலும் அத்தோடு சங்கத்தின் முதலீடு தொடர்பாக அல்லது ஏதும் உரிமை பிரித்தளித்தல் தொடர்பாக எந்த வழக்கும் அவ்வறிவித்தலின் வர்த்தமானி பிரசுரித்த தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆரம்பமானவற்றை நடத்திச் செல்லல் ஆகாது.*

*(3) 1 ஆவது உப சரத்தின் நிச்சயமாக குறிப்பிடபட்டுள்ள காரியம் தொடர்பாகவும் 2 ஆவது உபசரத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்ட ஏதும் உரிமை கோருதலை கொடுப்பதற்காக பணம் ஒதுக்கிய பின் எஞ்சும் ஏதும் மேலதிகத்தை அச்சங்கம் கலைக்கப்பட்ட தினத்தில் அங்கு உத்தியோகத்தராக இருந்த நபர்களால் பதிவாளரின் அனுமதியின் கீழ் தெரிவு செய்யக் கூடிய ஏதும் பிரதேசத்துக்கு பேருதவியாகும் நோக்குடன் ஈடுபடுத்தலாம்.*

*சங்கம் ஒன்று ஏல தினத்தின் பின் மூன்று மாதத்துக்குள் பதிவாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பின் மூன்று மாத காலத்துக்குள் பதிவாளரினால் அங்கீகரிக்கப்பட்ட மேற் கூறிய நோக்கம் ஒன்றை தேர்ந்தெடுத்த அவ் அங்கத்தவர் புறக்கனித்தால் பதிவாளரினால் அம் மேலதிகத்தை வங்கி ஒன்றில் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தில் வைப்பிடல் வேண்டும். அவ்வாறு வைப்பிடப்பட்ட மேலதிகத்தை இச் சட்டத்தின் காரியத்துக்காக துணை புரிவதற்காக மேலதிக நிதியத்துக்கு கொடுக்க முடியும். ஒழுங்கு விதிகளால் நடவடிக்கை எடுக்க கூடிய ஏதும் காரியங்களுக்காக அந் நடவடிக்கை எடுக்க கூடிய முறையில் மேலதிக நிதியத்தை செலவு செய்வதற்கு பதிவாளரின்விருப்பத்தின் படி செய்ய முடியும். அப்படியாயினும் மேலதிகத்துக்கு சேரும் ஏதும் வட்டியை கூட்டுறவு சங்க நிதிக்கு வரவு செய்யலாம்.*

## *XII அத்தியாயம்*

### *பிரச்சினைகள்*

*பிரச்சினைகளை சமாதானப்படுத் தல்.*

*58. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் வர்த்தகம் தொடர்பாக ஏதும் பிரச்சினைகள்*

*(அ) அங்கத்தவர்கள் , இருந்த அங்கத்தவர்கள் இறந்த அங்கத்தவர்கள் மூலம் உரிமைப்படக் கூடிய நபருக்கிடையே அல்லது சங்கத்தின் இறந்த கால அல்லது நிகழ்கால உத்தியோகத்தர் அல்லது சேவையாட்களிடையே அல்லது காலம் சென்ற உத்தியோகத்தர் அல்லது சேவையாட்களின் உரிமையாட்கள் அல்லது சட்டப்படியான பிரதிநிதிகளிடையே அல்லது*

*(ஆ) அங்கத்தவர் அல்லது இருந்த அங்கத்தவர் அல்லது காலஞ்சென்ற அங்கத்தவர் மூலம் உரிமை கோரும் நபர் அல்லது சங்கத்தின் அல்லது அதன் நிர்வாக சபை அல்லது அதன் இறந்த கால அல்லது நிகழ்கால உத்தியோகத்தருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது இறந்த ஏதும் உத்தியோகத்தருக்கு அல்லது சேவையாளருக்கு ஏதும் உரித்தாளருக்கு அல்லது சட்டப்படியான பிரதிநிதிகளுக்கிடையே அல்லது*

(இ) சங்கத்தின் அல்லது அதன் நிர்வாக சபை அல்லது சங்கத்தின் இறந்த அல்லது நிகழ்கால உத்தியோகத்தருக்கு அல்லது சேவகருக்கு அல்லது ஏதும் இறந்த உத்தியோகத்தருக்கு அல்லது சேவையாளருக்கு ஏதும் உரிமையாளருக்கு அல்லது சட்டப்படியான பிரதிநிதிக்கிடையே அல்லது

(ஈ) சங்கத்தின் அண்மிய அங்கத்தவர் அல்லது இருந்த அண்மிய அங்கத்தவர் அல்லது இறந்த அண்மிய அங்கத்தவருக்கு அல்லது

(உ) சங்கத்தின் அல்லது அதன் நிர்வாக சபை

(i) வர்த்தகத்தின் அல்லது பகுதியை அச் சங்கத்துக்கு ஒப்படைத்த வேறு சங்கத்தின் அதன் அங்கத்தவரும் வேறு சங்கத்தின் அதன் அங்கத்தவரும் அல்லது அதன் உத்தியோகத்தர் அல்லது வேறொருவர்

(ii) (1) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கத்தின் அங்கத்தவர் அல்லது இறந்த அங்கத்தவர்

(iii) 1 ஆவது உப பந்தியில் குறிப்பிடப்படுள்ள சங்கத்தின் அங்கத்தவர் உத்தியோகத்தர் சேவையாளின் உரித்தாள் அல்லது சட்டப்படியான பிரதிநிதியாகிய ஏதும் ஒரு நபர்.

(ஊ) பதிவு செய்யப்பட்ட வேறு எந்த சங்கத்திடையே ஏற்படுமானால் தீர்ப்புக்காக அந்த பிரச் சினையை பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்

(எ) கடந்த அல்லது நிகழ்கால அங்கத்தவரை உத்தியோகத்தரின் சேவையாளர் ஒருவரின் அல்லது அண்மிய அங்கத்தவரின் அல்லது காலஞ்சென்ற அங்கத்தவரின் அண்மிய அங்கத்தவரின் அல்லது சேவையாளரின் பெயருக்குரிய அங்கத்தவரின் உரிமையாளருக்கு அல்லது சட்டப் படியான பிரதிநிதிக்கு பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்கு வரக்கூடிய கடன் அல்லது நட்டமும் அங்கத்தவரில் முன்வைக்கப்பட்ட உரிமை கோரிக்கை அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் இறந்த அல்லது நிகழ்கால உத்தியோகத்தரின் அல்லது சேவையாளரின் அல்லது அங்கத்தவரின் அல்லது அண்மிய அங்கத்தவரினால் அங்கத்தவருக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் இறந்த அங்கத்தவரின் உத்தியோகத்தரின் சேவையாளரின் அல்லது ஏதும் பெயர் கூறிய நபருக்கு உரித்தாளருக்கு சட்டப்படியிலான அங்கத்தவருக்கு அறவிட வேண்டிய ஏதும் கடனை வேண்டுகோளை அல்லது நட்டத்துக்காக முன்வைக்கும் அல்லது உரிமை கூறும் அந்த கடனை கேட்க அல்லது நட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவிடத்து இவ் உபசரத்தின் பொருள் விளக்கத்துடன் சங்கத்தின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உரிய பிரச்சினையாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

(2) பதிவாளரினால் (1) ஆவது உப சரத்தின் படி ஒப்படைக்கப்பட்ட பின்

(அ) தன்னால் அந்த பிரச்சினை தொடர்பாக தீர்மானம் எடுக்கக் கூடிய நபர் ;

(ஆ) அது சம்பந்தமாக நல்லது செய்வற்தாக அல்லது தீர்ப்பாளி ஒருவரிடம் ஒப்படைக்க முடியும்.

(3) பாதுகாக்கப்பட்டவர் அல்லது பாதுகாக்கப்பட்டவர்களின் தீர்ப்பில் திருப்தியடையாத ஏதொரு கட்சியாளரினால் அத் தீர்ப்பு கொடுக்கப்பட்ட தினத்திலிருந்து 45 நாட்களுக்குள் அது பற்றிய மனுவை பதிவாளருக்கு மனு செய்ய வேண்டும். அம்மனு எழுத்து மூலம் உரிய காரணங்களை கொண்டதாக எழுத்து மூலமான மனுவாக இருத்தல் வேண்டும். மேலும் முறைப்பாட்டாளர் கோரிக்கை விடுத்தால் அவர் பிரச்சினை விடயம் வஸ்த்துக்களின் பெறுமதி 10% மும் எதிராளி கோரிக்கை விடுத்தால் தீர்ப்பளித்த பணத்தில் 10%மும் கோரிக்கையாளரின் வைப்பில் பதிவாளரிடம் வைத்தல் வேண்டும்.

(4) 3 ஆவது உப சரத்தின் கீழ் பதிவாளரிடம் ஏதும் வேண்டுதலை முன் வைத்த ஏதும் பிரிவினர் அல்லது பிரிவினர்களால் அல்லது ஏதொரு பிரதிநிதிகள் மூலம் பதிவாளரின் முன்னிலை நின்று அக் கோரிக்கை தொடர்பாகவிடயத்தை சொல்வதற்கு உரிமை இல்லாது இருத்தல் வேண்டும்.

(5) 2 ஆவது உப சரத்தின் கீழ் அல்லது 3வது உப சரத்தின் கீழுள்ள கோரிக்கையினால் அவ்விண்ணப்ப சாட்சியினர் முன்னிலையில் விசாரணை செய்ய முடியும். மேலும் அது தொடர்பாக பதிவாளரின் தீர்ப்பு இறுதி முடிவாக இருக்க வேண்டும். அது சம்பந்தமாக ஏதும் சிவில் நீதிமன்றத்துக்கு கேள்வி எழுப்பக் கூடாது.

(6) 2 ஆவது உப வாசகத்தின் படி பாதுகாப்பாளரின் அல்லது பாதுகாப்பாளர்களின் தீர்ப்பு தொடர் பாக 3 ஆவது உப வாசகத்தின் கீழ் பதிவாளரிடம் எந்தவொரு விண்ணப்பமும் செய்யாதவிடத்து அப்படியான ஏதும் கோரிக்கைகள் கைவிடப்படுமாயின் அல்லது கேட்டு விலகிக் கொண்டால் அந்த முடிவு இறுதியானதாக இருத்தல் வேண்டும். மேலும் அது தொடர்பாக எந்தவொரு சிவில் நீதிமன்றத்தில் பிரச்சினை எழுப்பக் கூடாது.

(7) இந்த வாசகத்தின் கீழ் முரண்பாடான விடயமாயின் ஏதும் உரிமை கோரப்படுவது தொடர்பாக காலத்துக்கு எதிராக கட்டளைச் சட்டத்தின் நடவடிக்கைகளுக்கு பொருந்தாது.

(8) இச் சரத்தின் கீழ் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்ட பிரச்சினை பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்கு அல் லது சங்கத்தின் வர்த்தகத்துக்கு உரிய பிரச்சினையா என இப்பிரச்சினை தோன்றினால் அது தொடர்பாக பதிவாளரின் தீர்ப்பு இறுதியானதாக இருத்தல் வேண்டும். மேலும் இது பற்றி எந்தவொரு சிவில் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாது.

(9) இச் சரத்துக்கு அங்கத்தவர் போக அண்மிய அங்கத்தவரும் உட்படுவர்.

தீர்ப்பு அல்லது தீர்மானத்தை செயல்படுத்தல்.

59. (1) 58 ஆவது வாசகத்தின் படி பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்ட பிரச்சினை அல்லது கோரிக்கை தொடர்பாக அவருடைய தீர்ப்பின் (இச் சரத்தின் இதன்னகத்தே தீர்ப்பு என அறிமுகம் செய்யப்படும்) அல்லது அந்த சரத்தின் கீழ் பதிவாளரிடம் உரியமுறையில் கோரிக்கை விடாது இடத்து இச் சரத்தின் இதனகத்து "தீர்ப்பு" என அறிமுகமான தீர்மானத்தில் செய்த முடிவு அப்பிரச்சினை ஒரு பிரிவினக்குரிய அல்லது பிரச்சினை அடுத்த பிரிவினருக்காகவா பணம் அறவிட வேண்டும் என அப் பணம் அதற்கு சம்பந்தமான கட்டணமும் வட்டியும் இருந்தால் அவற்றுடன் கட்டாதவர்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில் பதிவாளரினால் அப் பணம் அறவிட வேண்டியது எப் பிரிவினர்களிடமிருந்து என்பது இச் சட்டத்தின் இதனகத்து "புறக்கனித்தவர்;" என அறிமுகப்படுத்தப்படும். அப் பிரிவினர் தொடர்பாக -

(அ) கட்டணமும் வட்டியும் சேர்த்து அப்பணம் தொடர்பாக விபரமும் அதை புறக்கணிப்பவரின் பெயர் அடங்கிய சான்றிதழ் பிரதேச செயலாளர் /உதவி பிரதேச செயலாளர் பிஸ்கல் அல்லது பதில் பிஸ்கலிடம் ஒப்படைத்தல் வேண்டும் ;

(ஆ) கட்டணம் அல்லது வட்டி இருந்தால் அந்த வட்டியும் அதற்குரிய பணம் சம்பந்தமாக விபரத்தை புறக்கணிப்பவரின் பெயர் அடங்கிய சான்றிதழை அதை புறக்கணித்தவர் பதிவாகியுள்ள அல்லது அவரின் அசைவுள்ள அல்லது அசைவற்ற சொத்துக்கள் அமைந்துள்ள மாவட்டத்தில் நீதி அதி காரம் உள்ள மாவட்ட நீதிமன்றத்திடம் ஒப்படைத்தல் ;

(இ) அறவிடக் கூடிய பணம் சம்பந்தமாக விபரத்தையும் புறக்கணிப்பவர் பெயரும் இறுதியாக அறிந்து கொண்ட அவர்களின் வியாபார நிலையத்தில் அல்லது வதியும் இடத்தில் அமைந்துள்ள பிரிவின் நீதிமன்ற அதிகாரமுள்ள நீதிபதியிடம் சமர்ப்பிக்க முடியும்.

(2) (அ) பதிவாளரினால் 1 ஆவது உப சரத்தின் "அ" பந்தியின் கீழ் பிரதேச செயலாளர் உதவி பிரதேச செயலாளர் பிஸ்கல் அல்லது பதில் பிஸ்கலிடம் சான்றிதழ் விநியோகிக்கும் சந்தர்ப்பத்தில் புறக்கணிக்கும் நபரின் அசைவுள்ள சொத்துக்களை தடை செய்து அதை விற்று கட்டணமும் வட்டியுடன் அப்பணத்தை அறவிட்டுக் கொள்ள உத்தியோகத்தருக்கு அதிகாரத்தை அளிக்க நியமப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) அந்த உத்தியோகத்தரினால் அதற்காக மிக சந்தர்ப்பத்துக்கேற்றது என கருதும் ஏதும் முறையில் அதை தடை செய்து செயற்படுத்துவதோடு அவ்வாறு தடை செய்ய சகல சொத்துக்களும் புறக்கணிப்பவரால் கட்டணமும் செலவும் கொடுப்பதன் கீழ் 5 நாட்கள் வைத்துக் கொள்ள வேண்டும். புறக்கணிப்பவரினால் கட்டணமும் செலவும் வட்டியுடன் கொடுப்பதன் கீழ் அறவிட வேண்டிய அப் பணத்தையும் அந்த சொத்தை தடை செய்வதற்குரிய செலவையும் செலவுப் பொறுப்பையும் அந்த 5 நாட்களுக்கு செலுத்தாத சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் பிரதேச செயலாளர் பிஸ்கல் அல்லது பதில் பிஸ்களினால் அந்த சொத்தை பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்ய ஆவண செய்ய வேண்டும்.

(இ) அவ்வாறு விற்பனையால் கிடைத்த பணத்தை

(i) முதலில் அந்த சொத்துக்களை தடை செய்து வைப்பதற்கு அல்லது விற்பனை தொடர்பாக செலவுக்கு கட்டணம் செலுத்துதல் ;

(ii) இரண்டாவது கட்டணம் அல்லது வட்டியுடன் வரவேண்டிய பணத்தை நிறைவு செய்வதற்கு பயன் படுத்துவதோடு ஏதும் மீதி இருந்தால் தடை செய்யப்பட்ட சொத்துக்களை சொந்தக் காரரிடம் அதை கொடுத்தல் வேண்டும்.

(3) (1) ஆவது உப வாசகத்தின் (ஆ) பந்தியின் கீழ் மாவட்ட நீதிமன்றத்தினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் கிடைத்த சந்தர்ப்பத்தில் அது கிடைத்த பின் அந் நீதிமன்றத்தால் புறக்கணித்தவரின் சகல அசைவுள்ள அல்லது அசைவற்ற சொத்துக்கள் அல்லது அதன் பகுதி அதன் ஏதும் பகுதியால் கிடைத்த பணத்தை அறவிட்டு கொள்வதற்காக பிஸ்காளினால் தேவையென கருதும் அதன் பகுதியை தடை விதித்து விற்பனை செய்யுமாறு பிஸ்காலுக்கு அதிகாரமளிக்க நியமப்படுத்த வேண்டும். அத் தடை செய்து விற்கும் போது அதற்கு பொருத்தமான சிவில் நடவடிக்கை கோவை 226 ஆவது வாசகத்திலிருந்து 297 ஆவது வாசகத்தில் காட்டப்பட்டுள்ள வாசகத்தில் நடவடிக்கைகளை வேறுபடுத்துவதற்கு பொருத்தமாக வேண்டும்.

(4) (1) ஆவது வாசகத்தின் (இ) பந்தியின் கீழ் நீதவானிடம் சான்றிதழ் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பணத்தை அறவிட்டுக் கொள்ள வேண்டியவர் தான் புறக்கணித்தற்கு எதிராக மேலும் செயலாற்றுவது ஏன் என்று காரணம் காட்டுவதற்காக நீதவான் ஒருவர் புறக்கணித்தவரை தனக்கு முறை அழைப்பதோடு தேவையான காரணங்களை காட்டாது இருந்தால் சிறைத் தண்டனையளிக்க முடியாதாயினும் தண்டம் விதிக்க கூடிய குற்றத்துக்கு புறக்கணிப்பவருக்கு நீதவானினால் விதிக்கப்படும் தண்டனையால் நியமப்படுத்தப்படும் தண்டனையாக அப் பணம் கருதப்பட வேண்டும. அப்போது குற்றவியல் வழக்கின் நடவடிக்கை கோவையின் 312 ஆவது சரத்தின் (அங்கு (1) உப சரத்தின் (அ)ம் (இ) பந்தியை நீக்கி) நடவடிக்கைகளுக்கு பொருந்தக் கூடியதாக இருப்பதோடு தண்டனை நியமப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அச் சரத்தின் நடவடிக்கைக்கு ஏற்ப நீதவான் அவர்களால் செய்யக் கூடிய ஏதும் கட்டளையை அவரால் பிறப்பிக்க முடியும். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு கட்டளை சட்டக் கோவையின் சட்டம் 291 ஆவது வாசகத்தின் படி நியமம் செய்த தண்டனையை புறக்கணிப்பது சம்பந்தமாக சிறைப்படுத்து வதற்குரிய காலத்துக்கு தண்டனை விதிக்கப்பட்டஏதும் புறக்கணித்தவர் 59(1) (இ) வாசகத்தின் நிச்சயித்த சான்றிதழ் குறிப்பிட்ட ஏதும் அளவான பணத்தை கொடுப்பதினால் விடுதலை பெற முடியாது.

(5) பதிவாளர் இந்த சரத்தின் கீழ் சான்றிதழ் விநியோகிக்கும் சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் கட்டளை சமர்ப்பித்ததால் பதிவு செய்யப்பட்ட தபாலில் அல்லது தந்தி மூலமாக புறக்கணித்தவருக்கு கொடுக்க முடியும். எனினும் புறக்கனித்தவர் இந்த கட்டளை கிடைக்காத காரணத்தை கொண்டு இச்சரத்தின் பிரகாரம் நீதித் தலைப்பு இரத்து செய்யலாகாது.

(6) இச் சரத்தின் கீழ் ஏதும் சட்டத் தலைப்பில் பதிவாளரின் சான்றிதழிலுள்ள வெளியீடு சரியானது என்பதை கவனிப்பதற்கு பரிசீலனை செய்வதற்கு அல்லது அது தொடர்பாக தீர்மானிப்பதற்கு ஏதும் மாவட்ட நீதிமன்றத்திற்கு அல்லது நீதவான் நீதிபதிக்கு இச் சரத்தின் எவ்வித அதிகாரமும் கிடைத்தலாகாது அல்லது கட்டளை செய்யலாகாது இருத்தல் வேண்டும்.

(7) (3) ஆவது உப சரத்தின் கீழ் விற்பனையால் பெற்ற ஏதும் பணம் (4) ஆவது உப சரத்தின் கீழ் கொடுக்கப்படும் அல்லது அறவிடப்படும் ஏதும் பணம் சந்தப்பத்திற்கேற்ப மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது நீதவான் நீதிமன்ற நீதிபதியால் பதிவாளருக்கு அனுப்ப முடியும். பதிவாளரினால் அப் பணம் தொடர்பாக பொருத்தமான தீர்ப்பை அல்லது தீர்மானத்திற்கேற்ப நல்லதை செய்ய முடியும்.

60 (1) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் அங்கத்துவத்துக்காக ஏதுமொருவருக்கு சமர்ப்பிக்கும் விண்ணப்பமொன்று அச் சங்கத்தால் ஏற்றுக் கொள்ளாத சந்தர்ப்பத்தில் ஏற்றுக் கொள்ளாமைக்கு எதிராக அந் நபரினால் பதிவாளருக்கு ஒரு மனு தொடர்பாக பதிவாளருடைய தீர்மானம் இறுதியானதாக இருத்தல் வேண்டும். மேலும் இதனை சங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வேறு ஏதும் காரணிகள் தொடர் பாக பதிவாளரி னால் தீர்மானம் எடுத்தல்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்தவர் ஒருவர் சங்கத்தின் பதவிக்கு முறையாக தெரிவு செய்து கொள்ளப்பட்டதா அங்கத்தவர் சங்கத்துக்கு அல்லது சபையின் அங்கத்தவருக்கு அல்லது உத்தியோகத்தராக இருப்பது நிறுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக ஏதும் பிரச்சினை தோன்றும் சந்தர்ப்பத்தில் அப் பிரச்சினை தொடர்பாக பதிவாளரினால் அத் தீர்மானத்தை எடுப்பதோடு அவருடைய தீர்ப்பு இறுதியானதாக இருக்க வேண்டும். பதிவாளர் அத் தீர்ப்பை சங்கத்துக்கு அறிவித்தல் வேண்டும். அதன்படி சங்கம் செயல் பட கட்டுப்படுத்தல் வேண்டும் –

(அ) (i) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் அரசாங்கத்திலிருந்து கடன் அல்லது முற்பணம் அல்லது உதவிப் பணத்தை எடுக்கும் போது அவ்வாறான சகல கடன்களும் முற்பணம் நன்கொடை பணம் கீழ்வரும் நிபந்தனைக்குட்படும்.

(ii) சங்கத்தின் நோக்கங்களுக்கான ஏதும் கருமத்துக்கு ஏதும் காணி , கட்டடம் அல்லது அசைவுள்ள அல்லது அசைவற்ற சொத்துக்கள் விலைக்கு வாங்குதல் குத்தகைக்கு எடுத்தல் பரிசாக அல்லது வேறு வகையில் கையேற்றலுக்கு முன் அல்லது அது போன்ற ஒரு காணி கட்டடங்கள் அல்லது வேறேதும் அசைவுள்ள அல்லது அசைவற்ற சொத்துக்களை விற்பதினால் அடகு வைப்பதால் குத்தகைக்கு முன் பதிவாளரினால் அனுமதியை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(iii) சங்கத்தின் நிதியத்தின் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 20 ஆவது வாசகத்தின் பிரகாரம் அசைவற்ற சொத்தொன்றின் தொடர்பாக முன் அடவைத் தவிர ஏதும் காப்பு பத்திரத்தில் பதிவாளரினால் உரிய காரியத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் அல்லது வங்கியாளராக செயல்படும் ஆளொருவர் வேறு அல்லது உரிய காரியத்துக்காக பதிவாளரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் பகுதிகளின் காப்பு பத்திரங்களின் அல்லது ஒழுங்கு விதிகளின் குறிப்பிடப்பட்ட வேறு முறையில் வைப்பிடல் அல்லது முதலீடு செய்தல் வேண்டும்.

(iv) அரசாங்கத்தின் அறக் கொடையால் செயல்படும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிருவாக சபையில் உரிய முறையில் சுய கர்மம் நிறைவேறவில்லையென 46 சரத்தின் கீழ் நடத்தப்பட்ட விசாரணையில் அல்லது ஏடுகளை பரிசீலனை செய்த பின் பதிவாளரின் விருப்பத்தின் பெயரில் அந்த நிருவாக சபை கலைக்கப்படுவதற்கு எதிராக ஏதும்காரணிகள் இருந்தால் அவற்றை சமர்பிப்பதற்கு அந் நிருவாக சபைக்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்த பின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப பதிவாளரினால் அழைக்கப்பட்ட பொதுச் சபையிடம் தாம் தேடிய விடயங்களை அறிக்கைப்படுத்துவதுடன் பதிவாளரினால் நிச்சயப்படுத்தப்பட்ட காலத்துக்குள் பொது சபையினால் அந்த நிர்வாக சபை நீக்கி விட வேண்டும். அவ்வாறாக நீக்கப்பட்ட பொதுச் சபையால் புறக்கணிக்கப்படின் அல்லது கவனிக்காது விட்டால் பதிவாளரினால் அந்த நிருவாக சபை நீக்கப்பட்டதன் பின் பரிபாலன சபையொன்றை நியமிக்கும் படி பொதுச் சபையால் 14 நாட்களுக்குள் பரிபாலன சபையொன்றை நியமிக்க முடியாது போனால் சங்கத்தின் வேலைகளை முகாமைப்படுத்துவதற்கு பதிவாளரினால் தகுதியான நபரொருவரை அல்லது நபர்களை நியமிக்க முடியும். அவ்வாறு நீக்கப்பட்ட நிர்வாக சபை அங்கத்தவர்களை அவ்வாறு நீக்கப்பட்ட தினத்திலிருந்து 5வருடங்கள் கழியும் வரை பதிவு செய்யப்பட்ட எந்தவொரு சங்கத்தின் உத்தியோகத்தராக நியமிப்பதற்கு தகுதியற்றவர்களாகவும் இந்த வாசகத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பரிபாலன சபை 48 ஆவது வாசகத்தின் படி (1) ஆவது உப சரத்தின் (ஆ) பந்தியின் கீழ் பரிபாலன சபையின் 48 ஆவது சரத்தின் பிரகாரம் (1)வது உப சரத்தின் (ஆ) பந்தியில் குறிப்பிட்ட காலத்துள் பதவியை வகிக்க வேண்டும். மேலும் அப் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஆளின் அதிகாரங்களும் வேலைகளும் அவரின் பொறுப்பாகும்.

(v) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் 46 அல்லது 47 எனும் சரத்துக்களின் படி பரிசீலனை அல்லது விமர்சனம் செய்வதற்கு முன் அல்லது பின் ஏதும் பொது சொத்துக்கள் தொடர்பாக நீதிமன்ற செயல்பாடுகளை செய்வதற்கும் அந்த நிர்வாக சபைக்கு கட்டளையிடுவதற்கும் பதிவாளருக்கு அதிகாரம் உண்டு அக் கட்டளைச் செயற்படுத்துவதற்கு நிர்வாக சபை புறக்கணித்தால் அல்லது செயல்படுத்தாது விட்டால் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 1982 ம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்துக்கள் விடயமாக செய்யப்படும் தவறு காரணமாக எடுக்கும் நடவடிக்கையின் படி அக் காரணத்தை நீதிமன்றத்துக்கு சமர்பிக்க பதிவாளர் அல்லது பதிவாளரினால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அதிகாரம் உண்டு.

(ஆ) (i) 46 ஆவது சரத்தின் கீழ் நடத்தப்படும் விசாரணையில் அல்லது ஏடுகளை பரிசீலனை செய்த பின் பதிவு செய்யப்பட்ட சபையின் அல்லது சங்கத்தின் ஏதும் உத்தியோகத்தர் அல்லது சேவையாளரினால் தனது காரியத்தை முறையாக நிறைவேற்றவில்லை. வினைத்திறனோடு தனது காரியத்தை நிறைவேற்ற தகமை இல்லை. அல்லது வேறு வகையில் நிறைவேற்ற முடியாது என பதிவாளர் நினைத்தால் இச் சட்டத்தின் அல்லது 1994ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க ஆணைக் குழுவின் சபை சட்டத்தின் அல்லது வேறு வரையப்பட்ட சட்டத்தில் எது குறிக்கப்பட்டுள்ளதோ சுய எதிர்ப்பை முன் வைக்கக் கூடிய சந்தர்ப்பத்தை அந்த உத்தியோகத்தருக்கு அல்லது சேவையாளுக்கு பெற்றுக் கொடுத்த பின் தேவைப்படும் வகையில் பரிசீலனை நடத்தும் உடன்பாட்டில் அவ் உத்தியோகத்தர் அல்லது சேவையாளரின் சேவையை இடை நிறுத்தல் அல்லது அவருடைய வேலையை தடை செய்தல் எழுத்து மூலக் கட்டளையால் செய்ய முடியும். மேலும் கீழுள்ள பரிசீலனையின் பின் உத்தியோகத்தர் அல்லது சேவையாளரை பதவியிலிருந்து நீக்கலாம் அப்படியாயினும் இதன் உப விதியின்படி செய்யப்படும் பதவி நீக்குதல் கட்டளையில் அதிருப்தியடைந்த சேவையாளரினால் முப்பது நாட்களுக்குள் 1944 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்க சேவை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க சேவை ஆணைக் குழுவிடம் மனுவொன்றை தாக்கல் செய்யலாம். மேலும் அவ் ஆணைக் குழுவின் தீர்ப்பு இறுதியானதாகும்.

(ii) ஏதும் சேவையிலீடுபட்ட ஒருவர் 1வது உப சரத்தின் கீழ் நீக்கப்பட்டவர் நீக்கப்பட நியமப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்க சேவை ஆணைக்குழுவின் நிரந்தரமாக்கப்பட்ட ஒருவர் அந் நியமத்துக்கு எதிராக 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யாத சந்தர்ப்பத்தில் வேறொரு சேவையாளரை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கைகளுக்கு பொருத்தமாக்க முடியும்.

(இ) அரசாங்கத்தின் நிதியால் செயல்படும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் செயல்பாடுகள் வினைத் திறனிலான முகாமை செய்வதற்கு உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சங்கத்துக்கு அரசாங்கம் செய்த முதலீடு அல்லது பணத்தினால் அல்லது பொருளினால் கொடுக்கப்படும் முற் பணத்தின் பாதுகாப்பிற்காக பதிவு செய்யப்பட்ட நிர்வாக சபைக்கு அங்கத்தவராக குறிப்பிட்ட ஆட்கள் தொகை பெயர் குறிப்பது அவசியம் எனவும் சந்தர்ப்பத்துக்கு பொருத்தமானதெனவும் பதிவாளரின் விருப்பமாக இருந்தால் அச் சந்தர்ப்பத்தில் இச் சட்டத்தின் அல்லது வேறு சட்டத்தின் துணைச் சட்டத்தில் எது குறிக்கப்பட்டாலும் அவரால் அவரின் கருத்துப் படி தேவையான அல்லது சந்தர்ப்பத்துக்கு தகுந்தவாறு அந்த பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாக சபை அங்கத்தவராக ஏதொரு ஆள் அல்லது ஆட்களை நியமிக்கலாம். அப்படியாயினும் அவ்வாறு நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களை அந் நிர்வாக சபையின் ஆரம்ப அங்கத்தவர் தொகையின் பாதிக்கு குறைய வேண்டும்.

## XIII ஆம் அத்தியாயம்

### ஒழுங்கு விதிகள்

ஒழுங்குவிதிகள்.

61. (1) இச் சட்டத்தின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் செயல்படுத்தவும் அல்லது அதிகாரத்தை பிரயோகிக்கும் காரியத்துக்கு தேவைப்படும் சகல விடயப் பொறுப்பு அமைச்சரால் தயாரிக்கப்பட வேண்டும்.

(2) சிறப்பாக (1) ஆவது உப வாசகத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களுக்கு பாதிப்பேற்படாத வகையில் அவ் ஒழுங்கு விதிகளின் படி

(அ) சங்கத்தை பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய செயல்முறைகளையும் அதற்கு தேவையான நிபந்தனைகளையும் நியமப்படுத்த முடியும் ;

(ஆ) அங்கத்தவர் என்ற வகையில் அல்லது அண்மித்த அங்கத்தவராக சேர்ந்து கொள்வதற்காக விண்ணப்பிக்கும் ஒருவரை அங்கத்தவராக செயற்படுத்தும் ஆள் ; ஒருவரினால் கடைப் பிடிக்க வேண்டிய நிபந்தனைகளை நியமப்படுத்தலாம். அத்தோடு காலத்துக்குக் காலம் அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கத்தவர்களின் உரிமைகளை பாவிப்பதற்கு முன் செய்ய வேண்டிய கொடுப்பனவுகளை எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை செய்ய முடியும்.

(இ) அங்கத்தவர்கள் கேட்டு விலகுதலும் அங்கத்தவர் தகமையிலிருந்து நீக்குதல் அங்கத்துவத்தை இடை நிறுத்தல் நீக்கிய ஒருவரிடம் பெற வேண்டிய கொடுப்பனவு தொடர்பாக இருந்த அங்கத்தவர்களின் பொறுப்புகள் தொடர்பாக நடவடிக்கைகளை தயாரிக்கலாம்.

(ஈ) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்தவர் தொகை அச் சங்கத்தின் மூலம் வரையறுக்க கூடிய அளவை நியமப்படுத்த முடியும்.

(உ) காலஞ் சென்ற அங்கத்தவருடைய தொடர்புகளின் பெறுமதி நிச்சயப்படுத்தக் கூடிய முறையிலும் அப் பெறுமானத்தை செலுத்தக் கூடிய அல்லது ஒப்படைக்க வேண்டிய நபரின் பெயரைக் குறிப்பிடக் கூடியதாக நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

(ஊ) வாசகத்தின் ஒழுங்கு விதிகளுக்கு கீழ் அங்கத்தவருக்கு உரிமையாக இருக்கக் கூடிய பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் மூலதனத்தின் அதி கூடிய பகுதி அல்லது பங்கு நியமப்படுத்த முடியும்.

(எ) கடன் அல்லது பணம் கடன் பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் அங்கத்தவரினால் செய்ய வேண்டிய கொடுப்பனவுக்கு கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனையும் எழுதி கையொப்பம் வைக்க வேண்டிய கட்டுப்பாடுகள் சட்டப்படியான பதிவுகள் அல்லது வேறு பதிவுகளின் மாதிரிகளை கொடுக்க கூடிய கடன்களின் கால எல்லையை தனி அங்கத்தவருக்கு கொடுக்க முடியும் உச்ச நீதியையும் அது சம்பந்தமாக இடமளிக்க முடியும். அதிக கடன் பத்திரங்களை நியமப்படுத்த முடியும்.

(ஏ) வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடைய சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு இலாபம் பகிர்ந்தளிப்பது ஏதும் நிபந்தனைக்களுக்கு கீழா என்பதும் அந் நிபந்தனையால் சங்கத்தினால் கொடுக்க கூடிய இலாபத்தின் உச்ச அளவை நிர்ணயிக்க முடியும்.

(ஐ) பங்குகளின் மூலம் அல்லது கழிவு பத்திர மூலம் அல்லது வேறேதும் வகையில் நிதியத்தை பெற்றுக் கொள்ளும் முறையையும் வைப்புக்காக கொடுக்கக் கூடிய வட்டியின் அளவையும் முறைப்படுத்த முடியும்.

(ஒ) (i) அங்கத்தவர்களின் பொது சபை கூட்டம் சம்பந்தமாக அக் கூட்டத்தின் செயல்களின் முறைமைகளையும் அந்த கூட்டத்தில் பாவிக்க கூடிய அதிகாரம் தொடர்பாக நடவடிக்கை செய்ய முடியும்.

(ii) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்தவர் ஒருவருக்கு முகாமைத்துவ நிர்வாக சபையின் அல்லது பிரதேச அல்லது கிளை நிருவாக சபையின் அங்கத்தவராக தெரிவு செய்து கொள்வது தொடர்பாக தகுதியின்மையை நியமப்படுத்த முடியும்.

(ஓ) நிர்வாக சபையின் அங்கத்தவர்களும் வேறு உத்தியோகத்தர்களை நியமிப்பது அவர்களுடைய சேவையை இடைநிறுத்தல் அவர்களை நீக்குதல் தொடர்பாகவும் நிருவாக சபையின் கூட்டங்கள் செயல் முறைகள் சம்பந்தமாகவும் நிர்வாக சபையினதும் மற்றும் உத்தியோகத்திரனால் பாவிக்கப்பட கூடிய அதிகாரங்கள் நிறைவேற்றக் கூடிய கடமைகள் தொடர்பாக நடவடிக்கை களை தயாரிக்க முடியும்.

(ஔ) சங்கத்தினால் துணைச் சட்டங்கள் உருவாக்க முடியும். உருவாக்க கூடிய விடயங்களும் துணைச் சட்டங்களை தயாரித்தல் மாற்றுதல் இவ் வேளையில் பரிசீலனை செய்தலின் போது பின்பற்ற வேண்டியசெயல் முறைகளில் அந்த மாற்றுச் சட்டத்தை ஏற்படுத்துதல் வேறுபடுத்தல் பற்றி பரிசீலனை செய்வதற்கு முன் பூரணமாக எழுத வேண்டிய நிபந்தனைகளை நியமப்படுத்த முடியும்.

(க) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் மூலம் வைத்துக் கொண்டு நடைமுறைப்படுத்தக் கூடிய பதிவேடுகள் , கணக்குகள் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் சொத்துக்கள் வரவுகளை காட்டும் ஐந்தொகை கணக்கை காலத்துக்கு காலம் பிரசுரிக்க நியமப்படுத்தலாம் ;

(ங) பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் கணக்காய்வு செய்வதற்காக கொடுக்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் இருந்தால் அக் கட்டணத்தை கொடுப்பதற்காக நடவடிக்கை தயாரித்தல் நடைமுறையுள்ள சங்கத்தின் கணக்காய்வை செய்தல் பரிபாலித்தல் அதற்கு உதவுதல் அதற்கான நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றைச் செய்ய முடியும் கூட்டுறவு கல்வி பயிற்சி பிரசார வேலைகள் ஆலோசனைகள் என்பவற்றுக்காக வட மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் என்னும் நிதியத்தை அமைத்தல் அந் நிதியத்தை பதிவு செய்த சங்கத்தில் ஏற்க கூடிய உப நிதியை நியமப்படுத்துவதற்காக அந் நிதியத்தை பரிபாலிப்பதற்கு ஏற்ப நடவடிக்கைகளை தயாரிக்க முடியும் ;

(ச) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டிய தவணை அறிக்கையையும் அவ் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய ஆட்களும் அறிக்கையை சமர்ப்பிக்காது புறக்கணிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்காக செய்ய வேண்டிய நடவடிக்கையை தயாரிக்க முடியும்.

(ஞ) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் புத்தகங்களில் அடங்கிய குறிப்புகளின் பிரதிகள் சான்று படுத்தக் கூடிய நபர்கள் அப்படி சான்று படுத்தக் கூடிய முறைகள் தொடர்பான ஏற்பாடுகளை ஆக்கலாம்.

(ட) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினது உறுப்பினர்களின் விபரங்களில் உள்ள தரவுகளில் உறுதியாகிய பங்கு பதிவுகளை உறுதி செய்தல்.

(ண) சுற்றோட்ட நியமம் ஒன்றை ஏற்படுத்தி அதை நடைமுறைப்படுத்தல் அந் நிதியத்தை ஈடுசெய்யக் கூடிய நோக்கத்துக்கு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிருவாகத்துக்கு கீழ் ஏதும் நிதியம் ஒன்றை முதலீடு செய்வதற்கு நடைமுறைகளை ஏற்படுத்த முடியும்.

(த) சங்கமொன்று அல்லது அதன் மூலம் பொருட்களை விற்பது தொடர்பான ஏதேனுமென துணைச் சட்டத்தை அல்லது உடன்படிக்கை மீறுவது சம்பந்தமாக ஏதும் பிரச்சினைகளை நிச்சயமாக்கிக் கொள்ளும் விதத்திலும் அது போன்ற ஏதும் பிரச்சினைகளை நிச்சயமாக்கிக் கொள்ளும் விதத்திலும் அது போன்ற ஏதும் மீறுவதினால் ஏற்படும் நட்டத்தை நிச்சயப்படுத்த அல்லது மதிப்பிடக்கூடிய முறையை நியமப்படுத்தலாம்.

(ந) பாதுகாக்கப்படுபவர் அல்லது பாதுகாக்கப்படுபவர்கள் நியமிக்கும் துறைகளும் பதிவாளர் அல்லது பாதுகாக்கப்படுபவர் அல்லது பாதுகாக்கப்படுபவர்கள் முன்னிலையில் நடத்தப்படும் காரியங்களின் போது பின்பற்றக் கூடிய வழிமுறைகளையும் பாதுகாக்கப்படுபவர் அல்லது பாதுகாக்கப்படுபவர்களை தீர்ப்புக்கெதிராக பதிவாளருக்கு மனு தாக்கல் செய்தவிடத்து வைப்புப் பணத்தின் நடவடிக்கையில் பாதுகாக்கப்படுபவர் அல்லது பாதுகாக்கப்படுபவர்களின் தீர்பபுக்களில் பதிவாளரினால் தீர்ப்பை செயல்படுதும் முறையை நியமப்படுத்த முடியும் ;

(பா) அரசாங்கம் அல்லது வட மத்திய மாகாண சபையினால் பண உதவி வேண்டி பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் பின்பற்ற வேண்டிய நிபந்தனையை நியமப்படுத்தலாம்.

(ம ) (பதிவாளரினால் செய்யப்படும் கட்டளைகளுக்கு எதிராக அமைச்சருக்கு மனு தாக்கல் செய்யலாம். இருந்தாலும் இச் சட்டத்தின் கீழ் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் தயாரிக்காத நிலையில் விடயத்தை நிச்சயப்படுத்த முடியும்.

(ய) 61 ஆவது வாசகத்தின் கீழ் நியமிக்கும் ஏலதாரரினால் பின்பற்ற வேண்டிய கரும முறைகளை அந்த ஏலதாரருடைய கட்டளைக்கு எதிராக மனு தாக்கல் செய்யக் கூடிய சந்தர்ப்பத்தை நியமப்படுத்த முடியும்.

(ர) 67 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக நிதியமொன்றை அமைத்து நடைமுறைப்படுத்தி கொண்டு செல்வதற்கு நடைமுறைகளை உருவாக்கல் அந்த நிதியத்தை பணத்தை செலவு செய்யும் விதத்தையும் அதற்கான காரியங்களையும் செய்ய முடியும்.

(ல) இந்த சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் படி மனுவை முன் வைத்து கேட்டல் சம்பந்தமான சரியானதை செய்து பிரயோகிக்க கூடிய மாதிரிகள் கொடுக்க வேண்டிய கட்டணங்கள் பின்பற்ற வேண்டிய கரும முறைகள் அதற்கு தொடர்பான வேறு காரணிகளை நியமப்படுத்தலாம்.

(வ) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர் , முகாமை , நிருவாக சபை அல்லது பிரதேச கிளையின் நிருவாக சபை அங்கத்தவராக தெரிவு செய்து கொள்வதற்கு தகைமைகளை நியமப்படுத்த முடியும்.

(3) வட மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி வேறு எந்தவொரு ஒழுங்கு விதிகளின் அதிகாரங்கள் செல்லுபடியாகாது இருத்தல் வேண்டும். அந்த அங்கீகாரம் தொடர்பான கட்டளையை வர்த்மானியில் பிரசுரிக்க வேண்டும்.

(4) (3) ஆவது உப வாசகத்தின் குறிப்பிடப்பட்ட உரிய கட்டளையை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின் சகல ஒழுங்கு விதிகளும் இங்கு விதிகப்பட்டதாகவும் செல்லுபடியான அதிகாரம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

## XIV ஆவது அத்தியாயம்

### அரசாங்கத்துக்கும் மாகாண சபைக்கும் அறவிட வேண்டிய கடன்

அறவிட வேண்டிய கடன் பணம்.

62 (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் ஏதும் பதவியாளின் அல்லது அதில் இருந்த அங்கத்தவரின் அந் நிலையில் அரசாங்க கடன் மாகாண சபை கடன் அரசாங்கத்தின் பிணையாக மாகாண சபையின் பிணையான கடனுக்காக அறவிட வேண்டிய பணமும் அரசாங்கமும் மாகாண சபையால் அளிக்கப்பட்ட ஏதும் பணம் உட்பட்ட அரசாங்கத்துக்கும் மாகாண சபைக்கு அறவிடக் கூடிய எல்லாப் பணம் குடியரசுக்கு அறிவிடவேண்டிய கடனை அறவிட்டுக் கொள்ள அரசாங்கம் கடனாளி கட்டளை சட்டத்தின் கீழ் நடவடிக்கையில் உள்ளபடி அறவிட்டுக் கொள்ள முடியும். ஆனாலும் 57 (2)வது வாசகத்தின் படி நடவடிக்கையின் படி வேறு எந்த நபருக்கும் அல்லது நபர்களுக்கும் அறவிட வேண்டியபணத்துக்கு மேலாக அதற்கு முக்கியத்துவம் கிடைத்தல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் அரசாங்கத்துக்கும் வட மத்திய மாகாண சபைக்கு அறவிட வேண்டிய 1வது வாசகத்தின் கீழே அறவிட்டுக் கொள்ள வேண்டிய பணத்தை முதலாவது சொத்துக்களிலிருந்து அறவிட முடியும். இரண்டாவது அங்கத்தவர்களின் பொறுப்புக்கள் வறையறுக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட சங்கம் தொடர்பாயின் அங்கத்தவரின் பொறுப்புகள் வறையரையின் கீழ் அங்கத்துவர்களிடமிருந்து மூன்றாவது மற்றைய சங்கங்கள் சம்பந்தமாயின் அங்கத்தவரிடம் அறவிட முடியும்.

## XV ஆவது அத்தியாயம்

### பல்வேறுப்பட்ட விடயங்கள்

பதிவாளர் அவர்களால் நிபந்தனைக்கு அங்கத்துவத்தை ஏதும் ஒரு சங்கம் விடுவிப்பதற்கு அமைச்சரின் விசேட அதிகாரங்கள்.

63. இந்த சட்டத்தில் எது குறிப்பிடப்பட்டாலும் அதை கவனியாது விடயப் பொறுப்பு அமைச்சர் செய்வது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விசேட கட்டளையாலும் அவரால் நியமப்படுத்தக் கூடிய ஏதும் கீழ் தொடர்பாகபதிவு செய்யப்படுதல் தொடர்பாக இச் சட்டத்தின் நியமங்களின் ஏதும் ஒரு நியமப்படி ஆணையாளரினால்அல்லது சங்கச் சபை வகுப்பை விடுவிக்கலாம்.

இச்சட்டத்தின் நடவடிக்கையினால் சங்கத்தை விடுவிப்பதற்கு அமைச்சருக்கு விசேட அதிகாரம்.

64. அமைச்சர் அவர்களால் பொதுவான அல்லது விசேட கட்டளையின் மூலம் இச் சட்டத்தின் நடவடிக்கையின் கீழ் பதிவு செய்யப்ப்பட்ட ஒரு சங்கம் அல்லது சங்க வகுப்பை விடுதலை செய்வதற்கு அல்லது கட்டளையில் நிச்சயப்படுத்தி குறிப்பிடக் கூடிய ஏதும் தினத்திலிருந்து அல்லது வேறுபடுத்தல் அந் நடவடிக்கையை சங்கத்துக்கு அல்லது சபைக்கு பொருத்தமாக இருக்க வேண்டுமென கட்டளையிட முடியும்.

'கூட்டுறவு' என்ற பதத்தை பிரயோகிப்பதை வரையறுத்தல்.

65 (1) "ஐக்கிய உதவி" (எக்சத் சஹய) என்ற பதத்தில் அல்லது "கூட்டுறவு" என்னும் சொல்லில் அல்லது தமிழ் மொழியில் ஐக்கிய (கூட்டுறவு) என்ற பதம்அல்லது கோப்பரேட்டிவ் என்ற ஆங்கில மொழிச் சொல் எனும் பெயரைக் கொண்டு வியாபாரம் செய்வது வர்த்தக நடவடிக்கைகளை கொண்டு நடத்த மாகாண பதிவாளரினால் பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒன்றை தவிர்ந்த எந்த ஆட்களினாலும் அமைச்சரின் அங்கீகாரம் இன்றி செய்தல் முடியாது.

(2) இச் சட்டத்தின் நடைமுறைகளை மீறும் எந்தவொரு ஆளுக்கு நீதவான் நீதிமன்றத்தினால் நடத்தப்படும் சிறு வழக்கின் பின் 5000.00 ரூபாவுக்கு அதிகரிக்காத தண்டனையையும் குற்றம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் போது மேலும் அக் குற்றவாளி குற்றம் செய்தால் அவ்வாறு குற்றம் செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 500.00 மேலதிக தண்டனைக்கு ஆளாக வேண்டும்.

*சங்கத்துக்கு கிடைக்கும் பணத்தை திருப்பி கொடுப்பதற்கு அல்லது சொத்துக்கள் திருப்பி ஒப்படைப்பதற்கு அல்லது சொத்துக்களை வெளியிடுவதற்கு பதிவாளரினால் நியமப்படுத்த முடியும்.*

*66 (1) பதிவு செய்யப்பட்ட சங்கம் சம்பந்தமாக 344 வது சட்டத்தின் கீழ் கணக்காய்வின் போது 46 சட்டத்தின் கீழ் விசாரணையில் அல்லது 47 வது சட்டத்தின் கீழ் புத்தகங்கள் பரிசீலனை செய்யும் போது அல்லது விமர்சனத்தின் போது அல்லது கணக்கை தீர்த்து மூடிவிடும் போது அச் சங்கத்தை அமைக்கும் போது அல்லது முகாமைத்துவத்தின் போது சமூகமளித்து இந்த சட்டத்தின் அல்லது வேறு சட்டத்தின் நடைமுறைகளுக்கு அல்லது வேறு சட்டத்தின் நடைமுறைகளுக்கு அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கட்டளைகளுக்கு அல்லது சங்கத்தின் துணைச் சட்டங்களுக்கு நிர்வாக ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப பதிவாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பணச் செயல்பாட்டில் பதிவாளர் கூட்டுறவுசேவையாளர் ஆணைக் குழுவினால் வெளியிட்ட ஏதும் பொது கட்டளைகளுக்கு முரணாக சங்கத்தின் நிதியத்தை பயன்படுத்திய யாரும் ஒருவர் அல்லது ஆட்கள் அல்லது ஆட்களின் குழுக்கள் அச் சங்கத்தில் அல்லது தற்போது இருக்கும் ஏதும் உத்தியோகத்தர்களால் அச் சங்கத்துக்கு ஏதும் பணம் அல்லது சொத்துக்கள் கிடைக்கவேண்டும் என தோன்றும் சந்தர்ப்பத்தில் சந்தர்பபத்திற்கு ஏற்றா போல் பதிவாளரினால் தனது தேவைக்கு புறம்பாக சங்கத்தின் நிர்வாக சபை அல்லது ஏலதாரர் அல்லது கடனாளி அல்லது உபயதாரினவேண்டுதலுக்கு புறம்பாக அந்த ஆட்களின் குழுக்கள் அல்லது உத்தியோகத்தர்கள் அல்லது சேவையாட்களின் செயற்பாடுகள் சம்பந்தமாக பரிசீலனை செய்தல் அத்தோடு*

*(அ) அப் பணத்தை அல்லது அதன் பயன்படுத்திய பதிவாளரினால் பொருத்தமானது எனக் கருதும் வட்டியுடன் திருப்பிக் கொடுக்குமாறு ;*

*(ஆ) அதன் மற்றைய சொத்துக்கள் அல்லது அதன் பகுதியை திருப்பிக் கொடுக்குமாறு அல்லது ;*

*(இ) சங்கத்தின் சொத்துக்களுக்கு பதிவாளரினால் பொருத்தமானதெனக் கருதும் ஏதும் உபயப் பணம் நட்ட ஈடாகக் கொடுக்குமாறு அவருக்கு அல்லது அக் குழுவுக்கு நியமப்படுத்தி கட்டளையிடலாம். அவ்வாறு ஒருவருக்கு அல்லது ஆட்களுக்கு எதிரான அவ்வாறான கட்டளை பிறப்பிப்பதற்கு முன் பதிவாளரினால் அவ்வாறான கட்டளை ஏன் பிற்பிக்கவில்லை என்பதற்கான காரணியை சொல்வதற்கும் காரணம் காட்டுவதற்கும் அந்த ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு குழுக்களுக்கு சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும்.*

*(2) பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்துக்கு ஏதும் பணத்தை கொடுப்பதற்காக அல்லது அங்குள்ள சொத்துக்களுக்கு ஏதும் உபயப் பணம் நட்டயீடாக கொடுப்பதற்கு (1) உப சரத்தின் கீழ் செய்யப்படும் கட்டளையின் பிரகாரம் செயல்படுத்தாத சந்தர்ப்பத்தில் சங்கத்தை பதிவு செய்த இலக்கம் அமைந்துள்ள இடத்தில் அல்லது கட்டளை இடப்பட்டது யாரும் ஒருவருக்கு அல்லது ஆட்களுக்கு அல்லது ஆட்களின் குழுவுக்கு அல்லது உத்தியோகத்தருக்கு சேவையாளுக்கு எதிராக அவ் ஆள் அல்லது ஆட்கள் அல்லது குழு உத்தியோகத்தர் சேவையாளர் வதியும் அல்லது வியாபாரம் செய்யும் நிலையத்தில் அமைந்துள்ள பிரிவினுள் நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதவான் நீதிபதியினால் அப் பணத்துக்காக சிறைத் தண்டனை வழங்க முடியாது. தண்டத்துக்கு மட்டும் தண்டனை விதிக்க கூடிய குற்றத்துக்காக அவ் ஆள் அல்லது ஆட்கள் குழு உத்தியோகத்தர் சேவையாள் தொடர்பாக நீதவான் தண்டனையை கட்டளை மூலம் நியமப்படுத்திய தண்டமாக அறவிட்டுக் கொள்ளலாம் அத்தோடு 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்ற வழக்கு சட்டக் கோவை சட்டத்தின் 291 ஆம் சரத்தின் கீழ் அச் சரத்தின் 1வது உப சரத்தின் (அ) (இ) பந்தி தவிர்ந்த நடவடிக்கைகளுக்கு பொருந்துவதாக வேண்டும். மேலும் அத் தண்டனை விதிக்கும் சந்தர்ப்பத்தில் அச் சரத்தின் நடவடிக்கைகளின் படி நீதவான் அவர்களால் செய்யப்படும் கட்டளையின் உண்மைத் தன்மையை இந்த சரத்தின் கீழ் எந்த சட்டப் புத்தகத்திலென கவனித்து பார்க்க பரிசீலனை செய்ய தீர்மானம் எடுக்க நீதிபதிக்கு இவ்வாசகத்தில் எவ்வித அதிகாரமும் பெறுவதற்கு அல்லது நியமம் ஆகாது இருத்தல் வேண்டும்.*

*(3) வேறு ஏதும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் ஏதும் குற்றம் சம்பந்தமாக (1) ஆவது உப சரத்தின் கீழ் குறிப்பிட்ட எந்த ஒரு ஆளுக்கும் அல்லது ஆட்களுக்கும் அல்லது உத்தியோகத்தருருக்கு அல்லது சேவையாளுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு அல்லது வழக்கை நடத்திச் செல்வதற்கு இச்சட்டத்தின் முன் நடவடிக்கைகள் அல்லது அதன் கீழ் ஏதும் கட்டளை இடுவதை காரணமாக கொண்டு தவிர்க்குமாறு அல்லது அது வேறு வகையில் பாதிக்கும் என்ற வகையில் விளங்கிக் கொள்வது இருத்தல் வேண்டும்.*

*(4) (அ) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கம் ஒன்றின் அல்லது கூட்டமொன்றின் தலைவரோடு சகல நிருவாக சபை அங்கத்தவரினாலும் வருடாந்தம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் உரிய மாதிரியில் சொத்துக்களை வரவுகளின் வெளியீட்டில் அது வெளியிடப்பட்டது எவ் வருடத்துக்காக என அந்த வருடம் பங்குனி மாதம் 31ம் திகதிக்கு முன் நடத்தப்பட்டததாகவும்*

(i) *அவருடைய எல்லா சொத்துகளும் வரவுகளும் சம்பந்தமாக*

(ii) *அவருடைய துணையாளரின் சொத்துக்களும் வரவுகளும் சம்பந்தமாக*

(iii) *அவருடைய ஒவ்வொரு பிள்ளைகளில் எல்லா சொத்துக்களும் வரவுகளும் வெளியீட்டில் காட்டுதல் வேண்டும்.*

*(ஆ) (1) ஆவது உப வாசகத்தின் குறிப்பிடப்பட்டுள்ள வெளியீட்டை பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் தலைவர் அல்லது நிர்வாக சபை சகல அங்கத்தவரினாலும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் சக்கத்துக்கேற்ப அத் தலைவர் அல்லது சங்கத்தின் அங்கத்தவரை நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து 03 மாதத்துக்குள் அவர் தலைவர் பதவியை அல்லது நிர்வாக சபையில் அங்கத்துவ பதவியை வகிப்பது தடை செய்யப்பட்டால் அன்றி அவர் முதலில் வெளி யிட்டதை வருடாந்தத்தின் பின் தொடங்கும் ஒவ்வொரு தொடர் வருடத்தின் யூலை மாதம் 01 ஆந் திகதிக்கு முன் செய்தல் வேண்டும் அவ்வாறு உரிய தினத்தில் வெளியீட்டை செய்யாததின் காரணமாக தனது தகமையை அல்லது பதவியை இரத்துச்செய்வதற்கு பதிவாளருக்கு அதிகாரம் உண்டு.*

*67. பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் கணக்குகள் 44வது வாசகத்தின் பிரகாரத்திலுள்ளபடி கணக்காய்வுகள் செய்த பின் 46 வது வாசகத்தின் கீழ் விசாரணையின் பின் பதிவு செய்யபட்ட ஒரு சங்கத்தின் பதிவேடுகளை பரிசீலனை செய்து பார்ப்பது அதன் காரியங்களை விமர்சனம் செய்வது 47வது வாசகத்தின் கீழ் செய்ததன் பின் சங்கத்தின் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அங்கத்தவர் அல்லது சேவையாளர் தமது தகமைக்கு பணம் ஏதும்பொருட்கள் சொத்துக்களுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது அதற்கு பொறுப்பற்று இருந்தால்அப் பணம் பொருள் சொத்துக்கள் தொடர்பாக ஆதிக்கம் உள்ள சங்கத்தின் ஒருவரினால் அந்த உத்தியோகத்தர் அங்கத்தவர் சேவையாளர் தன்னிடமுள்ள தன்னால் அறவிட வேண்டிய தன்னால் வைக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட கணக்கு புத்தகங்களில் வெளியீட்டில் காட்டப்பட்டுள்ள பணப் பெறுமதியை கொடுக்கும் படி பதிவாளரினால் அவ் ஆளுக்கு நியமப்படுத்தல் சட்டப்படியாதல் வேண்டும். மேலும் அவ்வாறு நியமப்படுத்தியதன் பின் அவ் ஆளினால் அப் பணத்தை அல்லது அதன் மிகுதியை உடனே செலுத்துதல் அல்லது விநியோகித்தல் அல்லது பொருட்களின் சொத்துக்களில் பெறுமதியை கொடுத்தல் உரிய முறையில் அதற்காக கணக்கை முன் வைக்காது விட்டால் அவர் நேர்மையில்லாது நம்பிக்கை துரோகம் செய்த குற்றத்துக்காக குற்றவாளியாவதோடு நீதவான் முன்னிலையில்நடத்தப்படும் சிறு வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாக்கப்பட்டால் பத்து வருடத்துக்கு அதிகரிக்காத காலத்துக்கு சிறைத் தண்டனைக்கு அல்லது ரூபா 5000 தண்டத்துக்கும் ஆளாவார். அத் தண்டனை நீதவானின் பொது நீதிமன்றத்தின் அதிகாரத்து மேலாயினும் அவர் கீழ் படிதல் வேண்டும்.*

*நம்பிக்கை துரோகம் செய்தல் தொடர்பாக உத்தியோகத்தர் போன்றவர்களின் பொறுப்புக்கள்.*

. *68 (1)* வேறு ஏதும் வரையப்பட்ட சட்டத்தின் எது குறிபிடப்பட்டிருந்தாலும் அதைக் கவனியாது பதிவாளரினால் தேவையென அவர் கருதும் இடத்து

*ஏதும் தகவல்கள் போன்றவற்றை முன்வைக்குமாறு பதிவாளருக்கு.*

(அ) ஏதும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் வங்கியோடு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக ஏதும் தகவல் கொடுக்குமாறு ;

(ஆ) வங்கியுடன் நடத்தும் சங்கத்தின் கணக்குகளை காட்டும் பிரதிகளை வங்கியில் வைத்திருக்கும் ஏடுகளிலிருந்து முன் வைக்கும் படி;

(இ) சங்கத்தினால் அல்லது வரையறுக்கப்பட்ட சங்கத்தினால் பிரதி செய்யப்பட்ட ஏதும் காசோலையை முன் வைக்குமாறு ஏதும் வங்கிக்கு நியமப்படுத்த முடியும்.

வங்கிக்கு நியமப்படுத்தலாம்.

*(2)* பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்கு பொருந்தும் விடயமொன்று தொடர்பாக விமர்சனம் நடத்தல் விசாரணை செய்தல் 1972 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு சட்டக் கோவையின் சட்டம் ஓஏஐஐ அத்தியாயத்தின் கீழ் வழக்கு போடல் நடத்துதல் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தருக்கு சட்டப்படி முடியும்.

*69.* ஸ்தாபன கட்டளை சட்டத்தினதும் தொழில் சங்க கட்டளை சட்டத்தின் நடவடிக்கைகளும் அந்த கட்டளை சட்ட திருத்தம் செய்த ஏதும் சட்டங்களின் நடவடிக்கைகள் இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட சங்கங்களுக்கு பொருத்தமாகாது இருத்தல் வேண்டும்.

ஸ்தாபன கட்டளை சட்டமும் தொழில் சங்க கட்டளை சட்டமும் பொருத்தமாகாது என்பது.

*நடைமுறையுள்ள சங்க ஒழுங்கு விதிகள் என்பன வைத்துக்கொள்ளல்.*

*70 (1) இச் சட்டத்தை அமுல் நடத்தும் போது 1983 ஆம் ஆண்டின் 32 இலக்கத்தினதும் 1993 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்ட 1972 ம் ஆண்டு 5ம் இலக்கம் கொண்ட கூட்டுறவு சங்க சட்டம் அல்லது அந்த சட்டத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கமொன்று இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக கவனித்தல் வேண்டும் அச்சங்கத்தின சட்டத்திலுள்ள துணைச் சட்டத்தில் வேறுபடுத்தி பரிசீலிக்கும் வரை இச் சட்டத்தில் வெளியிடப்பட்ட நடவடிக்கைகளோடு பொருந்தும் வரை தொடர்ந்து அதிகாரத்திலிருக்கும்.*

*(2) இச் சட்டத்தில் செயல்படுத்தும் போது 1983ம் ஆண்டின் 32 ஆம் இலக்கம் கொண்டது 1993 ம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்திய 1972 ம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவு சங்கச் சட்டம் அல்லது அச் சட்டத்தால் இரத்துச் செய்யப்பட்ட ஏதும் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட இச் சட்டம் ஆரம்பிக்கும் வேளையில் அதிகாரத்திலுள்ள சகல ஒழுங்கு விதிகள் இச் சட்டத்தின் நடைமுறைகள் பொருந்தும் வகையில் இச் சட்டத்தின் கீழ் அமுலாக்கப் பட்டதாக கருதுதல் வேண்டும். அவ் ஒழுங்கு விதிக்காக 61 வது வாசகத்தின் கீழ் புதிய ஒழுங்கு விதிகள் தயாரிக்கும் வரை அது தொடர்பாகஅதிகாரத்தில் இருக்கும்.*

*(3) இச் சட்டத்தை செயல்படுத்தும் போது 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1993 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்த 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் அல்லது சட்டத்தின் படி இரத்து செய்யப்பட்ட ஏதும் சட்டங்களின் கீழ் செய்யும் செய்யப்படுவதாக கருதப்படும் அறிவித்தல்கள் பாதுகாக்கப்பட்டவர்களினால் செய்ததாக கருதப்படும் சகல அளிப்புகளும் பதிவாளரினால் ஒப்படைத்ததாக கருதப்படும் சகல பெரிய வழக்குகள் வேறு வழக்கு செயல்களும் உருவாக்கியுள்ள சகல பிரச்சினைகளையும் இயன்றளவு இச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டதாக தோன்றியதாக கருதல் வேண்டும்.*

நிதி நிதியச் சட்டத்தின் கீழ் காப்புறுதி வைப்புகளுக்கு பொருத்தமான சொத்துக்கள் அதன் வைப்புக்களுக்கு பொருந்தும் வகையில் வரவை நிரப்புதல் தொடர்பாக அன்றி பயன் படுத்தக்கூடாது.

71. ஏதொரு வகை வங்கி வர்த்தகத்தை நடத்திச் செல்லும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் வைப்பு செய்யப்பட்ட பணம் நீதி சட்டத்தின் 5 ஆவது அத்தியாயத்தில் ii ஆவது பகுதியில் கீழ் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அப்பங்கு காப்புறுதி செய்யப்பட்டு பாதுகாப்பு வைப்பிற்கு சொத்துக்கள் இச் சட்டத்தின் வேறு எந்த சட்டத்தில் எவ்வாறு குறிப்பிட்டு இருந்தாலும் அதை கவனியாது அவ்வைப்பிற்கு பொருத்தமான வரவை நிரப்புதல் அல்ல வேறு காரியத்துக்காக பிரயோகத்துக்கு எடுத்தலாகாது

*சட்டப்படி செயல் படாமைக்காக தண்டனை.*

*72 (1) இச் சட்டத்தின் காரியங்களுக்காக பதிவாளரினாலோ அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு ஆளினால் நியமிக்கப்பட்ட வேறு ஆளினால் நியமிக்கப்பட்ட ஏதும் செயலைசெய்யும் போது தகவல்களை வேண்டுமென புறக்கணிக்கும் சகல பதிவு செய்யப்பட்ட சங்கம் அல்லது அதன் உத்தியோகத்தர் அல்லது சேவையாளர் அல்லது சங்க அங்கத்தவர் இச் சங்கத்தின் நடவடிக்கையின் கீழ் விநியோகிக்கப்பட்ட ஏதும் அழைப்பு கட்டளைக்கும் சட்டப் படி வரையப்பட்ட கட்டளைக்கு வேண்டுமென்றே சாதாரண காரணிகளின்றி சொற்கேளாதொருவர் இச்சட்டத்தின் நடவடிக்கையின் கீழ் தகவல்களை அறிவிக்கும் படி அதிகாரம் அளிக்கப்பட்ட அவருக்கு அவ்வாறு அறிவித்தலை சட்ட படி நியமப்படுத்தி இருந்தால் அதை அதிகரிக்காது புறக்கணிக்க சகல ஆளுக்கும் வேண்டுமென்றே பொய்யான அறிக்கையை முன் வைக்கும் அல்லது பொய்யான தகவல்களை அறிவிக்கும் சகல பதிவு செய்யப்பட்ட சங்கம் அல்லது அதன் உத்தியோகத்தர் சேவையாளர் அங்கத்தவர் இச் சட்டத்தின் கீழ் தவறு செய்ததாக தவறுக்கு குற்றவாளியாவார்.*

*(2) (1) ஆவது உபசரத்தின் கீழ் ஏதும் தவறு செய்தால் எல்லோரும் நீதவான் முன்னிலையில் நடத்தப்படும் வழக்கு விசாரணையின் பின் நடத்தப்படும் சிறு வழக்கு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டால் இரண்டு வருட காலத்துக்கு குறையாத சிறை தண்டனையும் தண்டமும் இவை இரண்டில் ஒன்று அல்லது இரண்டு தண்டனையையும் அனுப்புதல் வேண்டும்.*

*(3) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் இச் சட்டத்தின் கீழ் குற்றம் விளைத்த சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டிய கடமைகளை மீறினால் அக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு துணைச் சட்டத்தினால் அல்லது ஒழுங்குவிதிகளினால் கட்டுப்பட்ட சங்கத்தின் சகல உத்தியோகத்தர்களும் அதன் அங்கத்தவர்கள் அக் குற்றத்தை செய்வது பற்றி அறியாது இருந்ததாக அல்லது அதை தவிர்ப்பதற்கு முயற்சி செய்ததை ஒப்புவித்தாலன்றி அவரால அக் குற்றத்தை செய்திருந்தால் அவர் குறிப்பிட்ட தண்டனையை அனுபவித்தாக வேண்டும்.*

(4) இச் சட்டத்தின் கீழ் சுய காரியங்களை நிறைவேற்றும் போது அல்லது கருமங்களைச் செய்யும் போது நன் நோக்குடன் செய்யப்பட்ட செயலென பதிவாளருக்கு பதில் சிரேஷ்ட உதவி , உதவி பதிவாளருக்கு இச் சட்டத்தின் கீழ் பதிவாளரின் கீழ் பதிவாளரினால் உரிய முறையில் அதிகாரம் அளிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட வேறு ஆளுக்கு எதிராக எந்தவொரு சிவில் அல்லது குற்ற வழக்கு தொடர முடியாது.

*சங்கத்தின் சட்டத்தால் ஆக்கப்பட்ட காரியத்துக்காக சமூகமளிக்க பதிவாளருக்குள்ள அதிகாரம்.*

73. (1) பதிவாளருக்கு சாதாரண அல்லது விசேட கட்டளையால் அதிகாரம் பெற்ற ஒருவருக்கு எந்த சந்தர்ப்பத்திலும் தான் அவரினால் அந்த நியமப்படி நியமிக்கப்பட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் எந்தவொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் விசேட பொது சபை கூட்டத்தில் எந்த சங்கத்தில் எந்தவொரு பிரதேச பொது சபையின் விசேட பொது சபையை கூட்டுவதற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் அவ்வாறான கூட்டத்துக்கு அச் சங்கத்தின் பொது சபைக்கு சமூகமளித்து வாக்களிப்பதற்கு தகுதியுள்ள அங்கத்தவர்கள் அல்லது பிரதி நிதிகளின் இருபது பேர் அல்லது ஐந்திலொரு தொகையினர் சமூகமளிப்பது போதுமானதாகும் அத் தொகையினர் கோரமாகக் கருதப்படல் வேண்டும். மேலும் செயல் படாத சங்கத்துக்கு இது பொருந்தாது அதே போன்று அவ்வாறான பொதுக் கூட்டம் அல்லது பிரதேச மாகாண சபைக் கூட்டம் சங்கத்தின் பொது சபைக் கூட்டத்துக்கு சங்கத்தின் துணைச் சட்டத்திலுள்ள படி அந்த பொது சபைக்கு அதிகாரங்கள் உரித்தாக வேண்டும்.

(2) பதிவாளருக்கு அல்லது அவரினால் எழுத்து மூலமாக அதிகாரம் பெற்ற ஒருவருக்கு எந்தவொரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் நிருவாக கூட்டம் அல்லது அச்சங்கத்தின் பிரதேசநிருவாக சபை எந்தவொரு சந்தர்ப்பத்தில் தன்னால் நியமப்படுத்தும் விதத்தில் நியமப்படுத்திய நேரத்தில் குறிப்பிட்ட இடத்துக்கு அழைப்பதற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறான கூட்டத்துக்கு அந்த ஒவ்வொரு சங்கத்தின் நிருவாக சபைக்கும் நியமிக்கக் கூடிய பிரதிநிதிகள் தொகை ஐந்திலொன்று பகுதியின் சமூகமளித்து இருப்பது போதுமானதாகும். அத் தொகை கோரமுள்ளதாக கருதப்படும் மேலும் செயலற்று இருக்கும் கூட்டுறவு சங்கத்துக்கு இது பொருத்தமற்றதாகும். அதே போன்று பணிப்பாளர் சபையின் துணை குழு தொடர்பாக இது பொருந்தாது அவ்வாறான நிருவாக சபையின் கூட்டத்துக்கு சங்கத்தின் துணைச் சட்டங்களின் அவ்வவ் நிருவாக சபை நிச்சயிக்கப்பட்ட அதிகாரங்கள் உரிமையாக இருக்க வேண்டும்.

(3) நிருவாக சபை கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கும் போது அவசியம் என தனக்கு தோன்றும் சங்கத்தின் புத்தகங்கள் ஆவணங்கள் காகிததாதிகளை முன் வைக்குமாறு நியமப்படுத்துவதற்கு பதிவாளருக்கு:ம் அவரினால் எழுத்து மூலம் அதிகாரம் பெற்ற ஒருவருக்கும் அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறான சகல கட்டளைகளின் படி செயல்படுத்துவதற்கு சங்கத்தின் அல்லது சங்கத்தின் செயலாளருக்கு பொறுப்பானதாகும். பதிவாளரினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆளுக்கு மேலே (1) (2) ஆகிய உப சரத்தின் கீழ் அழைக்கப்பட்ட எந்தவொரு கூட்டத்துக்கு தலைமை தாங்க முடியும். இருந்த போதிலும் அக் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலில் நிகழ்ச்சிகளை தீர்மானித்துக் கொள்வதற்கு வாக்கு எடுத்தல் தேவையில்லை.

(4) பதிவாளருக்கு அவருடைய சாதாரண அல்லது விசேட எழுத்து மூல கட்டளை மூலம் அதிகாரம் பெற்ற ஒருவருக்கு அல்லது பதிவு செய்யப்படட சங்கத்துக்கு அல்லது கூட்டத்துக்கு எந்தவொரு பொது சபை கூட்டத்துக்கும் அல்லது நிருவாகசபைக் கூட்டத்துக்கும் எந்தவொரு பொதுக் கூட்டத்துக்கும் நிருவாக சபைக் கூட்டத்துக்கும் சமூகமளிப்பதற்கு பேசுவதற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.இருப்பினும் பதிவாளருக்கு அல்லது அவரால் அவ்வாறான அதிகாரத்தை பெற்ற ஆளுக்கு அவ்வாறான கூட்டத்துக்கு வாக்களிப்பதற்கு அதிகாரம் இல்லை.

*செயல்திறன்மிக்க அரசியல் மட்டத்தில் பதவி வகிப்போர் கூட்டுறவு அபிவிருத்தி*

74.(1) பாராளுமன்றஅங்கத்தவருக்கு மாகாண சபை அங்கத்தவருக்கு அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கத்தவருக்கு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் நிருவாக சபையில் எந்தவொரு பதவியையும் வகிக்க தகமையற்றவர் ஆவார்.

*ஆணையாளர் பதிவாளர் நிர்வாகக் குழு பதவி வகிப்போர் நிர்வாக சபைக்கு எந்தவொரு பதவியும் வகிக்க தகுதியற்றவர்.*

(2) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பதிவாளரின் நிருவாகத்துக்கு உட்படும் உத்தியோகத்தருக்கு ஆணையாளர் , பதிவாளரின் நியமனத்தாலன்றி கூட்டுறவுச் சங்கத்தின் நிருவாக சபையின் எந்த பதவிக்கும் நியமிப்பதற்கு தகுதியற்றதாகும். கூட்டுறவுச் சங்கத்தின் உத்தியோகத்தரின் சங்கத்துக்கு இது பொருத்தமகாது.

பொருள் விளக்கம்.

75 சொற்கள் தொடர்பாக வேறு கருத்துக்கள் அவசியம் ஏற்படின் அல்லது இச் சட்டத்தின் ''கூட்டுறவுச் சங்கம்'' என்பது கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டமும் உட்படும்.

''மாற்றுச் சட்டம்'' என்பது தற்காலத்தில் அதிகாரத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட துணைச் சட்டத்தை கருதுவதோடு அம் மாற்றுச் சட்டம் பதிவு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்டதும் உள்ளடங்கும்.

''அமைச்சர்'' என்பது பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் அல்லது கூட்டம் ஒன்றின் அதன் கருமங்களையும் முகாமையையும் பொறுப்பேற்ற அச் சங்கத்தின் அல்லது கூட்டத்தின் பரிபாலன சபையைக் கருதும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அல்லது கூட்டத்தின் அல்லது கூட்டத்தின் பணிப்பாளர் சபையும் இச் சட்டத்தின் 52வது வாசகத்தின் நடவடிக்கையின் கீழ் பதிவாளரினால் நியமிக்கப்படும் ஆட்களும் இதற்குட்படும்.

''உத்தியோகத்தர்'' என்பது சங்கத்தின் அல்லது அதன் ஏதொரு கிளைக்கு அல்லது கூட்டத்தின் அல்லது அதன் இறைக்கு தலைவர், உப தலைவர், செயலாளர் , பொருளாளர் அல்லது முகாமையாளர் சங்கத்தின் அல்லது கூட்டத்தின் நிருவாக சபை அங்கத்தவரும் அச் சங்கத்தின் அல்லது கூட்டத்தின் செயற்பாடுகள் சம்பந்தமாக கட்டளை பிறப்பிப்பவர் அங்கத்தவர் அல்லது கூட்டத்துக்கு நிருவாக கட்டளைகளினால் அல்லது துணை சட்டங்களின் அதிகாரம் அளிக்கப்படும் மற்றும் உரிய ஆட்கள் உட்படுவர்.

வங்கி என்பது

(அ) மக்களின் கேள்வி வைப்பு பணத்தை பொறுப்பேற்கும் அல்லது கேள்வி வைப்பு பணத்தை உருவாக்கி வர்த்தகத்தில் இலக்கை அடைவதற்கு சட்டத்தை உட்படுத்திய சபையாகும்.

(ஆ) அரசாங்கத்துக்காக செயல்படும் கடன் அளிக்கும் முற் பணம் கொடுத்தல் முதலீடு செய்பவர் அல்லது மக்களிடமிருந்து பணத்தை வைப்பாக்கல் பொறுப்பேற்று (ஏதும் வரையப்பட்ட சட்டத்தின் மூலம் அல்லது ஏதொரு முறையில் அமைக்கும்) பிரதிநிதிகளின் நிறுவனம் அல்லது நிறுவனமாகும்.

(இ) இலங்கை அபிவிருத்தி பண ஆக்கச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அபிவிருத்தி பணக் கூட்டுதாபனம்

(ஈ) கூட்டுறவு சங்க அபிவிருத்தி விடயப் பொறுப்பு அமைச்சரை கேட்டுபண விடயப் பொறுப்புஅமைச்சரால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளையின் பிரகாரம் இச் சட்டத்தின் செயல்பாடுகளுக்காக வங்கியாக வெளியிடப்பட்ட வேறு ஆள் ஒருவர் அல்லது ஆட்களின் சபையாக கருதும்.

''ஆரம்ப சங்கம்'' என்பது 6(1) எனும் சட்டத்தின் (ஆ) (இ) யும் (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏதும் நிதியத்தை கொண்ட அல்லது ஏதும் காரியத்துக்காக அமைக்கப்படும் சங்கம் அல்லாத பதிவு செய்யப்பட்ட சங்கத்தை கருதலாம்.

''அரச நிதியம்'' என்பது எந்தவொரு கூட்டுறவுச் சங்கத்துக்கு மத்திய அங்கத்தவரால் வட மத்திய மாகாண சபையால் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஏதொரு நிதியத்தால் அல்லது ஆணையாளரினதும் பதிவாளரினதும் அங்கீகாரத்துடன் ஏதும் அரசாங்க அல்லது வர்த்தக வங்கியிலிருந்து கடனாகப் பெற்றுக் கொள்ளும் பணம் அல்லது பொருளைக் குறிக்கும்.

''ஒழுங்கு விதி'' என்பது இச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கருதுவது ஒழுங்கு விதிகளாகும்.

"பதிவாளர்" என்பது இச் சட்டத்தின் கீழ் மாகாண சபை கூட்டுறவுச் சங்க பதிவாளருடைய கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்படுபவரைக் குறிக்கும்.

"பதிவாளரின் செயலாற்றும் சபை" யாக தற்போது வட மத்திய மாகாணச் சபை கூட்டுறவு சங்க அபிவிருத்தி ஆணையாளரும் பதில் பதிவாளர்களும் உதவி பதிவாளர்களும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கொண்ட சபையாகும்.

"பதிவு செய்யப்பட்ட சங்கம்" என்பது இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாக கருதும் சங்கமாகும். இச் சட்டத்தில் செல்லுபடியாகக் கூடிய முறை பதிவு செய்யப்பட்ட சங்கமும் பதிவு செய்யப்பட்டதாக கருதும் சங்கமும் உட்படும்.

"அங்கத்தவர்" என்பது சங்கம் என்று பதிவு செய்வதற்காக சமூகமளிக்கும் ஆள் ஒருவர் பதிவு செய்யப்பட்ட பின் ஒழுங்கு விதிகள் துணைச் சட்டங்களின் படி அங்கத்தவராக சேர்த்துக் கொள்ளப்படும் ஆளும். அண்மிய அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் ஆளும் உட்படுவர்.

சொற்பிரயோகம் தொடர்பான பொருத்தப் பாடின்மை ஏற் படின் சிங்கள மொழிப்பதமே முதன்மை நிலை பெறும்.

76. இச் சாசனத்தில் பிரயோகிக்கப்பட்ட சொற்கள் தொடர்பாக தமிழ் அல்லது சிங்கள மொழிப் பிரயோகத்துக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படின் சிங்கள மொழிக்குரிய சொல்லே முதன்மை நிலையை பெறும்.

3- 371